உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 26 திங்கட்கிழமை (12.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 016



14
நெருப்புக் காய்ச்சலில் முதலிடம் யாழ்மாவட்டம்



23
ரஷ்யப் பிரதமர் ஆட்சிக்கு எதிராக பேரணிகள்



25
சபாநாயகர் வெற்றிக் கிண்ணம்

# அரசியல் தீர்வு, நல்லிணக்கக்குழு அறிக்கை குறித்து ஆஸி. எம்.பிக்கள் குழுவுடன் கூட்டமைப்பு பேச்சு

### இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களக்குடியேற்றம் தொடர்பிலும் நேற்றைய சந்திப்பில் எடுத்துரைப்பு

கொழும்பு, டிசெ.12

தமிழர் தாயகப் பிரதேசங்களில் அரங்கேற்றப்படும் சிங்களக் குடியேற்றம், இராணுவ ஆக்கிரமிப்பு உட்பட தமிழர்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவினரிடம் நேற்று தெளிவாக எடுத்துரைத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இனப்பிரச்சினை விவகாரம், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஆகியன தொடர்பில் தமது நிலைப்பாட்டையும் ஆஸி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவுப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நேற்று இரவு முக்கிய பேச்சு இடம்பெற்றது.

ஆஸ்திரேலிய தூதுவர் இல்லத்தில் நடைபெற்ற இந்த பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்

பக் 27

# வடக்கு, கிழக்கில் காணி அதிகாரத்தை கையாள்வதற்கு கூட்டு ஆணைக்குழு

### மத்திய அரசுக்கும், மாகாண சபைக்கும் சம அதிகாரம் வழங்க உத்தேசத் திட்டம்

கொழும்பு, டிசெம்பர் 12

ஒன்றிணையாத வடக்கு, கிழக்கில் காணி விவகாரங்களைக் கையாள்வதற்கான விசேட பொறிமுறையொன்றை வகுக்க அரசு உத்தேசித்துள்ளது.

இதனடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் காணி விடயங்களை மத்திய அரசும், மாகாண சபையும் கையாளும் வகையில் அதிகாரங்களுடனான கூட்டு ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற பேச்சின்போது, கூட்டமைப்பின் முக்கியமான மூன்று கோரிக்கைகளான காணி அதிகாரம், வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்தல் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பவற்றை ஏற்றுக்கொள்ள அரசு தரப்பு மறுத்துவிட்டது.

இந்த நிலையில், இது விடயம் குறித்து சட்டத்துறை நிபுணர்களுடன் ஆய்வு நடத்தியிருக்கும் அரசு, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதா, இல்லையா என்பது பற்றிய முடிவை எடுக்கும் பொறுப்பை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடமே விட்டுவிட முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேபோல், வடக்கு, கிழக்கு பிரிப்பை நீதிமன்றமே செய்துள்ளதால், அந்த விடயத்தையும் ஆராயாதிருக்கத் தீர்மானித்துள்ள அரசு, காணி விடயத்தை மட்டும்

பக் 27

## இலங்கைக் கடற்படை தாக்குதலில் தமிழக மீனவர் ஐவர் காயம்

கொழும்பு, டிசெ.12

கச்சதீவுக் கடல் அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் தமிழக மீனவர்கள் ஐவர் காயமடைந்துள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கி வருவது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. இதைத் தடுக்க மத்திய அரசு எந்த முயற்சியையும் எடுக்காமல் உள்ளது. இது குறித்து தமிழகத் தலைவர்கள் கேட்டால், நமது மீனவர்கள் எல்லை தாண்டிப் போவதால் தானே சுடுகிறார்கள்; அடிக்கிறார்கள் என்று பதிலளிக்கிறார் இந்தியப் பிரதமர்.

இந்த நிலையில்

பக் 27

## வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கு ஒரு போதும் இடமில்லை

### பொலிஸ், காணி அதிகாரங்கள் குறித்து தெரிவுக்குழு பரிசீலிக்கும் என்கிறார் வாசு

கொழும்பு, டிசெ.12

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பொலிஸ் - காணி அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு பரிசீலிக்கும். ஆனால், வடக்கு, கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கு ஒருபோதும் இங்கு இடமில்லை.

- இவ்வாறு தேசியமொழிகள் மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசால் நிராகரிக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொங்கி நிற்கின்றது. தமிழர்களின் ஏனைய பிரச்சினைகள் குறித்து கூட்டமைப்பு பேச முன்வரவேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர்கெஹலிய

பக் 27

## சிங்களத்தில் பாடல் இசைத்து மகிழ்வித்த முன்னாள் போராளிகள்

யாழ்ப்பாணம், டிசெ.12

முன்னாள் போராளிகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிங்களத்தில் பாடல்களைப் பாடினர்.

முன்னாள் போராளிகளை சமூகத்தில் இணைக்கும் நிகழ்விலேயே அவர்கள் 3 சிங்களப் பாடல்களைப் பாடினர்.

சிங்கள மொழியில் மூன்று பாடல்கள் பாடிய முன்னாள் புலிகள் தமிழ் மொழியிலும் ஒரு பாடல் பாடினர். இசைக்கருவிகளை இசைத்தவாறே பாடினார்கள். ''வாடா மாப்பிளை வாழைப்பழத் தோப்பிலே'' என்றபைலாத் தமிழ் சினிமாப் பாடலை அவர்கள் நயம்பட இசைத்தனர்.

முன்னாள் போராளி

பக் 27



புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 47 பேரை, அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. அமைச்சர் சந்திரசிறி கஜதீர முன்னாள் போராளி ஒருவரை அவரது மனைவியிடம் ஒப்படைக்கிறார். (ஒ-14)

## தலைவரைத் தெரிவுசெய்யும் அதிகாரம்கொண்ட ஐ.தே.க. செயற்குழுவை தம்வசப்படுத்த ரணில் - கரு தரப்புகள் கடும் பிரயத்தனம்

கொழும்பு, டிசெ.12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்யும் அதிகாரம்வாய்ந்த அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்களைத் தம்வசப் படுத்தும் நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்கவின் தரப்பும், கரு ஜயசூரியவின் தரப்பும் தனித்தனியாக ஈடுபட்டுள்ளன என்று ஐ.தே.க. வட்டாரம் தெரிவித்துள்ளது.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் இரு தரப்பும் தனித்தனியாகச் சந்தித்து இரகசியப் பேச்சுகளை நடத்திவருகின்றன என்று அறியமுடிகின்றது.

இதேவேளை, தற்போதைய செயற்குழுவைக் கலைத்து விட்டு புதிய செயற்குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசனைக்குழு இன்று

பக் 27

# முன்னாள் போராளிகள் 47 பேர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைப்பு

கொழும்பு, டிசெ.12

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மாலை இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வளிக்க எனக் கூறி தடுத்து வைக்கப்பட்டிருந்த 47 முன்னாள் போராளிகள் நேற்று அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர். அவர்களில் அனேகர் பெண்களாவர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடனும் நிகழ்வில் வழங்கப்பட்டது.

சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, அமைச்சின் உயரதிகாரிகள், புனர்வாழ்வு அதிகார சபையின் உயரதிகாரிகள், யாழ். மாவட்ட அரச அதிபர், மாவட்ட இராணுவ, கடற்படை உயர் அதிகாரிகள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த 12 ஆயிரத்துக்கும் அதிகமான முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தில், 11 ஆயிரம் பேர்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறு அதிகமாகவுள்ளது.

# இந்துமா கடலில் சீனாவின் செல்வாக்கு இந்தியாவுக்கு அச்சுறுத்தல் இல்லை!

## இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியா தெரிவிப்பு



இந்து சமுத்திரத்தில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்குக் காரணமாக இந்தியத் துணைக் கண்டத்திற்கு எந்தவொரு அச்சுறுத்தலும் ஏற்படாது - என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதன் மூலம் இந்திய துணைக் கண்டத்தில் உள்ள எந்தவொரு நாட்டுக்கும் அச்சுறுத்தல் ஏற்படாது. இது ஒரு பொய்யான நம்பிக்கையாகும் என்றும் அவர் அழுத்திக் கூறினார்.

இந்திய இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறும் இலங்கை இராணுவத்தினரின் அணிவகுப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவைப் பொறுத்தளவில், இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு அதிகரித்துக் காணப்படுகிறது எனவும், இவ்விரு நாட்டு இராணுவத்தினரும் இராணுவக் களப் பயிற்சி உள்ளடங்கலாக பல்வேறு விடயங்களில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வருகின்றனர் எனவும் இலங்கை இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் இந்திய இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்று 120 இலங்கை இராணுவ அதிகாரிகள் வெளியேறியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவிற்கான தற்போதைய தனது பயணத்தின்போது இந்திய இராணுவத்தின் முதன்மைத் தளபதி ஜெனரல் வி.கே. சிங்கைச் சந்தித்துக் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளார் எனவும் ஜகத் ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்டு விட்டனர் எனவும், ஆனால் இவ்வமைப்பின் ஆதரவாளர்கள் வேறு நாடுகளில் தற்போதும் எஞ்சியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டனர். ஆனால் அனைத்துலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும், இது இராணுவ ரீதியான அச்சுறுத்தலாக இருக்கமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின்போது தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதுடன் அவர்களது இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டது தொடர்பாக இலங்கை இராணுவத் தளபதியிடம் கேட்டபோது -

தற்போது இந்தச் சூழல் இயல்பு நிலைக்கு மாறிவிட்டது எனவும், மக்கள் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்துள்ளனர் எனவும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் அரசு பல்வேறு புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது எனவும் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ஒ-சி)

### அமைச்சர் - எம்.பிக்கள் கிரிக்கெட் போட்டி

## ஐ.தே.க மாற்றுக்குழு, ஐ.தே.மு. புறக்கணிப்பு கூட்டமைப்பின் சுமந்திரன் எம்.பி. பங்கேற்பு

கொழும்பு, டிசெ.12

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டியை ஐ.தே.க. மாற்றுக்குழுவினரும், ஜனநாயக தேசிய முன்னணியினரும் புறக்கணித்துள்ளனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தப் போட்டியில் விளையாடியுள்ளார்.

'சபாநாயகர் சவால்' கிண்ணத்துக்கான போட்டி நேற்று கொழும்பு டொரிங்டனில் நடைபெற்றது. அமைச்சர்கள் அணியினரும், நாடாளுமன்ற உறுப்பினர் கொண்ட அணியினரும் இந்தப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தினர்.

மிகவும் சுவாரஸ்யமான முறையில் இடம்பெற்ற இப்போட்டியால் ரசிகர்கள் மிகவும் பரவசமடைந்தனர். ஆனால், அரசியல் வட்டாரங்களில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கைக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த தலைவர் அர்ஜுனா ரணதுங்க கூட இப்போட்டியைப் புறக்கணித்துள்ளார். அத்துடன், ஐ.தே.க. மாற்றுக்குழுவினரும் போட்டியில் பங்குபற்றவில்லை.

அமைச்சர்கள் அணிக்கு சுசில் பிரேமஜயந்தவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணிக்கு சனத் ஜயசூரியவும் தலைமை வகித்தனர். (ஒ-சி)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

கொழும்பு, டிச. 12

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை (90,889 பேர்) 25.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் நவம்பர் வரையான பதினொரு மாதகாலப் பகுதியில் சுமார் 758,458 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 33.1 சதவீத அதிகரிப்பாகும். அதிகளவான சுற்றுலாப் பயணிகள் (281,484 பேர்) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தே வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஆண்டு முழுவதும் வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை (6 லட்சத்து 54 ஆயிரத்து 476 பேர்) இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சமன் செய்ததுடன், இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது. இது வரை 7 லட்சத்து 58,458 சுற்றுலா பயணிகளின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலில் குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

குருநகர்.டிசெ.12

வலித்தூண்டல் கடலில் நண்பர்களுடன் குளிப்பதற்குச் சென்ற இளைஞன் ஒருவர் கடற்சுழியில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை கித்தியம் புளியடியைச் சேர்ந்த தயாகரன் கீர்த்தனன் (வயது-19) என்பவரே இறந்தவராவார். இவர் தனது வீட்டிலிருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் நண்பர்களுடன் படம் பார்க்கச் செல்வதாகக் கூறிச்சென்றார். நண்பர்கள் நான்கு பேர் இவருடன் சேர்ந்து வலித்தூண்டல் கடலுக்குச் சென்றுள்ளனர். நண்பர்கள் உடுப்பு மாற்ற கரையில் நின்றபோது இவர் அவர்களை விட்டு விட்டுக் கடலில் இறங்கியதாகவும் கூறப்பட்டது.

கடலில் இறங்கிய நண்பனைக் காணவில்லை என்று கூறியதைடுத்து மூன்று மணித்தியாலங்களுக்குப் பின்னர் மீனவர்களால் இவரது சடலம் மீட்கப்பட்டது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் முற்பகல் 11 மணியளவில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ம-51)

# தமிழ் மக்களைப் பந்தாடும் அரசுடன் நாம் கிரிக்கெட் விளையாடலாமா?

## நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் ஆவேசம்

கொழும்பு, டிசெ.12

இலங்கை அரசு தமிழர்களின் வாழ்க்கையுடன் பல்வேறு கோணங்களில் விளையாடி வருகின்றது. இந்த இலட்சணத்தில் அவர்களுடன் இணைந்து நாம் கிரிக்கெட் விளையாடலாமா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

கிரிக்கெட் விளையாடுவதற்கோ அல்லது கால்பந்து விளையாடுவதற்கோ மக்கள் எம்மை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவில்லை. அதனைப் புரிந்து செயற்பட்டால் நல்லது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் நேற்று கிரிக்கெட் போட்டியொன்று நடைபெற்றது. இந்தப் போட்டியை ஐ.தே.க. மாற்றுக்குழுவினரும், ஜனநாயக தேசிய கூட்டமைப்பினரும் புறக்கணித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விளையாடினார். கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் ஏன் கலந்துகொள்ளவில்லை எனக் கேட்டபோதே அரியநேத்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றாதது குறித்து கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. ஆனால், சுமந்திரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் கலந்துகொண்டிருப்பார். - என்றார் அவர். (ஒ-சி)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்து ரையாடல் முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தலைமையில் செய லக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடப்படவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார் என முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர். (ம-23)

**செயலமர்வு**

யுனிசெப் அனுசரணையுடன் பிள்ளை நேயப் பாடசாலை கண்காணிப்புச் சட்டக வேலை தொடர்பான செயலமர்வு இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 4,5 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் குறிக்கப்பட்ட தினங் களில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-38)

**திட்டமிடல் கூட்டம்**

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/66 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கான கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் காலை 9.30 மணிக்கு ஈச்சமோட்டை வீதி மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய தொழில்துறை கூட்டமைப்பு ஜனாதிபதி மஹிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ.12

இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் 13 உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று இன்று திங்களன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் துணைத் தலைவர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன் தலைமையிலான பிரதிநிதிகள் குழு, இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு, அறிவு ஒத்துழைப்பு, தொழில்நுட்ப கூட்டு, உள்கட்டமைப்பு இணைப்பு மற்றும் சுற்றுலா பதவி உயர்வு தொடர்பான பிரச்சினைகள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளனர் என சி.ஐ.ஐ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

விவசாயம், நிதி சேவைகள், கட்டுமான மற்றும் சுகாதார ஆகிய துறைகளில் இலங்கையில் 2010-11 ஆண்டில் 4.5 பில்லியன் மற்றும் 2015 ஆம் ஆண்டில் 7 பில்லியன் லாபத்தைப் பெற்று இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக தொடர்பை வலுப்படுத்த இந்திய தொழில்துறை கூட்டமைப்பு எதிர்பார்த்துள்ளது.

மேலும் குறித்த குழு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியூதின் ஆகியோரையும் சந்திக்கவுள்ளது. (ஒ-சி)

# இலங்கை, இந்தியா, மாலைதீவுக்கான பயணிகள் கப்பல் சேவைக்கு ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 12

இலங்கை, மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையே பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கான ஆரம்பத்திட்ட அறிக்கை ஒன்று இலங்கையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பான சார்க் அமைப்பின் வழிகாட்டலின் கீழ், இந்தப் பயணிகள் கப்பல் சேவையை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தச் சேவைக்கு இலங்கையின் இணக்கப்பாடு கோரப்பட்டுள்ளது என வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் தெரிவித்துள்ளார்.கடந்த முறை சார்க் மாநாட்டின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் முன்னெடுக்கப்படுகின்ற பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையை சம்பந்தப்பட்ட நிறுவனம்இடைநிறுத்தநடவடிக்கை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் 3 கோரிக்கைகளையும் ஏற்றால் அது தனி ஈழத்தை தாரைவார்ப்பதற்குச் சமன்!

## சாடுகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, டிசெ.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள சர்ச்சைக்குரிய மூன்று அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு சம்மதிக்குமானால், தனி ஈழத்தை தாரைவார்த்துக் கொடுத்தது போலாகிவிடும்.

தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகத் திகழும் அந்தக் கோரிக்கைகளை அரசு உடன் நிராகரிக்கவேண்டும். கூட்டமைப்பு தொடர்ந்தும் அடம்பிடித்தால் பேச்சுமேசையிலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையில் இடம்பெற்றுவரும் பேச்சு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு இணைப்பு, பொலிஸ், காணி அதிகாரங்கள் ஆகிய சர்ச்சைக்குரிய கோரிக்கைகளிலேயே கூட்டமைப்பினர் தொங்கி நிற்கின்றனர்.

தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாகத் திகழும் இந்தக் கோரிக்கைகளை அரசு உடன் நிராகரிக்கவேண்டும்.

கோரிக்கைகளை நிறைவேற்ற முயன்றால் தனி ஈழத்தை தாமாகவே தாரைவார்த்துக் கொடுத்ததுபோலாகிவிடும்.

பேச்சுமேசையில் கூட்டமைப்பு அடம்பிடித்தால் அரசு தனது நிலைப்பாட்டை உறுதியாக அறிவிக்கவேண்டும். மூன்று கோரிக்கைகளை வழங்கவேமாட்டோம் என ஆணித்தரமாக எடுத்துரைக்கவேண்டும். அதுவே சாலச்சிறந்த விடயமாகும்.

அதனையும் மீறிச் செயற்பட்டால், அரசு உடனடியாக பேச்சு மேசையிலிருந்து வெளியேறி அத்துடன் பேச்சை முறித்துக் கொள்ளவேண்டும் - என்றார் அவர். (ஒ-சி)

# வாகனங்களுக்கு எமனாக இருக்கும் கேரதீவு - சங்குப்பிட்டி பிரதான வீதி

அக்கராயன், டிசெ.12

சங்குப்பிட்டி - கேரதீவு பாதையில் போக்குவரத்தில் ஈடுபடும் ஊர்திகள் வீதி குன்றும் குழியுமாக மாறியிருப்பதன் காரணமாக அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

வன்னேரிக்குளத்திலிருந்து அக்கராயன் பூநகரியின் 10 ஆம் கட்டை சந்தி வரை பெரும் குன்றும் குழியுமான வீதியில் பயணிக்க வேண்டியுள்ளது.

பூநகரி வாடியடிச் சந்தியிலிருந்து சங்குப்பிட்டிப் பாலம் வரையான 9 .5 கிலோ மீற்றர் நீளமான வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் எந்த ஊர்தியாவது புதையுண்டாலும் போக்குவரத்துத் தடைபடும் அபாயம் உள்ளது.

தனங்களப்புப் பகுதியில் வீதியின் நடுவே ஊர்திகள் புதையுண்டு சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் ஊர்திகள் தனங்களப்பு வரை குன்றும் குழியுமான பாதையில் மிகுந்த சிரமத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது.

மழை தொடர்ந்து பொழிந்து கொண்டிருப்பதன் காரணமாக வீதியைக் குறுக்கறுத்துப் பாயும் மழை வெள்ளம் பெரும் குழிகளில் தேங்கி நிற்பதால் போக்குவரத்தில் ஈடுபடும் ஊர்திகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. (க-410)

# முல்லை. கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் சாவு

முல்லைத்தீவு, டிசெ.12

முல்லைத்தீவுக் கடலில் குளிக்கச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த இதயரட்ணம் நிரஞ்சன் (வயது-19) என்ற இளைஞனே கடலில் மூழ்கி உயிரிழந்தவர் ஆவார்.

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற வேளையில் இந்தத் துயரச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சடலம் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-323-4)

# இரு சகோதரிகள், இளைஞர் உட்பட மூவர் வேம்பில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்பு!

## அனுராதபுரம் கடிகாவ கிராம மக்கள் அதிர்ச்சியில்!!

-உதயன் அனுராதபுரம் செய்தியாளர்-

அனுராதபுரம், டிசெ.12

எப்பாவள, கடிகாவ கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இரு பாடசாலை மாணவிகள் உள்ளிட்ட மூவர் உயரமான வேப்பமரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளனர் என்று எப்பாவள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் விஜய குமாரசிங்க தெரிவித்தார்.

மறுநாள் சனிக்கிழமை காலை பிரதேசவாசிகள் வழங்கிய தகவலை அடுத்து பொலிஸார் சுமார் 40 அடி உயரமான வேப்பமரத்தில் நைலோன் கயிறுகளில் தொங்கிய நிலையிலிருந்த சடலங்களை மீட்டனர். இந்தச் சம்பவம் அந்தக் கிராம மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

எப்பாவள மத்திய கல்லூரியில் கல்வி பயின்று வந்த ஆர்.எம்.தில்ஹானி குமாரி விக்கிரமதர்ன (வயது-17) அவரது சகோதரி ஆர்.எம்.கங்கானி இஸங்கா (வயது-15) மற்றும் இலங்கை கமாண்டோ படைப்பிரிவின் ருவன் பிரேம ஜயந்த (வயது-27) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.



மரணமான ருவன் பிரேம ஜயந்தவினால் இரு வருடங்களுக்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் தில்ஹானி குமாரியுடனான நீடித்த தொடர்பை யுவதியின் தாயார் எதிர்த்தமையே இந்த மரணங்களுக்குக் காரணம் என்று ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

எனினும் மாணவியர் இருவரும் 40 அடி உயரமான மரத்தில் ஏறித் தற்கொலை செய்து கொள்ள வாய்ப்பில்லை என்பதால் கொமாண்டோவான ருவன் சகோதரிகள் இருவரையும் கொலை செய்து மரத்தில் தொங்க விட்டிருக்கலாம் என்றும் அதன் பின்னர் தானும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு வந்த தம்புத்தேகம பதில் நீதிவான் லெங்கே பண்டார விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல்.வைத்தியரத்னவுக்கு உத்தரவு பிறப்பித்தார். விசாரணைகள் தொடர்கின்றன. (ஒ-ரி)

# தென்பகுதி வியாபாரிகள் படையெடுப்பு; ஏமாற்று வேலைகளில் இடைத்தரகர்

மன்னார், டிசெ.12

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் வியாபாரங்களை மேற்கொள்ளுவதற்காக நூற்றுக்கணக்கான தென்பகுதி வியாபாரிகள் மன்னார் வந்துள்ளனர்.

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக கடைகளை அமைத்து பண்டிகை வியாபாரங்களை மேற்கொள்வதற்கு மன்னார் நகர சபை உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட வரத்தகர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள இடங்களில் எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வரை வர்த்தகர்கள் வியாபாரம் செய்ய முடியும்.

குறித்த வியாபார நிலையங்கள் அமைப்பதற்காக மன்னார் நகர சபை வியாபாரிகளிடமிருந்து பெற்ற நில வாடகை மற்றும் நாள் வாடகைகள் மூலம் எதிர்வரும் வருடம் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நகரசபை மேற்கொள்ளவுள்ளது.

தொடர்ந்தும் பல வியாபாரிகள் இடம் கேட்கின்ற போதும் அதனை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை மன்னார் நகர சபையினால் பண்டிகைக்கால வியாபாரங்களுக்காக வழங்கப்பட்டு வரும் இடங்களை சில இடைத்தரகர்கள் குறைந்த விலைக்குப் பெற்று அதிகூடிய விலைக்கு வர்த்தகர்களுக்கு வழங்கி வருவதாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மற்றும் தென்பகுதி வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகர சபையால் 12 அடி நிலப்பரப்பு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்றது.

பண்டிகைக்காலம் முடியும் வரை 10 ஆயிரம் ரூபா நில வாடகையாக அறவிடப்படுகின்றது. இந்த நிலையில் உள்ளூர் இடைத்தரகர்கள் சிலர் குறித்த கடைகள் சிலவற்றை 10 ஆயிரம் ரூபாய் வீதம் மன்னார் நகர சபையிடம் பெற்று பின்னர் மன்னார் மற்றும் தென்பகுதி வியாபாரிகளுக்கு 20 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸுடன் தொடர்பு கொண்ட கேட்ட போது:

இது தொடர்பான முறைப்பாடுகள் எமது நகர சபைக்குக் கிடைத்துள்ளன. பாதிக்கப்படும் வர்த்தகர்கள் எம்மிடம் முறைப்பாடு தெரிவித்தால் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களின் கடைகள் உடன் பறிமுதல் செய்யப்படும். மனிதாபிமானமற்ற முறையில் செயற்படும் வர்த்தகர்களுக்கு மன்னார் நகர சபை இனிவரும் காலங்களில் எந்த வகையிலேனும் கடைகளை வழங்காது எனத் தெரிவித்தார். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கத்துக்கு மூவர் கொண்ட நிர்வாகக்குழு நியமனம்

கிளிநொச்சி,டிசெ.12

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு மூன்று பேர் கொண்ட நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் இந்த நியமனத்தை வழங்கினார்.

நிர்வாகக் குழுவின் தலைவராக செ.மார்க்கண்டுவும், உறுப்பினர்களாக க.கிருஷ்ணபிள்ளை, சோ.தாமோதரம்பிள்ளை ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தமது கடமைப் பொறுப்புக்களைக் கடந்த ஐந்தாம் திகதி ஏற்றுக் கொண்டனர்.

பச்சிலைப்பள்ளிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின் பதவிக் காலம் காலாவதியானதால் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இதனைக் கண்காணித்து வந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலா மூன்று பேர் கொண்ட நிர்வாகக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சங்கங்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (க-207)

## இளமையில் அதிர்ஷ்டம்...



எதிர்காலத் தேவைக்கு: செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையின் சேமிப்புத் திட்டத்தில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்ட சிறுமி ஒருவருக்குக் கிளை முகாமையாளர் பரிசில் வழங்குகின்றார். (6)

# பிரதேச செயலகத்தில் விசேட தேவை தொடர்பான நிகழ்வு

நெடுங்கேணி,டிசெ.12

விசேட தேவைக்கு உட்பட்டோர் தின விழாவும், விழிப்புணர்வு நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை நெடுங்கேணியில் நடைபெற்றுள்ளன.

முற்பகல் 10 மணியளவில் நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தில் சமூக சேவை உத்தியோகத்தர் த.தர்மேந்திரா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நெடுங்கேணிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சகல கிராமங்களையும் ஒருங்கிணைத்து 'இணையும் கரங்கள்' என்ற அமைப்பும் தெரிவு செய்யப்பட்டது.

இதன் தலைவராக விஞ்ஞானகுளத்தைச் சேர்ந்த சு.சுதர்சன் தெரிவானார். செயலாளராக குளவிசுட்டானைச் சேர்ந்த உ.சுபாசினியும், பொருளாளராக நைனாமடுவைச் சேர்ந்த செ.ஆனந்தராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 20 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் 20 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் நெடுங்கேணிப் பிரதேச செயலர் க.பரந்தாமன், உளநல ஆலோசகர் அம்பிகைபாலன், யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

மேலும் விசேட தேவையுடையோரின் வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலம் தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டதோடு ஊக்குவிப்புப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. (க-435)

# கண்ணிவெடி தொடர்பான கருத்தரங்கு

நெடுங்கேணி,டிசெ.12

நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் கண்ணிவெடி தொடர்பான கருத்தரங்கும், விழிப்புணர்வும் நடைபெற்றுள்ளன.

ஒக்ஸ்பாம் மற்றும் சேவாலங்கா நிறுவனங்கள் இணைந்து கடந்த வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் இதனை நடத்தியுள்ளன.

இதில் சேவாலங்கா நிறுவனத்தைச் சேர்ந்த உ.ஹரிபிரசாத், பி.ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுமார் 200 இற்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (க-435)

# நெடுங்கேணிப் பிரதேசத்திலும் கால்நடைகளின் அட்டகாசம்

நெடுங்கேணி,டிசெ.12



நெடுங்கேணி பிரதான கடைத்தொகுதியில் இரவு வேளையில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகளால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன.

இவை வீதிகளில் படுத்திருப்பதாலும் அங்குமிங்கும் அலைந்து திரிவதாலும் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களுக்கு ஆளாவதோடு விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன.

மேலும் வர்த்தக நிலையங்களின் முன் இவை இரவு வேளைகளில் தங்கி நின்று அசுத்தப்படுத்துகின்றன. இதனால் காலையில் தமது வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு வரும் வர்த்தகர்கள் பெரும் சிரமப்பட்டு இவற்றை அகற்ற வேண்டியுள்ளது.

இது தொடர்பாகப் பல முறை முறைப்பாடு தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனப் பாதிக்கப்பட்டு வருபவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-435)

# போக்குவரத்தில் பல்வேறு இடர்களை எதிர்கொள்ளும் வன்னிப் பிரதேசங்களில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள்





வன்னியில் உள்ள மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அல்லற்படுகின்ற நிலைமை தொடர்கின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பின் தங்கிய கிராமங்களுக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லாத நிலை காணப்படுவதால் அவர்களின் நிலை மோசமாகக் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, மாரியாமுனை, புளியமுனை போன்ற பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்குப் போதிய அடிப்படை வசதிகள் எவையும் அந்தச் சூழலில் இல்லை. மருத்துவ வசதி, மேலதிக கல்வி வசதி, சந்தை வசதி என்பன இந்தப் பகுதிகளில் இல்லை. இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்வதாயின் சுமார் 36 கிலோ மீற்றர் தூரம்வரை பயணம் செய்து முல்லைத்தீவு நகருக்கோ, அல்லது முள்ளியவளைக்கோ சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஆனால் இந்தப் பகுதியினுள்ள வீதிகள் இன்னமும் புனரமைக்கப்படாத காரணத்தால் போக்குவரத்து வசதிகள் சீராக இடம்பெறுவதில்லை. இதனால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று ஏ-9 வீதியின் கொக்காவில் சந்தியில் இருந்து மல்லாவி வரை செல்லும் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, மருதன்குளம், ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் போன்ற கிராமங்களூடாக செல்லும் வீதியும் புனரமைக்கப்படாமல் ஒரு மாட்டுவண்டில் கூடப் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதால் இந்தக் கிராமங்களில் வாழும் சுமார் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் சிரமப்படுகின்றனர்.

கடந்த மாதம் மேற்படி கிராமத்தில் பாம்புக்கடிக்கு இலக்கான ஒருவரை இரவுவேளையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு என்றுமில்லாதவாறு அவரது உறவினர்கள் சிரமப்பட்டு அவரை மல்லாவி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இதேபோன்று கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கர்ப்பிணித்தாய் ஒருவரைப் பல்வேறு சிரமங்களின் மத்தியில் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற போது இடையில் பிரசவம் இடம்பெற்றுள்ளது. இதேபோன்று பகல்வேளை தனது தேவைகளை நிறைவேற்றச் சென்று இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒருவர் காட்டு யானையால் தாக்கப்பட்டுள்ளார். இவ்வாறு இந்தப் பகுதி மக்கள் என்றுமில்லாதவாறு பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனைவிட இங்குள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் ஆரம்பக் கல்வியைப் பெற்று உயர் கல்வியை பெறும் பொருட்டு மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. போக்குவரத்து வசதி, தங்குமிட வசதிகள் இன்றிப் பாடசாலைக் கல்வியை இடை விலகும் மாணவர்களின் தொகை மேற்படிக் கிராமங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறான பின்தங்கிய கிராமங்கள் அரசியல் வாதிகளின் கண்களுக்குத் தெரிவதில்லை.

இதேபோன்று முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் மூன்று முறிப்பு, கொம்புவைத்தகுளம், இளமருதன்குளம், வீரப்பிராயர்குளம், பனங்காமம், போன்ற கிராமங்களில் வாழும் மக்களும் மேற்படி பிரச்சினைகளையே தினமும் எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் கடந்த முதலாம் திகதி மட்டும் போக்குவரத்தில் இடம்பெற்ற இடர்பாடு பின்வருமாறு அமைகின்றது.

முழங்காவில் பகுதியில் இருந்து காலை 6 மணி, 7.30 மணி, 9.30 மணி எனப் பேருந்துகள் கிளிநொச்சிக்குச் சேவையில் உள்ளன.

அன்றைய தினம் 6 மணிக்குப் புறப்படும் பேருந்தில் அவசர தேவையுடையவர்கள் தமது பயணத்தை மேற்கொண்டிருந்தவேளை முழங்காவில் பகுதியில் இருந்து கிளிநொச்சிக்கு வரும் வீதியின் வன்னேரிக்குளம் பகுதியில் இரு இடங்களில் மழை நீர் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்து கொண்டிருந்ததால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர்.

மேலும் பேருந்து வீதியில் புதையுண்டமையால் நண்பகல் 12 மணி வரை சென்ற பேருந்துகள் எவையும் செல்ல முடியாது இருந்ததால் ஜெயபுரத்துக்கும் வன்னேரிக்குளத்துக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் சுமார் நான்கு மணித்தியாலயங்களுக்கும் மேலாகப் பயணிகள் சிரமப்பட்டனர். இந்த நிலையே வன்னியில் பல இடங்களிலும் தொடர்கின்றது.

சு.பாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்.நகரில் நிகழ்ந்த நியாயமான எழுச்சி

மனித உரிமைகள் என்றால், ரூபாய்க்கு எத்தனை என்று கேட்கும் நிலை, மிக வீச்சான வேகத்தில் இலங்கையில் வளர்ந்து வருகின்றது. பல வருடங்களுக்கு முன்னர், நீதிமன்றங்களோடு சம்பந்தப்பட்டவை என்று கருதும் அளவுக்கு, நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாகவே மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுவந்தன.

இப்போது, அரசாங்கமே பலப்பல வகைகளில் மிகப் பெரும் வடிவங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதான குற்றச்சாட்டுகள் சர்வதேச மட்டத்தில் பெருகி வருகின்றன.

அவற்றில் பெரியளவிலானதும், உலக நாடுகளையும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளையும் உலுக்கி வருவது 2009 ஆம் ஆண்டில், இறுதிப் போரின்போது, அரசு தரப்பினால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் என்ற குற்றச்சாட்டே.

அதன் உள்நுழைந்து பார்த்தால், போரின்போது அரச தரப்பு, வல்லாண்மையுடன் மனித உரிமைகளை மீறிப் பெரும் எண்ணிக்கையான தமிழ்ப் பொதுமக்களைக் கொன்று குவித்தது என்பதாகும்.

அதன்பின்னராவது, நாட்டின் மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா, அவற்றைப் பேணுவதற்குரிய ஏற்பாடுகள், நடவடிக்கைகள் அக்கறையுடன் மேற்கொள்ளப்படுகின்றனவா என்றால், பல சந்தர்ப்பங்களில், பதில் எதிர்முகமாகவே காணப்படுகின்றது.

இதற்கு உகந்த உதாரணமாக, யாழ்ப்பாண நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்கள் அமைகின்றன. காணாமற்போன, காணாமற் போகச் செய்யப்பட்டதாகக் கருதப்படும் தமது பிள்ளைகளின், கணவர்மாரின், பேரன்மாரின் பெயர் விவரங்களை வெளியிடக்கோரியும், அவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறும் கோரி யாழ்.நகரில் அகிம்சை முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குப் பெரும் குந்தகம் உண்டாக்கும் முனைப்புக் காண்பிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பில் இருந்து வந்தவர்கள் உரிய இடத்தை, உரிய நேரத்தில் வந்து சேர முடியாதவாறு தடங்கல் செய்யப்பட்டது.

தமது இதயங்களில் குமைந்து கிடக்கும் துன்பங்களையும் மன உளைச்சல்களையும் வெளியே கொட்டித் தீர்க்கும் மக்களுக்குள்ள சுதந்திரத்தைத் தானும் இல்லாமற் செய்ய முயற்சிக்கப்பட்டது. அமைதியான ஆர்ப்பாட்ட வடிவத்தில், யாழ்.பஸ் நிலையத்தில் வைத்து தங்கள் மனநிலையை, கஷ்டங்களை வெளிப்படுத்தும் உரிமை முதலில் மறுக்கப்பட்டது.

ஆனால் மக்கள் தமது மனத்துயரை, தமது உறவுகளுக்கு நேர்ந்த கதியை, எச்சரிக்கைக்கு மத்தியிலும் துணிச்சலுடன் வெளிப்படுத்தினர். பெரும் வாக்குவாதங்கள், வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்ற போதிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதாவது மக்கள் தமது மனத்தாக்கத்தை வெளியிடும் உரிமையைத் தடுப் பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியை முறியடித்தனர் என்பதே பொருத்தம்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று, மக்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்தை அடக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி, அரசாங்கம் மனித உரிமைகளை எந்த இலட்சணத்தில் கீழிறக்கிப் பார்க்கிறது என்பதனை பிரதிபலிக்கிறது; வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இச்சந்தர்ப்பத்தில்-

மனித உரிமைகளுக்கான எமது கடப்பாடும் அர்ப்பணிப்பும் ஒருபோதும் இரண்டாம் பட்சமானது இல்லை. அந்த உணர்வுடன் அமைதியானதும் அர்ப்பணிப்பு மிக்கதுமான, சமத்துவத்தைக் கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் - என்று இவ்வருடம் செப்ரெம்பர் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பதினெட்டாவது கூட்டத் தொடரில் பேசிய மனித உரிமைகளுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் மஹிந்த சமரசிங்க கூறியது நினைவுக்கு வருகின்றது.

அந்தக் கூட்டத் தொடருக்குத் தலைமை வகிந்த ஆணையாளர் நவநீதம்பிள்ளை-

இலங்கை கடந்த முப்பது வருடங்களாகப் பயங்கரவாதத்தின் கொடுமையான விளைவுகளை அனுபவித்தது மட்டுமன்றி, அங்கு மாறி மாறிப் பதவிக்கு வந்த அரசுகள், சட்டத்தின் ஆட்சியையும், மனித உரிமைகளையும் சுயாதீன அமைப்புகளையும் காலால் மிதித்து நசுக்கி வந்துள்ளன- என்று அர்த்தபுஷ்டியுடன் கூறியதை இங்கே சேர்த்துப் பார்ப்பது பொருத்தம்.

தமது உறவுகளை நீண்டகாலமாகக் காணாமற்போனவர்களாக நினைத்து நெஞ்சுருகும் மக்கள், அரசின் மறைமுகமான நோக்கத்தைப் புரிந்துகொண்டு தமது வேட்கையை துணிச்சலுடன் வெளிப்படுத்தி உள்ளனர்.

சட்டம் அல்லது ஒழுங்கு என்ற பெயர்ப்பலகையுடன் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் புரட்டுவதற்கு அவர்கள் இடம்கொடுக்க மாட்டார்கள் என்பதனை, அந்த நிகழ்வு கொடி அசைத்துக் காட்டி உள்ளது. யாழ்ப்பாணத்தில் (வடக்கு) நடைபெற்றது கொழும்புக்கும் (தெற்குக்கும்) பரவலாம் என்று அரசபீடம் எண்ணலாம். எதிர் நடவடிக்கைகளை நாடலாம்; அல்லது கண்டுபிடிக்கக்கூடும்.

எப்படியோ, மக்கள் ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில், அதன் ஏற்ற இறக்கங்களையும், நன்மை தீமைகளையும், சாதக பாதகங்களையும் அவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டுமே நிர்ணயிக்க முடியும் ஏதுநிலை நிரந்தரமற்றது.

மக்களின் உரிமைகளையும், நலன்களையும், தேவைகளையும் கருத்தில் கொள்ளாத ஆட்சி, ஜனநாயகம் என்ற கட்டுக்கோப்புக்குள், அதன்பாற்பட்ட சித்தாந்தத்துக்குள் அமைவது ஏற்புடையதும் அல்ல; நீண்ட காலத்துக்குச் சாத்தியமும் அல்ல என்பதே உலகின் அனுபவம்.

# தலைமைப் பதவிக்கு போட்டா போட்டி ஐ.தே.கவுக்குள் பகிரங்க மோதல்

**நேற்று 11-12-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துக்கான உட்கட்சிப் போராட்டம் கடந்த வாரம் தீவிரமடைந்திருக்க காணப்பட்டது. இந்தக் குளறுபடிகளுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் மீது எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி நடத்தவேண்டிய போராட்டம் பலமிழந்துபோய்க் கொண்டிருக்கிறது. கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் மோகன்லால் கிரேறோவைத் தன் பக்கம் அரசு இழுத்துக்கொண்டதன் பிறகும் அந்தக் கட்சி பாடம் படித்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

நான்கு மாதங்களுக்கு முன்னர் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியாவை கட்சித்தலைமையை ஏற்று நடத்துமாறு ஹோட்டல் ரேணுகாவில் இடம் பெற்ற ஒரு நிகழ்வில் இன்னொரு பிரதித் தலைவரான சஜித் பிரேமதாசா கேட்டுக் கொண்டிருந்தார்.

ஐ.தே.கட்சி அமைப்பு விதிகளின் கீழ் அப்படியான ஒரு பதவியை எவருக்கும் வழங்கக் கூடிய அதிகாரம் பிரேமதாசாவுக்கு இல்லாது போனாலும் அந்த விடயம் சர்ச்சைகளை உருவாக்கத் தவறவில்லை பொதுமக்கள் கவனத்தையும் வெகுவாக ஈர்த்திருந்தது.

அப்போது லண்டனிலிருந்த கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆத்திரத்துக் குள்ளாகி அவசரமாக நாடு திரும்பினார். அதன்பிறகு ஜய சூரிய மீது அழுத்தங்கள் அதி கரிக்கலாயின. ஜயசூரிய வெளி யிட்டிருந்த மிகக்கவனமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் தலைவராகப் பொறுப்பேற் கும்படி கட்சிக்குள்ளிருந்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்திருந்தமை உண்மைதான் என்று குறிப்பிட்டிருந்ததுடன் பின் வாங்கிக்கொண்டார்.

இரண்டு அடி முன்வைத்தால் மூன்றடி பின்வாங்கி விட்டார் அவர். அதன் பின்னர் ஜய சூரிய தரப்பினருக்கும் பிரேமதாசா பிரிவினருக்குமிடையில் முரண்பாடுகள் முற்றிவருவது தெரியவந்தது.

கடந்த மாதம் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்காவை தமக்குப் பதிலாக பணியாற்ற ரணில் விக்கிரமசிங்கா நியமித்தபோது ஜயசூரியாவுக்கு மேலும் ஒரு பலமான அடிவிழுந்தது. சர்வதேச ஜனநாயக யூனியன் மகாநாட்டில் கலந்துகொள்ள ரணில் புறப்பட்டுச் சென்றார். அது கன்னத்தில் விழுந்த பெரிய அறையாக இருந்தபோதிலும் மேலும் பல அவமானங்கள் கட்சியில் காத்திருந்ததாக ஜய சூரிய தமது சகாக்களிடம் கூறியிருந்தார்.

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் முதல் நாள் உரை நிகழ்த்த தமக்கு சந்தர்ப்பம் வழங்கப் படவில்லை, நேரமும் வெட்டிக் குறைக்கபட்டிருந்தது என்று கூறியுள்ளார் அவர். அமரதுங்க தம்மை மோசமாக நடத்துகிறார் என்று குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அமரதுங்க அவருக்கு வழங்கப்பட்ட நேரம் முழுவதும் அவர் கேட்டுக் கொண்டபடியே வழங்கப்பட் டது என்றார். குறிக் கப்பட்ட நேரம் தான் எமக்கிருந்தது. அனைவருக்கும் பகிர்ந்து வழங்கப்பட வேண்டியிருந்தது தலைமைத்து வத்துக்கும் அதற்கும் எதுவிதத் தொடர்புமில்லை என்றார் அவர். பொதுவில் ஜயசூரிய பெரும்பாலும் சபை

## களத்தில் குதித்துள்ளனர் முக்கிய தலைவர்கள்

யில் இருப்பதில்லை என்றார்.

எதுவானாலும் இரண்டாவது நிலையில் செயற்பட்டு வந்துள்ள ஜயசூரிய இப்போது அமரதுங்காவுக்கு அடுத்த நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார் என்பது தெளிவாகின்றது.

இப்பொழுது ஜயசூரியா பிரரேமதாசா தரப்புக்களுக்கிடையில் புதிய இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது. திரைக்குப் பின்னால் நடந்தேறியுள்ள பல விடயங்களுக்கு கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

மீண்டும் ஜயசூரியாவை தலைமைப் பதவியை ஏற்று நடத்துமாறு பிரேமதாசா அவரை கேட்டுக்கொள் வது என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இது கடந்த ஜூலையில் நடந்தேறியுள்ள நாடகத்தின் மீள் மேடையேற்றமே. ஆனால் இந்த முறை ஜயசூரியா பின் வாங்கமாட்டார் என்பதே உறுதிமொழி. ஜயசூரியா தமது தகுதி மற்றும் கட்சியின் செயற்பாடுகள் தலைமைத்துவப் போட்டிகள் பற்றியெல்லாம் நீண்ட அறிக்கைகள் விடுத்துள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க தமது சார்பில் நாடாளுமன்றில் செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜோன் அமரதுங்க தம் தரப்பின் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதில் கூறியிருப்பதாவது:

**ஜயசூரியாவுக்கு தார்மீகத் தகுதியில்லை**

கரு ஜெயசூரிய 16 உறுப்பினர்களுடன் அரசு பக்கம் கட்சி மாறியதன் பின்னர் ஐ.தே.கவின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவதற்கான தார்மிகத் தகுதியை இழந்துவிட்டார். ஒரு சிரேஷ்ட உறுப்பினர் என்ற முறையில் - ஜயசூரியாவை விட அதிக தகுதிகள் எனக்கு இருந்த போதிலும் குறுக்குவழிகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. தலைமைத்துவம் மாற வேண்டும் இளைஞர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இப்போது கட்சித் தலைமைக்கு மிகவும் பொருத்த மான மனிதர் ரணில் விக்கிரமசிங்காவே. மக்கள் விரும்பாதவிடத்தில் கட்சி தோல்வியுற்றுவிடும். 1977 இல் அரசுக்கு எதிராக மக்கள் செயற்பட்டார்கள். கட்சி செல்வாக்கை இழந்தது. ஒரு அரசு செல்வாக்கை இழக்கும் வரை அதனை தோற்கடிக்க முடியாது. இந்த அரசு இன்னமும் செல்வாக்கை இழக்கவில்லை. ஏனென்றால் இராணுவ வெற்றியில் அவர்கள் தங்கியுள்ளார்கள். அந்த செல்வாக்கு இன்னமும் நிலைத்து இருக்கின்றது. கட்சிக்குள் இருப்பவர்களே கட்சிக்கு எதிராக செயற்படுவார்களானால் கட்சி வெற்றி பெறுவதை எதிர்பார்க்க முடியாது. காமினி திஸநாயக்க, லலித் அத்துலத் முதலி, ஜி.எம். பிரரேமச்சந்திர முதலியவர்கள் புதிய கட்சி ஆரம்பித்து ஐ.தே.கவை முதல் தடவையாக நாசமாக்கினார் கள் 2007 இல் கருஜெய சூரிய 16 உறுப்பினர்களுடன் அரசுடன் சேர்ந்துகொண்டு கட்சியை இரண்டாம் முறையாக நாசம் செய்தார். அரசை தோற்கடிப்பதற்கு கிடைத்திருந்த நல்ல தொருதருணம் ஜயசூரியாவால் இழக்கப்பட்டது.

ஜயசூரியா மீண்டும் வெறுங்கையுடன் கட்சிக்குத் திரும்பிவர விரும்பியபோது பெரும்பாலான சிரேஷ்ட தலைவர்கள் அதனை விரும்ப வில்லை. அந்தச் சமயத்தில் தலையிட்டு அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக் கப்படாமல் தடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் பிரதித் தலைவர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு வழக்கப்பட்ட உதவியை மறந்துவிட்டு இன்று தலைமைப் பதவிக்கு போட்டியிடத் துணிகிறார்.

மீண்டும் கட்சியில் இணைந்து கொண்டபோது கட்சிக்குமாறாக இனி ஒரு போதும் செயற்பட மாட்டேன் என்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதி வழங்கியிருந்தார். 1960 இல் நான் கட்சிக்கு வந்தேன் 1985 இல் கூட தலைமைப் பதவிக்கு போட்டியிட எனக்கு கட்சி அனுமதி வழங்கவில்லை. ஆனால் நான் கட்சியை விட்டுவிலகி ஓடவில்லை. தலைமையின் தீர்மானத்தை நான் மதித்து நடந்து கொண்டேன்.

அமரதுங்காவின் இந்த அறிக்

(26ஆம் பக்கம் பார்க்க)

**தொகுப்பு: கோகுலன்**

**நாளை**

**கார்த்திகை 27, செவ்வாய்க்கிழமை 13.12.2011**

திதி: திருதியை மு.இ. 9.57 வரை

நட்சத்திரம் - புனர்பூசம் மு.இ. 10.22 வரை

பூரணை விரதம்

சுபநேரம்: 10.50 - 12.20 வரை, ராகு காலம்: 3.20 - 4.50 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய நிகழ்வுகளில் ஒலிபெருக்கி பாவனை சத்தத்தை மட்டுப்படுத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.12

ஆலய நிகழ்வுகளில் ஒலி பெருக்கி பாவனை செய்யும் போது அதன் சத்தத்தை மட்டுப் படுத்துமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச எல்லைக் குட்பட்ட ஆலயங்களின் நிர் வாகிகளுக்கு ஒலி பெருக்கி பாவனையைக் கட்டுப்படுத் தல் தொடர்பான கலந்துரை யாடல் ஒன்று சபை மண்டபத் தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலை மையில் இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் பொதுவாக ஆலயங்களில் நடை பெறும் எந்த நிகழ்விலும் ஒலி பெருக்கியின் சத்தத்தை மட் டுப்படுத்துதல் குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முக்கிய மகோற்சவ காலங்க ளில் பொதுமக்களுக்கு இடை யூறு இல்லாத வகையில் ஒலி பெருக்கியைப் பாவித்தல், ஏனைய ஆலய நிகழ்வுகளின் போது ஆலயத்துக்குள் ஒலிபெருக்கி மூலம் அமைதியான முறை யில் ஒலிபரப்பப்பட வேண் டும் என்ற தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தீர்மானங்களுக்கு ஆலய நிர்வாகிகள் கட்டுப்பட வேண்டும் என்றும் இவற்றைப் பின்பற்றாதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயங்களில் அதிக சத்தத் துடன் ஒலிபெருக்கிகளை ஒலிக் கச் செய்வதால் பொதுமக்க ளும், நோயாளிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள் கின்றனர்.

ஆலய **திருவிழாக்காலங்க** ளில் தொடர்ச்சியாக ஒலிபெருக் கிகளை **ஒலிக்கச்** செய்வதால் பலரும் **மன உளைச்சலுக்கு** உட்படுத்தப்படுகின்றனர்.

இது **தொடர்பாக** முறைப் பாடுகள் **தொடர்ச்சியாக** நல் லூர் பிரதேச சபையிடம் மக்கள் முறைப்பாடுகள் கிடைத்துள்ள தால் ஆலய நிர்வாகிகளுக்கு இந்தக் **கலந்துரையாடலை** ஒழுங்குசெய்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என நல்லூர் பிரதேசசபை தலைவர் ப.வசந்த குமார் **மேலும்** தெரிவித்தார்.

இந்தத் **தீர்மானங்களை** அனைத்து ஆலய நிர்வாகி களும் **ஏற்றுள்ளனர்.** என்றும் **தெரிவித்தார்.**

(ம-311)

# விறகுவெட்ட வருவோரால் வரணி மக்கள் அச்சத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.12

வரணிப் பிரதேசத்தில் வேறு இடங்களில் இருந்து வரும் விறகுதாரிகள் பெரும் அட்ட காசம் செய்து வருவதாக அந் தப் பகுதி மக்கள் தெரிவிக்கின் றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்துவரும் குறிப்பிட்ட இளை ஞர் குழுவினர் இப் பகுதிகளில் விறகுகளை வெட்டி வருகின் றனர். ஆள்கள் இல்லாத காணி களில் இவர்கள் தமது கைவரி சைகளைக் காட்டி வருவதாகச் சுட்டிக காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பாக உள்ள காணி களில் உள்ள விறகுகளையும் இவர் கள் திருடி வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பசுமையான மரங்களைக் கூடத் தறித்து அவற்றை விற குக்காக எடுத்துச் செல்வதாக வும் இப்பகுதி மககள் தெரிவிக் கின்றனர்.

இவர்கள் கத்தி, கோடரி களுடன் வருகை தந்து மக்க ளைப் பயமுறுத்தும் பாணியில் நடந்து கொள்வதால் பொதுமக் கள் இதுபற்றித் தட்டிக் கேட்க அச்சமடைகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலிக்குப் போடப்பட்ட எல் லைக் கதியால்களைக் கூட இவர் கள் விட்டு வைப்பதில்லை. தட்டிக் கேட்டால் பயமுறுத் தும் பாணியில் நடந்து தமது வேலையை கச்சிதமாக நிறை வேற்றுகின்றனர் என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. தட்டிக் கேட்ட ஒருவரை, எங்கள் பகுதிக்கு வருவீர்தானே அப்போது பார்த் துக் கொள்கிறேன் என பயமுறுத் திய சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

கிராமங்கள் தோறும் விழிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் இந்த விடயத் தில் எவரும் அக்கறை எடுத்துச் செயற்படவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம- 122)

# வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவருக்கு கற்றல் உபகரணம்

வரணி,டிசெ.12

வரணி கரம்பைக் குறிச்சி மேற் கில் கடந்த வாரம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள பாடசாலை மாணவர்கள் 370 பேருக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங் கப்பட்டன.

கரம்பைக் குறிச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சமூக முன்னெடுப்பு குழுவின் ஊடாக வரணி மகா வித்தியால யம், கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலை, கரம்பைக் குறிச்சி பாலர் பாடசாலை ஆகியவற் றைச் சேர்ந்த மாணவர்களுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டன.

யூ.ஆர். நண்பர்கள் அமைப் பின் தலைவர் கே.செவ்வேள் இந்த வைபவத்தில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

இந்த அமைப்பின் தலைவர் ஆ.சுதாகர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச பிரமுகர்கள் கலந்து கொண்டு பங்களிப்பு நல்கினர்.

பிள்ளைகளின் கணினிஅறிவை மேம்படுத்துவதற்காக மூன்று கணினிகளை கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலைக்கும் கிராம முன்னேற்றச் சங்கம் சார்பில் சமூக முன்னெடுப்புக் குழுவுக்கு 2 கணி னிகளையும் வழங்கு வதாகக் கூறியதுடன் மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிக்க தமது நிறுவனம் வழங்கும் எனவும் இந்த நிகழ்வில் உறு தியளிக்கப்பட்டது. (ம- 122)



சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற தேசிய வசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வில் மிருசுவில் பொது நூலக அபிவிருத்திச் சபையின் தலைவர் சிற்றம்பலம் துரைராஜா மங்கள விளக்கேற்றுகிறார். (ம)

# கேபிள் இணைப்பு விஸ்தரிப்பு

நாவற்குழி,டிசெ.12

ரெலிக்கொம் தனது கேபிள் இணைப்புச் சேவைகளைக் கைதடி பிரதேசத்துக்கு விரிவாக் கும் பணியை துரிதமாகச் செய்து வருகின்றது. கைதடிச் சந்தியிலி ருந்து மானிப்பாய் வீதி முழுவ துக்குமான தொலைபேசித் தூண் கள் நடப்பட்டுள்ளன. கைதடி வடக்கு குவாரி வீதி, கைதடி தெற்கு கிழக்கு, மேற்கு வீதிகளில் தூண் கள் நடுவதற்கான கிடங்குகள் வெட்டப்பட்டு வருகின்றன.

சில இடங்களில் தூண்கள் நடப்பட்டும் வருகின்றன. இணைய தொலைக்காட்சி வசதிகளைக் கொண்டதாக நவீன கேபிள் இணைப் புகளுக்காக விண்ணப்பித்தோ ருக்கு மிக விரைவில் வழங்கப் படுமென ரெலிக்கொம் வட்டாரங் கள் தெரிவித்தன. (ம-121)

# வீடுகளுக்குள் முடங்கியது ‘49’

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ்ப்பாணத்தில் 49 சிசி மோட்டார் சைக்கிள் வீடுகளில் முடங்கியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

வீதிகளில் அதன் நடமாட் டம் மிகக் குறைந்தும் காணப் படுகின்றது.

இந்த சிறியரக மோட்டார் சைக்கிள்களில் அநேகமான பதிவுகள் மற்றும் சாரதி அனு மதிப் பத்திரம் போன்ற ஆவ ணங்கள் இன்றி செலுத்திய பலர் பொலிஸாரிடம் சிக் கிக்கொண்டனர்.

போக்குவரத்து பொலிஸா ரின் திறன் பரிசோதனைக்குள் சிக்கிக்கொண்ட இந்த மோட் டார் சைக்கிளை செலுத்திய நூற்றுக் கணக்கானோர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத் தப்பட்டனர்.

பொலிஸாரின் இந்த திறன் சோதனை நடவடிக்கையில் 49 சிசி மோட்டார் சைக்கிள்களை சிலர் வீடுகளுக்குள் பூட்டியும் வைத்திருப்தாக தெரிவிக்கப் பட்டது. (ம-26)

# ஆட்டுத் திருட்டில் ஈடுபட்டோர் மாட்டிக் கொண்டனர்

**வலி.** வடக்கு டிசெ. 12

யாழ்ப்**பாணத்**தில் ஆட்டுத் திருட்டில் ஈடுபட்டு வந்தார்கள் என்ற **சந்தேகத்தின்** பேரில் இரு இளைஞர்**களைப்** பிடித்த பொது மக்கள் **அவர்களை** யாழ்ப்பாணம் பொலிஸ் **நிலையத்**தில் ஒப்ப டைத்து**ள்ளனர்.**

கடந்த **பல** மாதங்களாக யாழ். **நகரத்தில்** பொதுமக்க ளால் மேய **விடப்**படும் ஆடுகள் பல தொட**ர்ந்து காணா**மல் போ யுள்ளன. **இதனை**யிட்டு பொது மக்கள் பல**ரும்** பெரும் கவலை அடைந்து **வந்**தனர். இந்தத் திருட்டு நடவடிக்கைகளில் ஈடு படுவோர் குறித்து தகவல் தெரி யாத நிலையில் இவர்கள் மிகுந்த விசனம் அடைந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த சில நாள்களாக குறிப்பிட்ட இருவரும் இந்த நடவடிக்கை யில் ஈடுபட்டதை இளைஞர் குழு கண்டுள்ளது. இதனையடுத்து அவர்களைகையும் மெய்யுமாக பிடிக்க வேண்டும் என்ற முனைப் புடன் இருந்துள்ளனர்.

இந்த நிலமையில் கடந்த வெள்ளிக்கிழமை பகல் குறிப் பிட்ட இளைஞர்கள் வீதியில் நின்ற ஆட்டை பிடிக்க முற்பட்ட வேளையில் ஏற்கனவே திட்ட மிட்டமைக்கு அமைவாக குறிப் பிட்ட சந்தேக நபர்களை ஏனைய இளைஞர்கள் பிடித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்த இடத்தில் பொது மக்கள் கூடிய நிலையில் குறிப்பிட்ட இருவரும் தாம் பணத்தைத் தருவதாகக் கூறி தப்பிச்செல்ல முயன்றுள் ளனர். இதற்கு மறுப்புத் தெரி வித்த மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். அங்கு வந்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். (ம-86)

# ரொக்க வியாபாரத்தில் முன்னிலையில் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.12

2010 ஆம் ஆண்டு நடை பெற்ற ரொக்க வியாபாரத்தில் குடாநாட்டிலேயே அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங் கம் முதலாம் நிலையில் உள்ள தாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவ லக அதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

குடாநாட்டில் உள்ள 24 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங் களில் இந்தச் சங்கமே ரொக்க வியாபாரத்தில் அதிக விற் பனையை மேற்கொண்டு சாதனை ஈட்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிறந்த வியாபார சங்கமாக இருந்துவரும் இந்தச் சங்கத்தில் பணிப்பாளர்கள் அயராத சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுவதாலேயே இந்தச் சங்கம் அதிக வருமானத்தைக் கடந்த ஆண்டில் பெற்றுள் ளது என்று அந்த அதிகாரி மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதேபோன்று ஏனைய சங் கங்களும் தமது செயற்பாடு களை சிறந்தமுறையில் மேற் கொள்ள வேண்டும்.

ரொக்க வியாபாரத்தில் அதிக விற்பனையில் ஈடுபடு வதன் மூலமே சங்கத்தின் வரு மானத்தை பெருக்க முடியும். இதற்கு பணியாளர்களின் முயற்சி மிக அவசியமானது. என்று அவர் மேலும் தெரி வித்தார். (ம-26)

# தொடர்பு கொள்வதில் சிக்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.12

நெடுந்தீவு பிரதேச சபை யினருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாதிருப் பதாக வெளியிடங்களிலுள்ள மக்கள் கூறுகின்றார்கள்.

பிரதேச சபையின் தொலை பேசி இலக்கம் 021 321 6476 ஆகும்.

இந்த இலக்கம் சரியானது எனவும் பயன்பாட்டில் உள் ளதாகவும் பிரதேச சபையில் கேட்கும்போது கூறப்படுகின் றது.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்து தொடர்பு கொள்ள முயன்றால் இந்த இலக்கம் பாவனையில் இல்லை என தொலைபேசி பரிவர்த்தனை நிலைய்த்தில் இருந்து கூறப்ப டுகின்றது.

இதேபோன்று வேறு பல இலக்கங்களில் தொடர்பு கொள் ளும் போதும் பதில் கூறப்படு கின்றது.

எனினும் தொடர்ந்து குறிப் பிட்ட இலக்கத்துக்கு ஐந்து, ஆறு தடவை முயற்சி செய் யும்போது உரிய இலக்கத்தில் தொடர்பு கிடைக்கின்றது என பாவனையாளர்கள் கூறுகிறார் கள். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வருடம் புற்றுநோயால் ஆயிரத்து 30 பேர் உயிரிழப்பு

## உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் வைத்தியர் ந.சிவராஜா தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் கடந்த வருடம் புற்றுநோயால் ஆயிரத்து 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் வைத்தியசாலையில் இறப்பவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் புற்றுநோயாளிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தெரிவித்தார் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் ந.சிவராஜா.

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயகுமாரன் எழுதிய "நோய் நாடி நோய் முதல் நாடி'' எனும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நூல் வெளியீடு நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

தொற்று நோய்கள் பலவிதமாக உள்ளன. இதனைத் தடுப்பதற்கு தொற்று நோய்களைத் தடுக்கக் கூடிய சக்தி வாய்ந்த மருந்துகளைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை உள்ளது.

அத்துடன் எமது சுகாதாரமான பழக்க முறைகளும் கைகொடுக்கும். முன்னைய காலங்களைப் போன்று உணவுப் பழக்க முறைகள் மாற்றமடைந்துள்ளன. அவை இருந்தும் நாம் அதனைத் தவிர்த்து விடுகின்றோம். சத்துணவுகளை உட்கொள்வது கிடையாது. மாறாக 24 வீதமான சத்துணவுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு வெறும் சக்கை உணவுகளை உண்ணுகின்றோம்.

அத்துடன் இன்னொரு முக்கிய பிரச்சினையாக யாழ். மாவட்டத்தில் மதுபாவனை, சிகரெட் பிடித்தல் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன. இவ்வாறான காரணங்களே தொற்று நோய் அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்து விடுகின்றது.

யாழ். போதனா வைத்தியாலையில் 2007 ஆம் ஆண்டு ஆயிரத்து 18 புற்று நோயாளர்களும் 2010 ஆம் ஆண்டு ஆயிரத்து 30 புற்றுநோயாளர்களும் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. பாடசாலைக் கல்வியில் சுகாதாரக் கல்வியை முக்கியப்படுத்தி மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். அதனைப் போன்று பொது மக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.- என்றார். (ம-313)

# புற்றுநோய் விழிப்புணர்வு நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்.போதனா வைத்திய சாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயகுமாரன் எழுதிய ''நோய் நாடி நோய் முதல் நாடி'' எனும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு நூல் வெளியீடு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் ந.சிவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து வரவேற்பு நடனத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவர்கள் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை யாழ். பிராந்திய தொற்று நோயியலாளர் டாக்டர் சு.சிவகணேசும், தலைமையுரையை உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் ந.சிவராஜாவும் வாழ்த்துரையை நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சார்ய சுவாமிகளும், பிரதம விருந்தினர் உரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினர் உரையை வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் நூலின் வெளியீட்டுரையை யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுானந்தாவும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் முதல் பிரதியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வெளியிட்டு வைக்க யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆகேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நூலின் மதிப்பீட்டுரையை சுகாதார அமைச்சின் சமுதாய மருத்துவ நிபுணர் டாக்டர் முரளி வல்லிபுரநாதனும் ஏற்புரையை நூலாசிரியர் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ந.ஜெயகுமாரனும் நிகழ்த்தினர். (ம-313)

# வீதிக்கு இடையூறை ஏற்படுத்தும் வாகனச் சாரதிகளுக்குத் தண்டம்

## நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 12

திருநெல்வேலி சந்தைக்கு வருவோர் சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை அவற்றுக்குரிய தரிப்பிடத்தில் நிறுத்த வேண்டும்.

மாறாக வீதிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் விபத்துக்கள் ஏற்படுமாறு நிறுத்தினால் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சபை மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொது வழியில் வாகனங்களை நிறுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் தரிப்பிடங்களில் நிறுத்தப்படாத சைக்கிள், மோட்டார் சைக்கிள்கள் சபையால் அகற்றப்படுவதுடன் தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீதிகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவது குறித்தும் அதனால் ஏற்படும் நெருக்கடி குறித்தும் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டு வந்தன.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# கிணற்றில் வீழ்ந்து மூதாட்டி மரணம்

தென்மராட்சி டிசெ. 12

குளிக்கச் சென்ற மூதாட்டி கிணற்றில் தவறி வீழ்ந்து பலியானார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சுந்தரம் வள்ளியம்மை (வயது 75) என்பவரே பலியானவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து கொடிகாமம் பிரதேசதிடீர் மரணவிசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-207)

# மஹிந்த சிந்தனையில் தென்னம்பிள்ளை

தென்மராட்சி, டிசெ 12

மஹிந்த சிந்தனையின் பாடசாலை மாணவர்கள் மூலம் வீட்டுக்கு ஒரு மரம் நடுவோம் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இரு தென்னம்பிள்ளைகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

விநியோகிக்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் மாணவன் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் காலத்தில் பயன்பெறக் கூடிய நிலையில் இருக்கவேண்டுமென்ற மஹிந்த சிந்தனையின் பிரகாரம் இவை விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# தென்னிலங்கை இளைஞர் இருவர் யாழ்ப்பாணத்தில் காணாமற் போயினர்

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

வலி. வடக்கு டிசெ. 12

யாழ்ப்பாணத்தில் வைத்து தென்னிலங்கையைச் சோந்த இரு இளைஞர்கள் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரால் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும் காணாமல் போனவர்களின் விவரங்களை வெளியிடக் கோரியும் யாழ்ப்பாணத்தில் இடம் பெறுவதாக இருந்த பேரணிக்கு குறிப்பிட்டவர்களே ஏனைய தமிழ் சிங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் கடத்தப்பட்ட இருவரும் ஜே.வி.பி. அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் காலையில் இடம்பெறவிருந்த சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியில் கலந்துகொள்வதற்காக வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாகாண அமைப்பாளர் விரராஜ் மற்றும் ஒரு இளைஞனுமே கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. (ம-86)

# சமூக சீர்திருத்தத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் சாவகச்சேரியில்



சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உரையாற்றுகிறார். மேடையில் விருந்தினர்களும் நீதிபதிகளும் அமர்ந்துள்ளனர்.

தென்மராட்சி டிசெ 12

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சமூக சீர்திருத்தத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் நேற்று தென்மராட்சி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரைமப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலக கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்கா பிராந்திய அலுவலக பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

சமூக சீர்திருத்த திணைக்கள பிராந்திய அலுவலகம் வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.வீ.பரமராஜா, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி அ.பிரேம்சங்கர், நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா, சமூக சீர்திருத்தத் திணைக்கள ஆணையாளர் பி.கே.எஸ்.ரவீந்திரா உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் தென்மராட்சி பிரதேச திணைக்களத் தலைவர்களும் பங்குபற்றினர். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி
## ஏரம்பு நாகேஸ்வரி

**தோற்றம்: 15.12.1948**

**மறைவு : 12.11.2011**

அன்பினால் எம்மை அரவணைத்த தாயே
பண்போடு வாழ்ந்த பாசமான உயிரே
கண்ணுக்குள்ளே எம்மை காத்து வளர்த்தீரே
பெண்மையின் இலக்கணமாய் பொறுமையுடன்
வாழ்ந்தீரே

குடும்பத்தின் குலவிளக்காய் நிறைவாக மிளர்ந்தீரே
உறவோடு மகிழ்வாக கதை பேசி சிரித்தீரே
பொறுப்பான உம் கடமையை விருப்போடு முடித்தீரே
ஒற்றுமையாய் வாழ என உளமார நினைத்தீரே

களிப்பான எம் வாழ்வில் கண்பட்டுப் போனதுபோல்
காலனவன் வந்து உமை கடத்திக் கொண்டு சென்றுவிட்டான்
காத்திருந்த எங்களை நீர் கதிகலங்க வைத்துவிட்டீர்
காற்றோடு நீர் கலந்து கனவாகிப் போய்விட்டீர்

நெஞ்சு துடிக்குதம்மா நித்தம் உமை நினைக்கையிலே
நிலையில்லா இவ்வாழ்வு அடியோடு வெறுக்கிறதே
எமைவிட்டு நீர் சென்று ஒரு மாதம் ஆனாலும்
நிழலாக உம் நினைவு எம் நினைவோடு
- தொடர்ந்திடுமே.... தொடர்ந்திடுமே.....

மீளாத் துயரில் வாடும்
நவாலி கிழக்கு, கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
மானிப்பாய். பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

VVV Graphics 021 225 0303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியளம் கேட்டீர்களா?

### அந்தோ! நீள்கிறது....
### .... கண்ணீர்ப் பயணம்!

ஒரு சிறுவன் வாழ வேண்டிய வயதில் இறந்து போனான். அந்தச் சிறுவனை எழுப்பித் தருமாறு அவனது உறவுகள் புத்த பகவானிடம் வேண்டுகின்றனர். அதற்கு அவர் சாவைச் சந்திக்காத ஒரு வீட்டிலிருந்து மிளகைப் பெற்றுவந்தால் அவனை எழுப்பித் தருகிறேன் என்று கூறினார். சாவைச் சந்திக்காத வீடு எங்கேனும் இருக்குமா? எனவே பிள்ளையை எழுப்ப முடியாது என்பது புத்த பகவானின் தீர்ப்பாகும்.

மனித உரிமைகள் தினமான டிசெம்பர் 10 ஆம் திகதி காணாமல் போன தமது உறவுகளை மீட்டுத்தரக் கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேசமெங்கும் பிணக்குகள் வன்முறைகளாகக் கட்டவிழும்போது சாதாரண மக்கள் காணாமல் போவது காலங்காலமாக நடைபெறுகின்றது. எனினும் நாடுகளுக்கிடையிலான யுத்தங்களில் காணாமல் போனோரை விட சொந்த அரசுகளாலும், அரசுக்கெதிரான வன்முறைப் போராட்டங்களை முன்னெடுத்த அமைப்புக்களாலும் சொந்த மக்கள் காணாமல் செய்யப்பட்ட வரலாறே உலகமெங்கும் அதிகமாக விரவிக் கிடக்கிறது. தமிழர் பிரதேசங்களில் ஒவ்வொரு தமிழனதும் உறவுகள் யாரேனும் ஒருவராவது யுத்தத்தில் காவு கொள்ளப்பட்டோ, காணாமல் போயோ இருப்பர்.

இலங்கையில் 1958ஆம் ஆண்டு இடம்பெற்ற குறிப்பிடத்தக்க முதலாவது இனக்கலவரத்துடன் காணாமல் போதலும் ஆரம்பமாகியது எனலாம். 1977,1983 என நடைபெற்ற கலவரங்களில் பல தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு இன்றளவும் விடையில்லை. பின்னர் அரச படைகளால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் இன்றளவும் பல ஆயிரங்களாகும். அதைவிட இயக்கங்களின் உள்வீட்டுக் கலகங்களாலும், சக இயக்கங்களுக்கிடையிலான பகையினாலும் கொல்லப்பட்டவர் போக, இருக்கின்றனர் என்ற நப்பாசையுடன் பார்த்திருக்க இன்றளவும் வராதவர்களின் எண்ணிக்கையும் பெரியது. முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி யுத்தத்தைத் தொடர்ந்து மனைவி,பிள்ளைகள் முன்னிலையில் சரணடைந்த போராளிகளும் காணாமல் போனவர்களின் பட்டியலுக்குள்ளேயே அடங்கியுள்ளனர். இது தவிர வெளிநாடுகளுக்கெனப் புறப்பட்டுச் சிறிய கப்பல்களில் பயணம் செய்து காணாமல் போனவர்களும் சில நூற்றுக்கணக்கானவராகும்.



இலங்கை காணாமல் போனவர்களின் பிரதான நாடாக அடையாளப்படுத்தப்படுகிறது. இராமனையும் இலக்குவனையும் வனவாசத்துக்கு அனுப்பிவிட்டு அவர்களது வரவை எதிர்பார்த்து உருக்குலைந்த இதயத்தோடு காத்திருந்த கைகேயியைப் போல, எத்தனையோ தாய்மாரும், அரிச்சந்திரனைப் பிரிந்த சந்திரமதி போல எத்தனையோ மனைவியரும் இன்றளவும் எதிர்பார்ப்போடு காத்திருக்கின்றனர். பலருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. பலர் பிரிவாற்றாது தசரத மாமன்னன் போல உயிர் நீங்கி மண்ணோடு மண்ணாகிவிட்டனர். பூவிழந்து, பொட்டிழந்து வாழ வழியற்று எத்தனையோ அபலைப் பெண்கள் சமூக வரன்முறைகளோடு போராடி மாய்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் காணாமல் போதலுக்கு முற்றுப்புள்ளி இடுவார் யாருமில்லை. அது முடிவுறாத தொடர்கதையாக நீள்கிறது. காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்து, அவர்கள் கொல்லப்பட்டவர்களாயின் அதை உறுதிப்படுத்தினாலாவது அவர்களது குடும்பத்தாரின் மனதுக்கு ஆறுதல் கிடைக்கும். காணாமல் போனவர்களை மீட்டுத் தருவதாகக் கூறிப் பிழைப்பு நடத்துவோருக்கும் சாத்திரிமார்களுக்கும், குறி சொல்வோருக்கும் கொடுக்கும் பணமாவது மிஞ்சும்.

காணாமல்போன தமது உறவுகளை மீட்டுத் தருமாறு புத்த பகவானை வேண்டுவோமானால் அவர் எவ்வாறு பதிலளிப்பாரோ தெரியாது. ஆனால் புத்த தர்மத்தைப் பேணும் ஆட்சிபீடத்தில் இருந்து அவர்களது உறவுகளின் கண்ணீருக்கு விடை தரப்படவில்லை. புத்த பகவான் சாவீடு காணாத வீட்டில் மிளகு கேட்டதன் மூலம் இறந்தவரை எழுப்ப முடியாது என விடையளித்தார். யுத்தத்தில் காணாமல் போனோர் உண்மையில் இரகசியத் தடுப்பு முகாம்களில் இருப்பரேயானால் அவர்களின் பட்டியலை வெளியிடலாம். அவ்வாறில்லாவிடில் மரணச் சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கலாம். அல்லது புத்தர் போல சாவீடு காணாத வீட்டில் இருந்து மிளகைக் கொண்டு வாருங்கள். காணாமற் போனோரை கண்டு பிடித்துத் தருகிறேன் என்றாவது சொல்லலாம். எதுவுமேயில்லை. நீள்கிறது உறவுகளின் கண்ணீர்ப் பயணம்.

விழிச்சான் குஞ்சு.

# இராணுவத் தளபதிகள் வரிசையில் சரத் பொன்சேகாவுக்கு இடமில்லை

## இராணுவப் பேச்சாளர் நிகால் ஹெற்றியாராச்சி தகவல்

கொழும்பு,டிசெ.12

இனிமேல் எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்னாள் இராணுவத் தளபதி என்று சரத் பொன்சேகா குறிப்பிடப்படமாட்டார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிகால் ஹெற்றியாராச்சி தெரிவித்துள்ளார். கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டு இராணுவ நீதிமன்றத்தால் சரத் பொன்சேகாவுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டதை அடுத்து, அவரது ஜெனரல் பட்டம் பறிக்கப்பட்டதுடன், இலங்கை இராணுவத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதிகளின் பட்டியலில் இருந்தும் அவரது பெயர் நீக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றிகளில் சரத் பொன்சேகாவின் பங்களிப்புகள் பற்றிய குறிப்புகள் நீக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இராணுவ நீதிமன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டதை அடுத்து சரத் பொன்சேகாவை அரச ஊடகங்கள் முன்னாள் இராணுவத் தளபதி என்று குறிப்பிடுவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பொதுமன்னிப்புக் கோரி விடுதலைபெற சரத் பொன்சேகாவின் குடும்பத்தினர் விரும்பவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து சரத் பொன்சேகாவின் மகள் அபர்ணா பொன்சேகா கொழும்பு வார இதழுக்குக் கூறும்போது, பொதுமன்னிப்புக் கோருவதானால் அதை முன்னரே செய்திருப்போம் என்று குறிப்பிட்டுள்ளார். (ச)

# தமிழ் மொழியில் கடமையாற்ற 350 பொலிஸார் இணைப்பு

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.12

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையில் ஈடுபடுத்தும் நோக்கில் புதிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதாக தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடிய சுமார் 350 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் பொலிஸ் கொன்ஸ்டபிள் பதவிக்காக இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களுக்கு தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம்கள் விண்ணப்பிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கு அடிப்படைத் தகுதியாக தமிழ் மொழியறிவு கருதப்படும். வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது தாய் மொழியில் கருமமாற்றுவதை உறுதி செய்யும் நோக்கில் அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அரசு - பெல் பொட்டிங்கர் தொடர்பு குறித்து விசாரணை

கொழும்பு,டிசெ.12

அரசுக்கும் பெல் பொட்டிங்கர் நிறுவனத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையைத் தானே எழுதியதாக பெல் பொட்டிங்கர் நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்தது. இதனை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு நிராகரித்திருந்துள்ளது.

பொது மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு அரசு இவ்வாறு செயற்படுகின்றது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். நாட்டின் நன்மதிப்பை உயர்த்தும் நோக்கிலான பிரச்சாரங்களுக்காக அரசு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதிக பணத்தை வழங்கி வருகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக அரசு எதிர்க்கட்சியை குற்றம் சுமத்திய போதிலும், அதிகளவில் அரசே தொடர்புகளைப் பேணி வருகின்றது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். பெல் பொட்டிங்கர் நிறுவன விவகாரம் குறித்து நாடாளுமன்றத்திலும் குரல் கொடுக்க உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

# எதிர்க்கட்சியின் தலைமைப் பொறுப்பு கருஜயசூரியவுக்கு வழங்க வேண்டும்

## கிளர்ச்சிக் குழுவினர் கோரிக்கை

கொழும்பு,டிசெ.12

எதிர்க்கட்சியின் தலைமைப் பொறுப்பு கரு ஜயசூரியவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சித் தலைமைக்கான வாக்கெடுப்பில் கரு ஜயசூரிய வெற்றியீட்டும் பட்சத்தில் எதிர்க்கட்சி தலைமைப் பொறுப்பையும் அவருக்கு வழங்க வேண்டும் என்று கிளர்ச்சிக் குழுவினர் வலியுறுத்தியுள்ளனர்.

கட்சித் தலைமைப் பொறுப்பை கரு ஜயசூரியவுக்கு வழங்கி எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை ரணிலிடமே விட்டு விடுவது என்று கிளர்ச்சிக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை எடுப்பதனால்தான் தமது தீர்மானத்தை மாற்றிக்கொண்டதாக பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினர் தெரிவித்துள்ளனர். (ச)

# தண்டனை விதிப்பது தொடர்பில் நீதிவான்களுக்கு புதிய வழிகாட்டல்

## நீதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.12

தண்டனை விதிப்பது தொடர்பில் நீதிவான்களுக்கு புதிய வழிகாட்டல்கள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும் தண்டனைகளில் சமநிலையைப் பேணும் நேக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தண்டனை விதிப்பது குறித்த கொள்கைகள் சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும், அடுத்த ஆண்டு இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புதிய சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட ஓர் குற்றச் செயல் தொடர்பில் குற்றவாளியாக அறிவிக்கப்படும் நபர்களுக்கு ஒரே விதமான தண்டனைகள் விதிக்கப்படும். சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் புதிய சட்டங்களை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சாட்சியளித்தல், சிறுவர் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பிலும் புதிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். சாட்சிகளைப் பாதுகாத்தல் தொடர்பிலும் அரசு சட்டமொன்றை நிறைவேற்ற உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் விதவைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## திருமதி விஜயகலா எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ.12

வடக்கு, கிழக்கு யுத்தத்தினால் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர் அவர்களது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப விசேட கொடுப்பனவுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீர்ப்பாசனம், நீர் முகாமைத்துவ அமைச்சின் குழுநிலை விவாதம் சபையில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:-

யுத்தத்தால் வடமாகாணத்தில் பெருமளவு மக்கள் பாதிப்படைந்துள்ளனர். குறிப்பாக விவசாயிகள் முற்றுமுழுதாக பாதிப்படைந்துள்ளனர். எனவே இவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை உள்ளது.

இவற்றில் நீர்ப்பாசனம் அத்தியாவசியமான ஒன்றாகும். யாழ்ப்பாணத்தில் பெருமளவு குளங்கள் தூர்ந்து காணப்படுகின்றன. இவற்றை புனரமைப்புச் செய்ய நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் தேவையாக உள்ளது. இந்தத் திட்டம் மூலம் கரையோரப் பிரதேசமக்கள்பயன்பெறுவார்கள்.

கரையோரப் பிரதேசங்களில் கடல்நீர் அத்துமீறி உட்புகுவதைத் தடுக்க உவர்நீர் தடுப்பணைகள் அமைக்கப்படுவதன் மூலம் நன்னீரைப் பாதுகாக்க முடியும். குடாநாட்டின் சில பகுதிகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இதனை மேலும் விஸ்தரிப்பு செய்ய வேண்டும்.

அத்துடன் விதவைப் பெண்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படவேண்டும். யுத்தத்தினால் தமது கணவரை இழந்த பெண்கள் தமது பிள்ளைகளையும் குடும்பத்தினரையும் காப்பாற்ற வாழ்க்கைச் செலவுகள் இன்றி அவதிப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனை மகளிர் விவகார அமைச்சு கவனத்தில் எடுத்து உரிய தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்- என்றார். (வ-313)

# பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் விரைவில் அழைப்பிதழ்களின் கண்காட்சி

சுன்னாகம், டிசெ.12

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அழைப்பிதழ்களின் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

வடமாகாணத்திலுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் , மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள், பாடசாலைகள் போன்றவற்றால் அச்சிடப்பட்ட அழைப்பிதழ்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

கடந்த வருடமும் இந்த வருடமும் நடத்தப்பட்ட நிகழ்வுகள் தொடர்பான அழைப்பிதழ்களை இந்தக் கண்காட்சியில் வைப்பதன் பொருட்டுத் தமது திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி கேட்டுள்ளார்.

இந்தக் கண்காட்சியில் தெரிவு செய்யப்படும் 10 சிறந்த அழைப்பிதழ்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (வ-38)

# இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்து

யாழ்ப்பாணம், டிசெ.12

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக போரால் பாதிப்படைந்த பிரதேசங்களைச் சேர்ந்த ஆயிரம் இளைஞர், யுவதிகளுக்கு திறன் பயிற்சிகளையும், தொழில் வாய்ப்புக்களையும் வழங்கும் நடவடிக்கை தொடர்பான ஒப்பந்தம் ஒன்றை சங்கன் லங்கா நிறுவனம் கடந்த மாதம் 24 ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மீள் எழுச்சித் திட்டம் மற்றும் கெமித்திரிய திட்டங்களில் ஊடாக இந்த நடவடிகை மேற்கொள்ளப்படவுள்ளது.

போரால் பாதிப்படைந்த பிரதேசங்களில் உள்ள இளைஞர், யுவதிகளின் திறனை விருத்தி செய்வதன் மூலம் அவர்களை நடைமுறைத் தொழில் சந்தையுடன் இணைத்து நாட்டின் பிரதான பொருளாதாரத்தில் பங்கெடுக்கச் செய்யும் நோக்குடனும் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகளை சங்கன் கட்டுமான நிறுவனத்தின் துணை நிறுவனமான திறன்பயிற்சி மற்றும் முகாமை நிறுவனம் வழங்குவதாக மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இந்தப் பயிற்சியில் மேசன் வேலை, தச்சுவேலை, மாபிள் பதிப்பு வேலை, ஒட்டுவேலை, கம்பி வளைத்தல், சாரம் அமைத்தல், நீர்க்குழாய் பொருத்துதல், மற்றும் வேறு துறைகள் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வேலை வாய்ப்பும் வழங்கப் படவுள்ளது. (வ-313)

# மீள்குடியமர்வு உதவிகள் கிடைக்காதோருக்கான கொடுப்பனவு

தென்மராட்சி, டிசெ.12

வன்னிப் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் இதுவரை மீள்குடியமர்வுக் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாத 54 குடும்பங்களுக்கான 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் பொதிகளும் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து விநியோகிக் கப்பட்டன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதியத்தால் இவை விநியோகிக்கப்பட்டன. (வ-207)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ். மாவட்ட தேசிய பாடசாலைகளான வேம்படி மகளிர் கல்லூரி, மற்றும் யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம்I இற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 19ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-122)

# ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு

சுன்னாகம், டிசெ.12

தெல்லிப்பழை பிரதேச செயலகம் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறுவர் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வொன்றை நடத்தவுள்ளது.சிறுவர் துஷ்பிரயோகமும் இள வயதுக் கர்ப்பமும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் வீட்டு வன்முறை தொடர்பான சட்டங்கள் தொடர்பில் இந்த விழிப்புணர்வுச் செயலமர்வு இடம்பெறவுள்ளது. பிரதேசப் பாடசாலைகளின் 60 ஆசிரியர்களுக்கு இந்தச் செயலமர்வின் மூலம் விழிப்புணர்வு ஊட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-38)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி க.நந்தினி அவர்களின் துணைவரும், எமது கல்லூரியின் பழைய மாணவருமாகிய **விஜயரத்தினம் கமலநாதன்** அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு அவர்தம் மறைவில் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் கழகம், யூனியன் கல்லூரி,**
தெல்லிப்பழை.
(11521) (2-6-)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நடன பாட ஆசிரியயை திருமகளின் அன்பு மிக்க தந்தை

**அமரர் பொன்னம்பலம் தேவராஜா**
(லவ்லேன், உடுவில்)

அவர்களின் அமரத்துவச் செய்தி கேட்டு சிந்துகின்றோம் கண்ணீர் செலுத்துகின்றோம் அஞ்சலி.

**கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.**
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
(11473) (2-6-)

## கண்ணீர் அஞ்சலி

## விஜயரட்ணம் கமலநாதன்



வயது முதிர்ந்தவர்களாலும் வயதில் இளையவர்களாலும் தம்பி அண்ணா என அன்போடு அழைக்கப்படுபவர் வி.கமலநாதன். இவரை இன்று நாம் இழந்து விட்டோம். தம்பி அண்ணா எங்கள் குடும்பத்தில் ஒருவராக விளங்கியவர்.

எங்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் தவறாது வருகை தந்து உதவிக் கரம் நீட்டும் பண்பாளர் இவர். தெல்லிப்பழையில் சற்று வித்தியாசமாக முற்றுமுழுதாக வேறுபாடு கொண்ட மானிடர். எவரது சுகதுக்க நிகழ்வுகளிலும் இவர் பங்கு பற்றாத நிகழ்வுகள் கிடையாது. சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டப பணிகளில் முதன்மைத்தொண்டர். இவர் ஒரு முடிசூடா மன்னன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய துர்க்கையம்மனைப் பிரார்த்தித்து அஞ்சலிப்போமாக.

(1[illegible]36)
**கா.சிவபாலன்**

அச்சக வேலைக்கு ஆள்தேவை

KORD மெசின் இயக்கும் அனுபவம் உள்ளவர்/ பழக விரும்புவர் தேவை.
தொடர்பு:- 0773467499
(11524)(2-6)

நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அலஸ்ஷேசன் நாய்க்குட்டிகளும், தாய் நாயும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0757650845.
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(7875)(2-6)

காணி விற்பனைக்கு

மீசாலை மடத்தடி வீதியில் ஐயா கடையிலிருந்து ஏறத்தாள 200m தூரத்தில் நிலப்பரப்பு 10 விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: 0776090931

காணிதேவை

1. ஏ- 9 வீதியில் (247 KM - 261 KM) கிளிநொச்சியில் தேவை.
02. ஏ -9 வீதியில் (220KM - 224KM) மாங்குளத்தில்
1 ஏக்கருக்கு மேற்பட்ட காணிதேவை
தொடர்பு: 0779155756



ஒன்லைன் மூலம் கொள்வனவுகளை மேற் கொள்பவர் களுக்கு விநியோகம் இலவசம்
www.titusstores.com
2439422

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் II இற்கு பதவியுயர்வு பெற்ற எமது வலயக் கல்வி அலுவலகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) மதிப்புக்குரிய


**ஜயாத்துரை புவனேந்திரன்**

அவர்களை வாழ்த்துவதுடன் மேலும் அவரின் பணி சிறக்க எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம்
தீவகம், வேலணை.

வலயக் கல்விப் பணிப்பாளரும் அனைத்து அலுவலர்களும்.
(அ/6839)(2-6-)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வலயத்தின் புதிய வலயக்கல்விப் பணிப் பாளராக 2011.12.01 அன்று கடமையினைப் பொறுப்பேற்றுக்கொண்ட உயர்திரு **கந்தசாமி முருகவேள்** ஐயா அவர்கள் பணியில்

சிறந்தோங்கிப் பாரினில் பல்லாண்டு மிளிர்ந்திட மனமார மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

கிளி/ஞானிமடம் அ.த.க,
பூநகரி (11392)(36) அதிபர், ஆசிரியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள

# மீனவர்களை மீட்டுத் தருமாறு கோரி தமிழகத்தில் வேலைநிறுத்தப் போராட்டம்

சென்னை, டிசெ.12

இலங்கைச் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களை விடுதலை செய்யக் கோரி எதிர்வரும் 18 ஆம் திகதி தமிழகம் முழுவதும் மீனவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற தங்கச்சிமடம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தியதாக வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற உத்தரவின்படி அவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களை விடுதலை செய்யக் கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 30 ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் செய்துவந்தனர்.

ராமேஸ்வரம் தீவில் மீனவர்கள் கூட்டமைப்புச் சார்பில் உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றது. அதே சமயம் சிறையில் உள்ள ராமேஸ்வரம் மீனவர்கள் 5 பேரும் எதிர்வரும் 19 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

அப்போது மீனவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து மீனவர்கள் விடுதலைக்கான கூட்டமைப்பின் பிரதிநிதி அருளானந்தம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இலங்கை மல்லாகம் நீதிமன்றத்தில் வரும் 19 ஆம் திகதி மீனவர்கள் 5 பேரையும் ஆஜர்படுத்த உள்ளனர். இந்த மீனவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி மீண்டும் 16 ஆம் திகதி முதல் தங்கச்சிமடத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டமும் 18 ஆம் திகதி தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து விசைப்படகு மீனவர்களும் வேலை நிறுத்தம் செய்வது எனவும் மீனவர்களின் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.- என்றார். (ஒ-323)

# தொலைபேசியில் மஹிந்தவுக்கு தொல்லை கொடுத்த அனோமா!

கொழும்பு, டிசெ.12

அலரி மாளிகையின் தொலைபேசி இயக்குநருக்கு அந்த அழைப்பு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

தொலைபேசியில் சிங்களத்தில் பேசிய பெண், தன்னை அனோமா பொன்சேகா என்று அறிமுகப்படுத்திக் கொண்டு ஜனாதிபதியுடன் பேச வேண்டும் என்று கேட்டார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் குடும்பத்தின் சார்பில் அவர் ஜனாதிபதியிடம் பொதுமன்னிப்புக் கோரவுள்ளதாக தொலைபேசி இயக்குனர் நினைத்துக் கொண்டார்.

உடனடியாக அவர் மஹிந்த ராஜபக்ஷவிடம், அனோமா பொன்சேகா இணைப்பில் இருப்பதாகவும் உங்களிடம் பேச வேண்டும் என்று கேட்பதாகவும் கூறினார்.

தொலைபேசியை எடுத்து என்ன பிரச்சினை? எங்களால் என்ன செய்யமுடியும்? என்று கேட்டார் மஹிந்த ராஜபக்ஷ. அழைத்தவர் ஓரளவுக்கு தயவாகப் பேசினார்.

வாழ்க்கைச்செலவு உயர்வால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக குறைபட்டுக் கொண்ட அந்தப் பெண், ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? தயவு செய்து எங்களுக்கு நிவாரணம் அளியுங்கள் என்று கேட்டார்.

சந்தேகம் கொண்ட ஜனாதிபதி யார் பேசுவது என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் அனோமா என்று பதிலளித்து விட்டு சத்தமாக சிரிக்கத் தொடங்கினார்.

அந்தப் பெண் தன்னை ஏமாற்றுவதாக சந்தேகம் கொண்ட ராஜபக்ஷ, நீங்கள் பொய் சொல்கிறீர்கள். எனக்கு அனோமாவை தெரியும். அவருடன் நான் பேசியுள்ளேன். உங்களைப் போல் அவர் ஒரு வாயாடிப் பெண் அல்ல. அவர் நன்றாக நடந்து கொள்வார். நீங்கள் அனோமாவாக இருந்தால், உங்களின் கணவன் சிறையில் இருக்கும் போது சிரிக்கிறீர்களே என்று கூறிவிட்டு கோபத்துடன் தொலைபேசியை வைத்து விட்டார்.

உடனடியாக அவர் தொலைபேசியில் அழைத்த பெண் யார் என்று விசாரிக்குமாறு உத்தரவிட்டார். விரைவாகவே அந்தப் பெண் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

அவர் ஒரு மனநலம் குன்றிய பெண் என்பது தெரிய வந்ததும், அந்த விவகாரம் அத்துடன் முடிக்கு வந்தது.

சண்டே ரைம்ஸ் இது குறித்த செய்தியை சுவாரஸ்யமாக வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கோத்தபாயவைச் சந்தித்த ஆஸ்திரேலியா எம்.பிக்கள்

இலங்கைக்குக் பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு, இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இலங்கை பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. கொழும்பு வந்த மரியா வம்வாகினோ தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிறிஸ்ரோபர் பற்றிக் ஹெய்ன்ஸ்,ரொவான் எரிக் ரம்சே, அன்ரூ ஜோன், ஹெலன் எவலின் குறோஜர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள், போருக்குப் பிந்திய நிலைமைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கப் பதிலளித்தல் குறித்து இலங்கை பாதுகாப்புச் செயலருடன் கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. இலங்கையில் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த நடுநிலையான- நம்பகமான அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலியா வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையிலேயே ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர். (ம)

# உயர்தரப் பெறுபேறுகள் மூன்று வாரகாலம் தாமதம்

கொழும்பு, டிசெ.12

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதற்கு இன்னமும் மூன்றுவாரங்கள் செல்லும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையின் பழைய மற்றும் புதிய பாடவிதானங்களுக்கு அமைவாக வெட்டுப் புள்ளிகளைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பிரதிக் கல்வி அமைச்சர் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

இரண்டு பாடவிதானங்களின் அடிப்படையில் பல்கலைக்கழக நுழைவுக்கான மாணவர்களின் வெட்டுப்புள்ளிகளை தயாரிக்க வேண்டியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக உயர் கல்வி அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியன இணைந்து கல்வி நிபுணர்களுடன் இந்த நடைமுறைகள் குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். (ஒ-சி)

# அமெ. பிரதி இராஜாங்க செயலாளர் புதுடில்லிக்கு

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலர் வில்லியம் பேன்ஸ் புதுடில்லிக்குப் பயணமாகியுள்ளார்.

இந்த நிலையில் இவர் இலங்கை விவகாரம் குறித்தும் புதுடில்லியில் கலந்துரையாடலாம் என்று கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு பேன்ஸ் மேற்கொள்கின்ற முதலாவது பயணத்தின் போது, இலங்கை நிலைமைகள் மற்றும் முன்னேற்றங்கள் உள்ளிட்ட துணைக் கண்டத்தின் பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடெல்லியில் அவர் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய் ஆகியோரைச் சந்திப்பார் என்றும் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கூறியுள்ளது.

அதேவேளை, இலங்கை விவகாரம் தொடர்பாக பேன்ஸ் புதுடில்லியில் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவாரா என்பதை உறுதிப்படுத்த அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மறுத்து விட்டனர். (ம)

# தமிழருக்கு உரிய தீர்வுகள் எப்போது கிடைக்கும்?

## கேள்வி எழுப்புகிறார் விஜயகலா எம்.பி.

யாழ்ப்பாணம்,டிசெ.12

யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கடந்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படவில்லை. எப்போது இதற்கான தீர்வுகள் கிடைக்கும் என்று ஐ.தே.க.வின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்ற போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இடம்பெற்ற யுத்தத்தின் விளைவாக தமிழ் மக்கள் சகலவற்றையும் இழந்த நிலையில் தற்போது தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முயன்று வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களின் இழப்புக்களை ஈடுசெய்வதற்கு தீர்வுகள் வழங்கப்படுவது அவசியமாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் இணைப்பு, காணி அதிகாரம், சட்ட ஒழுங்கு அதிகாரம் என்பவை இன்றியமையாத ஒன்றாகும். இது தொடர்பாக அரசின் உறுதியான நிலைப்பாடு என்ன?

அரசின்சேவையைப் பொறுத்தவரையில் இடமாற்றங்கள் என்பது சாதாரண நடவடிக்கையாக இருந்த போதிலும் வட பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுவது மக்கள் மத்தியில் சந்தேகப் பார்வையை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் பின்னர் தமிழ், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து வாழலாம் என்னும் நம்பிக்கை துளிர்விட்ட நிலையில் இத்தகைய இடமாற்றங்கள் தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு காணும் இணக்கப்பாட்டுக்கு ஆதரவு வழங்குவதுடன் உரிய தீர்வை அரசு முன்னெடுக்க வேண்டும்.

வடபகுதியின் அபிவிருத்திக்கு அரசியல் சுயநலங்களுக்கு அப்பால் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும்.- என்றார். (ம-313)

# புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை ஆய்வு நூலின் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் ''புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை'' தொடர்பான ஆய்வு நூலின் தமிழாக்க நூல்வெளியீட்டுவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் புகைத்தல் பழக்கத்தைக் குறைக்கும் நோக்குடனும் எதிர்கால சந்ததியினர் மத்தியில் புகைத்தல் பழக்கத்தை தடுக்கும் நோக்குடனும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக புகைத்தல் மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை ஆங்கில மொழியில் வெளியீடு செய்த நூலின் தமிழாக்கம் செய்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வெளியீடு செய்யவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிராந்திய சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எம்.ஹால்டீன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.யூட், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினராக 'புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்னா கூரே ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் பொதுமக்களின் நலன் கருதி புகையிலை சார் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யாத சகல உணவகங்களினதும், பலசரக்குக் கடைகளினதும் உரிமையாளர்கள் சுகாதாரத் திணைக்களத்தாலும், மதுவரித் திணைக்களத்தாலும் நற்சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தக் கௌரவிப்பில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மூன்று உரிமையாளர்கள் முதற்கட்டமாகக் கௌரவிக்கப்படுவர்.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கை தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சுகாதாரப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவாழ்வு தேடிடுவீர்



பொன் என்பார்
        பொன்னின் மணியென்பார்
மயிலின் இறகென்பார்
        குயிலின் குரலென்பார்
மானின் விழியென்பார்
        பாலின் நிறமென்பார்
புன்னகைக்கும் சிலையென்பார்
        பொக்கிஷமே பொற்கொடியேயென்று
போற்றி மகிழ்ந்திடுவார்
        பெண் மணியே!
சீர்வரிசை கேட்கையிலே
        சொன்னதெல்லாம் மறந்து
இரக்கத்தை உறங்க விட்டு
        கேட்டிடும் சீதனத்தால்
பெண் பெற்ற பாவியர்கள்
        ஏக்கத்தால் துவண்டிடுவர்
தூக்கத்தை துறந்திடுவர்
        இனிய இளைஞர்களே - எம்
இனத்தின் விழுதுகளே
        காக்கும் கரமெடுத்து
சீதனத்தை தூக்கிலிட்டு
        புது வாழ்வு தேடிடுவீர்

நடராசா சந்திரலிங்கம்,
அச்சுவேலி வடக்கு.

# விவாகரத்துக்கு பின்பு பெண்களின் வாழ்க்கை...

கணவன்-மனைவி இடையே ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு விவாகரத்துதான் என்று இப்போது பலரும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு மாற்றாக வேறு எதைப்பற்றியும் சிந்திக்க அவர்களுக்கு நேரமில்லை என்கிறார்கள். இந்தக் கால கணவனும், மனைவியும் தங்களுக்குள் ஏற்படும் சிக்கல்களை அலசி, ஆராய்ந்து தீர்வு காணும் மனநிலையில் இல்லை.ஆண், பெண் இருவரும் சரிசமம் என்று சொல்லிக் கொண்டு அசுர வேக வளர்ச்சியை காட்டும் இன்றைய தலைமுறையினரிடம் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எந்த ஒரு சிக்கலுக்கும் சரியான தீர்வு காணும் பொறுமை இல்லை. தற்போதைய காலகட்டத்தில் விவாகரத்து என்பது எளிதாக கிடைத்து விடும் என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் விவா கரத்துக்குப் பின் வாழும் வாழ்க்கை மிகவும் கொடுமையானது. அதைப் பற்றி யாரும் யோசிப்பது இல்லை. கையில் பணம் இருந்தால் எதையும் சாதித்து விடலாம் என்ற மனோபாவத்தில் விவாகரத்து முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் அது உண்மையில்லை என்பதை உணரும்போது,

வாழ்க்கையே முடிந்து போய் இருக்கும். தவறுகளே செய்யாத மனிதர்கள் இல்லை. அதைத் திருத்திக் கொள்ளும் முயற்சி தான் வாழ்க்கை. திருமணத்துக்கு முன் செய்யும் தவறுகளுக்காக பெற்றோர் பிள்ளைகளை தூக்கி எறிவது இல்லை. ஆனால் திருமணத்துக்கு பின் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவரை தூக்கி எறியும் முடிவுக்கு இன்னொருவர் வந்துவிடுகிறார்.திருமணத்துக்கு முன்பு- திருமணத்துக்கு பின்பு என்று ஒருவருடைய வாழ்க்கையை இரண்டாகப் பிரித்துப் பார்த்த காலம் போய், இப்போது விவாகரத்துக்கு முன்பு- பின்பு என்று பிரித்துப் பார்க்கிறார்கள். அது அனேகமாகப் பெண்களுக்கு இருண்ட காலம் ஆகிவிடுகிறது.விவாகரத்தில் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான். என்னதான் மனதளவில் அவள் தைரியமான பெண்ணாக இருந்தாலும், அவளுடைய சமூக அந்தஸ்து குறைந்துவிடும். அதற்குத் தக்கபடி அவள் தன் மன தைப் பக்குவப்படுத்திக்கொள்ளாவிட்டால், மனதளவில் உடைந்து போவாள். அப்போது தனக்கு முன்னால் இருக்கும் உலகம் வேறு, தனக்கு பின்னால் இயங்கும் உலகம் வேறு என்பதை உணர்வாள். உணர்கிறபோது அவர்களுக்குள் இன்னொரு கேள்வி எழும். அது நாம் மற்றவர்களுக்கு பாரமாக இருக்கிறோமோ?" என்ற கேள்வி. அப்போது விவாகரத்து என்பது தான் எடுத்த தவறான முடிவு என்ற குற்ற உணர்வு தோன்றும். தனது எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கேள்விக்குறியும் தோன்றும். தன் வயதை ஒத்தவர்கள் வாழும் சந்தோஷ வாழ்க்கையும் கண்களை உறுத்தி, கண்ணீர் வரச்செய்யும். அப்போது அவர்கள் தங்கள் பலத்தை எல்லாம் இழந்து விடுகிறார்கள். சுற்றி இருப்பவர் களிடம் மூர்க்கத்தனமாக நடந்து கொள்கிறார்கள். அவர்களது மனதில் பரவியிருக்கும் வெறுமை வார்த்தைகள் வெறுப்பாக வெளிவரும். அது மற்றவர்களைப் புண்படுத்தி அவர்களையும் விலகச் செய்யும். கணவன்- மனைவி இடையே தகராறு ஏற்பட்டால், அமைதியாக தெளிவான சிந்தனையோடு, சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். விவகாரத் துக்கு முன் நிறைய யோசிக்க வேண்டும். முக்கியமாக அதற்குப் பின்னால் வாழப்போகும் வாழ்க்கையை பற்றி யோசிக்க வேண்டும். ஏற்கனவே விவாகரத்து ஆகிவிட்டது. இனி நான் என்ன செய்வது?" என்று கேட்கும் பெண்களுக்கான ஆலோசனை .விவாகரத்தான பெண்கள் முதலில் குடும்ப உறவுகளை மேம்படுத்தவேண்டும். குடும்ப உறவுகள் மேம்பாடு அடையும்போது ஓரளவு மகிழ்ச்சி நிரந்தரமாகும். அதன் பின்பு அவர்கள் சமூக உறவை மேம்படுத்த வேண்டும். சமூக உறவை நீங்கள்தான் வளர்க்கவேண்டும். அதற்கு ஆரோக்கியமான சிந்தனையும், மகிழ்ச்சியும், புன்னகையும், தைரியமும் அவசியம். உங்களுடைய பழைய சோகக் கதைகளை க்கேட்க யாருமே விரும்ப மாட்டார்கள். உங்களை சுற்றியிருக்கும் சமூகத்துக்கு உங்களால் முடிந்த நன்மைகளைச் செய்து அவர்களை அனுசரித்து நடந்தால் அது ஒரு நல்ல சூழலை உங்களுக்கு ஏற்படுத்தித் தரும்.

அதன் மூலம் உங்கள் மனதில் இருக்கும் வெறுமை அகலும். ஒரு மனிதன் தன் தவறுகளை உணர்ந்து திருந்தினால் தவிர வாழ்க்கை அவன் வசப்படாது. ஆண்களும் விவாகரத்துக்கு பின் அதிகமான மனநெருக்கடிக்கு உள்ளாகி விடுகிறார்கள். இதனால் அவர்களுடைய தொழில் பாதிப்படைகிறது. தன்னைப் பற்றி தனக்குப் பின்னால் என்ன பேசிக்கொள்வார்களோ என்ற எண்ணம் அவர்களுடைய நட்பு வட்டாரத்தை குறைக்கிறது அல்லது சிதைக்கிறது. அப்போது , தான் செய்யும் சின்னச் சின்னத் தவறுகள் கூடப் பெரிய வடிவத்தில் தன் கண்முன்னே வந்து நிற்கும். அந்த நேரத்தில் தன்மீதே தனக்கு கோபம் ஏற்பட்டு மன அழுத்தம் எல்லைமீறும். இதனால் உறவுகளைப் புறக்கணிப்பது என்று முரண்பாடான பாதையில் பயணிக்கத் தொடங்கிவிடுவார்கள். அப்போது அவரது மாண்பும், மரியாதையும் சிறிது சிறிதாக அவருடைய வாழ்க்கையில் இருந்து விடைபெற்றுச் சென்றுகொண்டே இருக்கும். இந்த இழப்பை பணத்தாலும், பதவியாலும் ஈடு செய்ய முடியாது என்பதை உணரும்போது, வாழ்க்கையில் தவறு செய்து விட்டதை புரிந்துகொள்வார்கள்.

சந்தியா.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# கதை சொல்லும் உரிமை எமது

(சென்றவாரத் தொடர்ச்சி...)

எழுத்து மொழி தோன்றும் முன், குறிப்பாக சமூக நிறுவனங்களான மதம், திருமணம், குடும்பம், சாதி போன்றவை அழுத்தமாகத் திணிக்கப்பட்டதும் பெண்களுக்குப் பொது வெளிகளும் சமூக வெளிகளும் மறுக்கப்பட்டன. கிராமங்களில் ஊர்களில் நடக்கும் பொது நிகழ்வுகளில் பெண்களுக்கு இருந்த பங்கும் முன்னிலையும் பறிபோயின. நிகழ்வுகளில் பங்கு பெறும் அனுமதி மறுக்கப்பட்ட பெண்கள் கதை சொல்லிகளாக மாறினர். வெவ்வேறு கதை முறை களை உருவாக்கினர். பாட்டும் கதையும் வாய்மொழி மரபின் ஆணிவேர் என்று சொல்லலாம். மேலும் நினைவுகளைத் தேக்கி வைக்கும் 'வட்டு' போல அவர்கள் தங்கள் நினைவுகளைக் கதைகளாக மாற்றி வைத்துக் கொண்டனர். அக்கதைகளில் சுய வரலாறும் வரலாற்றில் இடம்பெறாமல் போன உள்ளூர் வரலாறுகளும் தன்னையொத்த பெண்கள் போராடிய வரலாறும் இருந்தன. கதைகள் வழியாக அவர்கள் வெளிப் படுத்த விரும்பிய அரசியல் பார்வைகள் சிலே டையாக மரபுச் சொற்களாக வெளிப்பட் டன. பெண் களுக்கு இடையே இக்கதை சொல்லும் மரபே முதன்மையான ஊடகமாக மாறியது. அடுத்த தலைமுறை களுக்குத் தம் வாழ்வின் நீதிகளைக் கடத்தும் வழிமுறையாக இருந்தது. திரௌபதி அம்மன் கதை. சுடலைமாடன் கதை, முப்பாட்டன் கதைகள் வாய்மொழிகளாய் சொல் லப்பட்டபோது அவற்றின் செவ்வியல் வடிவத் துக்குள் அந்தந்த ஊர் களின் கதைகளும் பின்னிக் கொண்டன. ஒப்பாரிகளுக்குள்ளும் கதை கள் ஒளிந் திருந் தன. தாலாட்டுகளுக்குள் இழந்த உரிமைகளும் எதிர் நோக்கிய போராட்டங்களும் பொதிந்து வைக்கப்பட்டிருந்தன. இன்று கதை சொல்லும் ஊடகங்களிலிருந்து பெண்கள் முழுது மாகப் புறந்தள்ளப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றனர். வெறு மனே கதைகளைப் பார்ப்பவர்களாகவும் கேட்பவர்களாகவும் மாற்றப்பட்டு விட்டனர். பெண்கள் கதை சொல்லும் மரபு அழிந்து விட்டதால், நிகழ்வுகளுடனான பெண்களின் ஊடாட்ட மும் கதைகளைச் சொல்லும் பெண்களின் ஊடாட்டமும் கதைகளைச் சொல்லும் பெண்களின் படைப்பாற்றலும் அழிந்து வருகின்றன. பெண்கள் இந்த நவீன ஊடகங்களில், கதைகளில் நடிப்ப வர்களாக இருக் கின்றனர். தம் பார்வையை முன் வைக்கும் கதை சொல்லி களாக இடம்பெறுவதில்லை.

> நிகழ்வுகளுடனான பெண்களின் ஊடாட்டமும் கதை சொல்லும் பெண்களின் ஊடாட்டமும் அழிந்து விடுகின்றன. பெண்கள் இந்த நவீன ஊடகங்களில், கதைகளில் நடிப்பவர்களாகவும் இருக்கின்றனர். கதை சொல்லிகளாக இடம்பெறுவதில்லை

அந்த இடங்களை நோக்கிப் பெண்கள் நகரவேண்டும். கதைகளைப் படைப் பவர்களாகப் பெண்கள் மாறவேண்டும். படைப் பவர்களாக மாறும் போது தான் கதைகளின் திசை, மானுட நலனை நோக்கிச் செல்வதாக இருக்கும்.

அதற்கு நாம் சம்பவங்கள் மறக்கும் தகுதியோடு இருக்கக்கூடாது. நினைவிலிருந்து மறையும் பொழுது அதற்கான உணர்ச் சிகளையும் இழந்தவர்களாய் மாறிவிடுகிறோம். போராட்ட குணத்தை இழக்கிறோம். ஆகவே பெண்கள் தம் அனுபவங்களை யெல்லாம் கதைகளாய் மாற்றி வைக்க வேண்டும். அக்கதைகள் வழியாக பெண்கள் தம் உரிமை களை நிலைநாட்ட வேண்டும்.

வரலாறுகளில் பெண்கள் இடம்பெறாமல் போன போதெல்லாம், அவர்களின் போராட் டங்களுக்கான அங்கீகாரம் மறுக்கப்பட்ட போதெல்லாம் பெண்கள் தம் போராட்டங்களைக் கதை களாக மாற்றி வைத்திருக்கின்றனர். அவற்றில் புரட்சிக்கான வித்துகளையும் ஒளித்து வைத் திருக்கின்றனர்.

குட்டி ரேவதி, (முற்றும்)
சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்திலும் இராணுவ முகாம்; மக்கள் மத்தியில் பெரும் பதற்றம்

நுவரெலியா,டிசெ.12

பல தசாப்தகாலமாக வடக்கு, கிழக்கை இராணுவமயப்படுத்தி வைத்திருக்கும் அரசு தற்போது மலையகத்திலும் இராணுவ முகாம்களை அமைக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையால் மலையக மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

இராணுவமுகாம் அமைக்கும் அரசின் இந்த நடவடிக்கை குறித்து மக்கள் பல்வேறு கோணங்களில் சந்தேகங்களை வெளிப்படுத்தியுள்ளதுடன், குழப்பமும் அடைந்துள்ளனர்.

வறுமையின் பிடியில் சிக்கி சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் எமது மக்கள் தங்களது வாழ்வாதாரத்தை கொண்டுநடத்துவதற்குப் பெரிதும் பாடுபடுகின்றனர்.

வறுமை ஒருபுறம் வாட்டிவதைக்க, மறுபுறம் பாதுகாப்புக் கெடுபிடிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை ஏற்படும் என மலையக புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாட்டில் யுத்தம் முடிவடைந்து சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேசத்திற்குப் பறைசாற்றும் அரசு தமிழர் பிரதேசங்களை இராணுவமயப்படுத்துவது ஏன் என்று மலையகத் தொழிற்சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பாதுகாப்புக் கருதியே மலையத்தில் இராணுவமுகாம் அமைக்கப்படுகின்றது என்று அரச தரப்பு கூறினாலும், இதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள வட்டகொட தனியார் ஜொக்ஸ்போர்ட் தோட்டத்தில் இந்த இராணுவமுகாம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இராணுவமுகாம் அமைக்கும் திட்டத்தால் அந்தத் தோட்டத்தில் வாழும் 300 தொழிலாளர் குடும்பங்கள் நிர்கதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பிரதேச மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அரசின் இந்தத் திட்டம் குறித்து மலையகத்திலுள்ள மூத்த அரசியல்வாதிகள் ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதன்போது, இராணுவ முகாம் கட்டாயம் அமைக்கப்படும். கண்காணிப்பு நடவடிக்கை கருதியே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவ முகாம் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

மலையகத்தில் இராணுவ முகாம் அமைக்கப்படும் அரசின் நடவடிக்கை குறித்து மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் வீ.இராதாகிருஷ்ணனிடம் நாம் வினவியபோது:

இதுதொடர்பாக நாம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினோம். அப்போது இராணுவ முகாம் கட்டாயமாக அமைக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

மக்களின் பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதில் எதுவித உள்நோக்கமும் இல்லை. - என்றார். (ச)

## பாண்டிருப்பு பகுதியில் வெட்டுக் காயங்களுடன் சடலம் மீட்பு

அம்பாறை,டிசெ.12

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள இரும்புத் தொழிற்சாலையிலிருந்து வெட்டுக் காயங்களுடன் இளைஞரொருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையில் உறங்கிக் கொண்டிருந்த காவலாளியும் வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாண்டிருப்பு, இரண்டாம் பிரிவைச் சேர்ந்த இரும்புத் தொழிற்சாலை உரிமையாளரின் மகனாக சுந்தரலிங்கம் ரஞ்சித் (வயது 17) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த உதயன் என்ற காவலாளியே வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இவர்கள் தமது இரும்புத் தொழிற்சாலையில் உறங்கிக் கொண்டிருந்தபோது, கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## மாணவர்களுக்கு பால் வழங்க நிதி

அம்பாறை,டிசெ.12

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்ல மாணவர்களுக்கு நாளாந்தம் ஒரு கோப்பை பால் வழங்கும் திட்டத்துக்காக 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கனடாவிலுள்ள உதவும் கரங்கள் அமைப்பு, கல்முனை நகர லயன்ஸ் கழகத்தினூடாக இந்த நிதியுதவியை வழங்கியுள்ளது. (ச)

## தொழிலாளரை இடைநிறுத்திய நிர்வாகம்

பொகவந்தலாவை,டிசெ.12

ஹற்றன் எபோட்ஸ்லி தோட்டத்தின் மொண்டிபெயார் டிவிசன் தொழிலாளர்கள் அனைவரையும் தோட்ட நிர்வாகம் கடந்த வெள்ளிக்கிழமை திடீரென வேலையிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிக கொழுந்து பறிக்க மறுத்த காரணத்தினாலேயே தொழிலாளர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு கால்நடை அபிவிருத்தி முக்கியம்

### அமைச்சர் ஆறுமுகன் தொண்டான் தெரிவிப்பு

கொழும்பு, டிச.10

தேசிய கால்நடை உற்பத்தித்துறை இலங்கையின் இன்றைய மக்கள் தொகைக்கேற்ப மாற்று பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியாக உள்ளது என்று கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அவிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டான் நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் மீதான வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

கால்நடை உற்பத்தியில் பால், பாலுற்பத்தி பொருள்கள், இறைச்சி வகைகள், முட்டை போன்றன மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்கின்றன. மேற்குறித்த உற்பத்திகளின் மூலம் மக்களின் மாற்றுப் பொருளாதாரம் உயர்கின்றது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் பேணுவதற்கு உலக தரத்துடன் உற்பத்தி திறனை நிர்ணயித்தல், இயந்திரமயமாக்கல் என்பன மிகவும் அவசியமாகும்.

மஹிந்த சிந்தனைக்கு அமைவாக எனது அமைச்சு கடந்த ஒன்றறை வருடங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து சுமார் 540 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையில் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இந்த நிறு வனங்கள் யாவும் மக்களின் வாழ்க்கைத் தர உயர்வை நோக்காகக் கொண்டு இயங்குகின்றன -என்றார். (ச)

## மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் பாதுகாப்புக்கே இராணுவ முகாம்

மேல்கொத்மலையில் அமைக்கப்படும் நீர்த்தேக்கத் திட்டப்பகுதியின் பாதுகாப்புக் கருதியே வட்டகொடவில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம் தற்காலிகமானது . அங்கு நிர்க்கதியாகியுள்ள மக்கள் தொடர்பாக அரசே நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உபய மெதவெல தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தின் வட்டகொட தோட்டத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாகப் பல்வேறு பிழையான கருத்துகள் பரவியுள்ளன.

இராணுவத்தினரைக் களங்கப்படுத்தும் வகையிலும், அரசின் நல்லெண்ணச் செயற்பாடுகளை இழிவுப்படுத்தும் நோக்கிலும் இப்படியான கட்டுக்கதைகள் பேசப்பட்டு வருகின்றன. ஆயினும், மேல்கொத்மலை திட்டத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவே இந்த இராணுவமுகாம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நீர்த்தேக்கத் திட்ட வேலைகள் முடிவுக்கு வந்த பின்னர் அங்கிருந்து இராணுவமுகாம் அகற்றப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இராணுவ முகாம்களை நிறுவி வருகின்றோம். மக்களை அடக்கியாளும் பிழையான செயற்பாடுகளுக்கு அல்ல.

இந்தப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு வசித்த மக்கள் நிர்க்கதியாகியுள்ள விடயம் எம்முடன் சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. எனவே, அது குறித்து அரசிடம்தான் கேட்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## மாணவன் துஷ்பிரயோகம்; விசாரணை செய்யக் குழு

பேராதனை, டிசெ.12

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒருவர் சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேசத்துக்குப் பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வைத்திய அதிகாரியின் அனுமதி கிடைக்காமையால் பாதிக்கப்பட்ட மாணவனிடம் வாக்குமூலம் பதிவுசெய்யும் நடவடிக்கை தாமதமடைந்ததாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த மாணவனின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக பல்கலைக்கழக மட்டத்திலும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பிரதித் துணை வேந்தர் [illegible] வீரசிங்க தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மாவுக்குள் ஹெரோயினை மறைத்து சிறைக்குள் செல்ல முயன்ற நபர் கைது

கண்டி, டிசெ.12

கண்டி, போகம்பரை சிறைச்சாலைக்குள் ஹெரொயின் போதைப் பொருளைக் கொண்டு செல்ல முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பால்மா பைக்கற் ஒன்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் ஹெரோயினை மறைத்துவைத்துக் கொண்டு சிறைச்சாலைக்குள் செல்ல முயற்சித்துள்ளார் என்று மத்திய மாகாண பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகள் இந்த நபரை சோதனையிட்டபோது பால்மா பைக்கற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் மாகாண பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டார் எனப் பொலிஸார் கூறினர். சந்தேக நபரிடமிருந்து 3.9 கிராம் நிறையுடைய போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர் கலேவெல பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்கள் சொல்வதைக் கேட்காமல், மனதில் பட்டதே சரியென என்று நினைத்துச் செயற்படுவீர்கள். முக்கிய வேலையாக சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பெற்றோருடன் சில விடயங்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். நல்ல நாள்.

**இடபம்:**
ஆரம்பித்த வேலை ஒன்றை, ஏதோ சில காரணங்களால் பாதியில் விட்டுவிடலாம். கணவன், மனைவி இடையே சிறு மனஸ்தாபம் ஏற்பட்டு பின்னர் சரியாகும். உடன் பிறப்புக்கள் மீதான பாசம் அதிகரிக்கும். தேவையற்ற விவாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க, கணிசமான பணத்தைச் செலவிடலாம்.

**மிதுனம்:**
புதிய முயற்சிகளில், தங்கு தடையற்ற வெற்றி கிடைக்கும் நாள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பொருள் வரவுகளையும் பெறலாம். சில விடயங்களில், வீணாகத் தலையைக் கொடுத்து விட்டு அவதிக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்கள் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.

**கடகம்:**
பல நாள் எதிர்பார்ப்புகள் இன்று பூர்த்தியாகும். தொலைபேசி வழியில் அல்லது நண்பர்கள் மூலம் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். சில வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகரிப்பீர்கள். சில விடயங்களில் நீங்கள் தவறு செய்து விட்டு மற்றவர்களிடம் சண்டை போடுவீர்கள்.

**சிங்கம்:**
பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும் நாள். நண்பர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். உறவினர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். சிலரிடம் இருந்து வரவேண்டிய பணத்தைகக் கேட்டுப் பெறுவீர்கள். சில வேலைகளைத் தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள். வழக்கத்தை விட கூடுதல் நேரம் தூங்கலாம்.

**கன்னி:**
கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்களின் திறமையான செயல்பாடுகளை பார்த்து, மற்றவர்கள் பொறாமைப்படுவர். கடன் பாக்கிகளை திருப்பிக் கொடுப்பதில், அக்கறை காட்டுவீர்கள். நடக்குமோ நடக்காதோ என பயந்த காரியம் ஒன்று, நல்ல விதமாக நடந்து விடும். பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

**துலாம்:**
வழக்கத்துக்கு மாறாக விரைவாக சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் சிலரின் ஆலோசனையால், உங்களின் முடிவுகளில் மாற்றங்களை உண்டாக்கலாம். உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுக்கலாம்.

**விருச்சிகம்:**
சேமிப்பாக வைத்திருந்த பணத்துக்குச் செலவு ஏற்படலாம். உறவினர்கள் சிலரின் வருகையால், உங்களின் வேலைகளில் மாற்றங்களைச் செய்வீர்கள். உல்லாசமாகப் பேசும் சிலரைப் பார்த்து, மனதிதுக்குள் பொறாமைப்படுவீர்கள். பயணங்களின் போது, வாகனங்கள் பழுதாகி தொந்தரவு கொடுக்கலாம். வாக்குவாதங்களால் அதிருப்தி நேரும்.

**தனுசு:**
சோர்வு, சோம்பல் இல்லாமல் உற்சாகம், தெம்புடன் செயற்படுவீர்கள். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். அயலார் மத்தியில், செல்வாக்கு அதிகரிக்கும். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:**
செலவில்லாமல் சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உடல் உபாதைகள் குறைந்து, உற்சாகம் பெறுவீர்கள். சிக்கலில் இருக்கும் ஒருவருக்குக் கை கொடுத்து உதவி, பெருமைப்படுவீர்கள். பெண்கள் தொடர்பான வகையில், சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பிள்ளைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:**
வியக்க வைக்கும் அல்லது அதிர்ச்சி அளிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். உங்களை ஏமாற்ற நினைத்த ஒருவர், நீங்கள் உஷாராக இருப்பதால், ஏமாந்து போகலாம். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உடன் பிறப்புக்களால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். பண விவகாரங்களில் யாருக்கும் பிணை கொடுக்க வேண்டாம்.

**மீனம்:**
எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்க மனமில்லாமல், நீங்களே செய்ய முற்படுவதால் சிரமப்படலாம். சொல்வாக்கைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருப்பீர்கள். உறவினர்கள் சிலர், உங்கள் மூலம் காரியம் சாதிக்க முற்படுவர். மற்றவர்களின் நிர்ப்பந்தங்களின் பேரில், சில வேலைகளைச் செய்வீர்கள். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

# நெருப்புக் கா... முதலிடம் வ... யாழ். மா...

வாழை இலையில் உணவு போடும் உணவகம் அது! நீர் தெளிந்த வாழை இலைகளைத் துணிப் பொட்டலம் ஒன்று அழகாகத் துடைக்கும், இல்லை - இலையில் உள்ள பறவை எச்சத்துடன் அனைத்து ''ஊத்தை''களையும் பூசிவிடும் அந்தத் துணிப் பொட்டலம்... அந்த ஒரே பொட்டலம் தான் பல இலைகளில் பல நாள்களாகப் பூசுகிறது.

மற்றொரு கடை அங்கு திசுத்தாளில் உணவு போடுகிறார்கள். ஒன்றோடு ஒன்று ஒட்டி இருக்கும் திசுக்களை அங்கு உணவு பரிமாறுபவர் ''வெற்றிலை'' நிறைந்த வாயால் ''ஊதிப்'' பிரிக்கிறார்.. எச்சில், திசுத்தாள்களை நன்றாக ஈரப்படுத்திவிடும்.

✱ இந்தக் கடையில் சமையற்காரரின் கையில் கத்தரிக்காய் வெட்டப் போய் விரல் போய்விட்டது. காயம் என்றாலும் ''போராட்டத்தின்'' மத்தியில் சுவையாகச் சமைக்கிறார்...!

இப்படிக் காணக்கூடிய கூத்துக்களும் கண்ணுக்குத் தெரியாத கூத்துக்களும் உணவகங்களில் ஏராளம். அசுத்தத்தின் விளைவாக நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, உணவு நஞ்சாதல் என நாம் அனுபவிக்கும் நோய்களின் பட்டியல்களும் நீண்டு கொண்டே செல்கின்றது.

கடந்த ஆண்டு இலங்கையில் உள்ள மாவட்டங்களில் நெருப்புக் காய்ச்சலால் முதலிடம் பெற்றது யாழ்ப்பாணம். இந்த ஆண்டும் அதிகளவு நெருப்புக்காய்ச்சல் நோயாளர்களைத் தன்னகத்தே கொண்டு அந்த இடத்தை இதுவரை தக்க வைத்து முதலிடம் பிடித்து வருகிறது. வாழ்க யாழ்ப்பாணச் சுகாதாரத்துறை...!

நெருப்புக் காய்ச்சல் ''சல்மொனில்லா'' எனும் வகை பக்றீரியாவினால் ஏற்படுகிறது. ''குத வாய்வழி மூல மலத்தொற்று'' மூலம் பரவுகின்றது. அதாவது நெருப்புக் காய்ச்சலுக்கு உட்பட்ட நோயாளியினது மலத்தின் பகுதியை மற்றொருவர் வாய் வழி மூலம் உள்ளெடுப்பதனால் நோய் ஏற்படுகிறது. இது சுகாதாரச் சீர்கேட்டின் உச்சம்! இந்தநோயால் பீடிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அருவருக்க வேண்டிய விடயம்! இதில் தான் யாழ்ப்பாணம் முதலிடம்!

**பஞ்சவர்ணன்**

யாழ்.நகரை அண்டிய பகுதியில் கழிவு வாய்க்கால்கள் அதிகம். வைத்தியசாலை வாய்க்கால்களும் தாராளமாகக் கிருமிகளைக் கொண்டுள்ளது. வீடுகளின் நெருக்கமும் அதிகம். எனவே மலசல கூடமும் நெருக்கமாகக் காணப்படுகிறது. மழைக்காலத்திலே இவற்றின் நீர்மட்டம் உயருகின்ற போது குடிதாண்ணீருடன் இவை தொடுகை அடையும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இலையான் போன்ற காவிகள் மூலமும் நேரடித் தொடுகை மூலமும், உணவு மூலமும் கிருமிகள் உடலை அடைகின்றன. நீரோட்டத்தை சீராக்கி வடிகால் அமைப்புக்களை ஒழுங்காக்க வேண்டியதன் அவசியத்தை உரியவர்கள் எவரும் உணரவில்லை. நகரில் அசுத்தத்தின் அடையாளங்களில் சிறந்த உதாரணங்களில் ஒன்று ஆரிய குளம். மாநகர சபை ''தை''க்கு பொங்கி விழா வைக்கிறதோ இல்லையோ. மழை காலம் முடிவதற்குள் யாழ்ப்பாணம் (வைத்திய சாலைகள்) நோயாளர்களால் பொங்கி வழியும்!

நோய்வர முக்கிய காரணங்களில் உணவகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றது. உணவகங்களை ஒழுங்குபடுத்த ''உணவுச்சட்டம்'' (1980 ஆம் ஆண்டும் 26 ஆம் இலக்கச் சட்டம்) பல விடயங்களை உள்ளடக்கி உள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், உணவு ஒளடதப் பரிசோதகர் எனப் பலரது சிபாரிசுடன் உள்ளூர் அதிகார சபை (மாநகர சபை/ பிரதேச சபை) உணவுச் சட்டத்தின் கீழ் உணவகங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குகிறது.

**அனுமதிப்பத்திர சிபாரிசு**

உணவகம் காசாளர் பகுதி, விநியோகப் பகுதி, களஞ்சியம், உணவு தயாரிக்கும் இடம், தொழிலாளர் ஓய்வு அறை என்பன தனித்தனியே இருத்தல் வேண்டும். காற்றோட்டத்துடன் வெளிச்ச வசதியான கட்டடமாகவும், கூரையின் கீழ் சீலிங் பொருத்தப்பட்டும் இருக்க வேண்டும். குப்பைத் தொட்டியும் தனியே இருக்க வேண்டும்.

தொழிலாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு என மலசல கூட வசதி, குளோறினேற்றப்பட்ட சுத்தமான நீர்விநியோகம் என்பனவும் அவசியம். தொழிலாளர்கள் வெற்றிலை பாக்கு பாவிக்கக் கூடாது. நகம், தலைமுடி ஒழுங்காக வெட்டி இருக்க வேண்டும். வருடத்துக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து சான்றிதழ் வைத்திருப்பதுடன் பாதுகாப்பு உடையும் அணிந்து



தொழிலில் ஈடுபட வேண்டுமென தனிநபர் சுகாதாரமும் பேசுகிறது சட்டம்.

கடையின் சுவர் தரையில் இருந்து சீலிங் வரை 10 அடிக்குக் குறையாது இருத்தல் வேண்டும். களஞ்சியத்தில் உணவுப் பொருள்கள் சுவரில் இருந்து 5 அங்குலமும், நிலத்தில் இருந்து 18 அங்குலமும் இடைவெளியில் களஞ்சியப்படுத்தப் படல் வேண்டும். எலி, கரப்பான், எறும்பு, அணில் போன்ற கொறிப்பன இருத்தல் ஆகாது. ஈயும் இருக்கக் கூடாது. உணவுகள் மூடி வைக்க வேண்டும். திண்மக் கழிவகற்றல் ஒழுங்கான முறையில் தினமும் வாடிக்கையாளர்களுக்கு இடையூறு அற்ற விதத்தில் அகற்றப்பட வேண்டும். இப்படிப் பல விதிமுறைகளுக்கு அமையவே உணவகங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் வாடிக்கையாளர்கள் பார்க்கக் கூடியவாறு காட்சிப்படுத்தப்படவும் வேண்டும்.

இவற்றில் வாடிக்கையாளர் குறை கண்டால் 'உணவுச் சட்டத்தின்' கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். உணவின் மாதிரி, சாட்சிகள், புகைப்படம் போன்றவற்றின் மூலம் பகிரங்கப் படுத்த வேண்டும். ஆனால் மக்கள் பேசாப் பொருள்களாக இருப்பது தவறுவிடுபவர்களுக்குத் துணைபோவதாக உள்ளதுடன் உண்ணப் போய்ப் பணம் கொடுத்து நோய்களையும் வாங்கிச் செல்வது வேதனைக்குரியது.

அடுத்து நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களால் யாழ்ப்பாணம் அச்சுறுத்துவது சுற்றுலாப் பயணிகளின் அளவற்ற வருகை. சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குப் பொருத்தப்பாடு இல்லாத கட்டடங்கள் காசுக்காக தங்ககங்கள் ஆகின்றன. தனி அறையைக்கூட ஹோட்டலாக்கிய கெட்டிக்காரர் யாழ்ப்பாணத்தில் உள்ளார்கள்.

தங்ககம் ஒன்று நிறுவுவதற்கு அளவுப் பரிமானம் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் ஆண்கள், பெண்களுக்கு எனத் தங்குமிட அறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யச்சலில்
# கிக்கும்
# வட்டம்



ந்த ஆண்டு இலங்கையில்
ள்ள மாவட்டங்களில்
நருப்புக் காய்ச்சலால்
தலிடம் பெற்றது
ழ்ப்பாணம். இந்த ஆண்டும்
திகளவு நெருப்புக் காய்ச்சல்
ாயாளர்களைத் தன்னகத்தே
காண்டு இந்த இடத்தை
துவரை தக்க வைத்து
தலிடம் பிடித்து வருகிறது.
ாழ்க யாழ்ப்பாணச்
காதாரத்துறை...!

சல கூடம், குளியலறை என்பன அமை
ண்டும். சமையலறை, நீர்வழங்கல் முறை,
றல் முறை போன்றன சரிவர அமைதல்
ம். ஊழியர்களின் பாவனைக்கு பிறிதாக
வை பேணப்படல் வேண்டும். பெரும்
இப்படியான ஹோட்டல்கள் மக்கள்
ப்புப் பகுதிக்குள் அமைக்காமல் ஒதுக்
ான, அல்லது கடற்கரைப் பகுதிகளி
அமைப்பது வழமை. இவற்றையெல்லாம்
னிக்கச் சுற்றுச் சூழல் அதிகாரி, சுகாதார
ய அதிகாரி, பொதுச்சுகாதாரப் பரிசோத
டமிடல் பிரிவு போன்றன இருந்தும் என்ன
ன்றுள்ளது. மாநகரசபை, அல்லது உள்ளூ
சபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை
ன் செய்கிறதோ! அல்லது என்னத்தை
இவற்றை வேடிக்கை பார்க்கிறதோ? யார்
! பாவம் மக்கள்.

# பாடசாலை நூலகங்களும் வாசிப்புப் பழக்கமும்

வாசிப்பு என்ற பதத்தின் அர்த்தம் சிக்கல் தன்மை வாய்ந்தது. இப்பதமானது பல அறிஞர்களால் பல வடிவங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. Bellenger என்ற அறிஞர் வாசிப்பு என்பது ஒருவர் தன்னைத் தானே பக்தியுடன் அல்லது மந்திரயாலத்துடன் ஈடுபடுத்துவதாகும் என்று கூறியுள்ளார். ''ஒருவர் வெளி உலகில் இருந்து கற்பனையுள் பிரவேசிப்பதாகும். அதாவது அவர் வெளி உலகப் பிரச்சினையில் இருந்து விடுபட்டு தப்பிக் கொள்வதற்கான ஒருவழியாக உள்ளது'' என்கிறார்.

வாசிப்புத் தொழிற்பாட்டுக்கு வாசகனுக்கு போதிய அறிவும் மொழித் தேர்ச்சியும் அவசியமாகும். இதை மாணவர்களிடையே சிறுபராயத்திலிருந்தே விருத்தி செய்தல் அவசியமாகும். மாணவர்களுக்கு தொடர்ச்சியான, ஒழுங்குமுறையான வாசிப்பு அவசியமாகும். இவை பற்றிய அறிவு ஆசிரியர்களுக்குத் தேவையானது. பொதுவாக இடைநிலை வகுப்பு காலங்களின்போது தான் அநேக மாணவர்கள் தமது வாசிப்பு விருப்பங்களை சீரமைத்துக் கொள்கின்றனர். இந்தப் பழக்கங்களை தமது தனிப்பட்ட, தொழில் ரீதியான வாழ்க்கையில் பயன்படுத்துவர். இதற்கான வழிகாட்டலும் நடைமுறையும் மாணவர்களின் இடைநிலை வகுப்புகளில் சரியான முறையில் வழங்கப்படவேண்டும். பல்வேறு வகையான விடயங்களை வாசிக்க போதிய சந்தர்ப்பங்களையும் நேரத்தையும் வழங்கி வெற்றிகரமான வாசிப்பை வாசகர்களுக்குப் பெற வாய்ப்பளிக்கும் பொறுப்பு ஆசிரியர் கையில் உள்ளது.

நவீன கல்வித் திட்டத்தில் இலங்கையில் மாணவர்களதும் ஆசிரியர்களதும் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் பாடசாலைகளில் நூலகங்களை அமைத்து வருகிறது. அதாவது ஆசிரியர்களின் வாய் மொழிப் போதனை மட்டும் போதுமானதல்ல. சுயகற்றல், அறிவு சார்ந்த தொடர் நிகழ்வு அவசியம் என்ற வகையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தகவல் யுகத்தில் வாழும் நாம் வாசிப்புப் பழக்கத்தின் மூலம் தான் எம் புதிய அறிவை நாளுக்கு நாள் விருத்தி செய்து போட்டி நிறைந்த சமுதாயத்தில் உயிர் தப்பி வாழ முடியும். பெரும்பாலான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையும் நோக்குடன் வாசிக்கின்றார்கள். இத்தகைய வாசிப்பு பயனற்றது.

வாசிப்பு மகிழ்ச்சிகரமானதாகவும், சிறந்த அறிவாளியாவதற்கு செய்யும் செயற்பாடாகவும் அமைய வேண்டியது முக்கியமானதாகும். வாசிப்பின் மூலம்

* உணர்வு ரீதியான மனநிதானம் ஏற்படும்
* மன மகிழ்ச்சியான மணித்தியாலமாக மாறும்
* கடினமான அனுதாபத்தை பகிரும் தன்மை உருவாகும்
* பரந்த உலகில் புதிய விடயங்களை அறியும் ஆற்றல் ஏற்படும்
* புதிய அறிவை வளர்க்கும் சந்தர்ப்பத்தை உருவாக்கும்
* எழுத்தறிவு மட்டத்தை உயர்த்தும்
* சமூகத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் உலக சமாதானத்தை ஏற்படுத்தவும் வழிவகை செய்யும்
* ஒரு தன்னம்பிக்கையான ஆளுமை வளரும்
* சமய, கலாசார, பண்பாடு இலக்கியம் சம்பந்தமான அறிவு வளரும்

எனவே பாடசாலை நூலகங்களின் வாசிப்பை மேம்படுத்துவதற்கான விரிவாக்கல் சேவையை பின்வரும் முறைகளினூடாக வழங்க முடியும்.

* பாடசாலை நூலக கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்
* புத்தகக் கண்காட்சியை நடத்துதல்
* வாசகர் வட்டங்களை நடைமுறைப்படுத்தல்
* வகுப்பறை நூலகங்களை உருவாக்குதல்
* தொங்கு நூலகத்தை அமைத்தல்
* கதை நேரத்தை நடைமுறைப்படுத்தல்
* பத்திரிகை வாசித்தல்
* நூலக வாரத்தைக் கொண்டாடுதல்
* சிறந்த நூலக பாவனையாளருக்கான விருதை வழங்கல்
* சுவரொட்டிகளை உருவாக்குதல்
* பிறந்தநாள் பரிசுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

இவ்வாறான திட்டங்கள் மூலம் பாடசாலை நூலகங்களில் மாணவர்களின் வாசிப்பு வீதத்தினை அதிகரிப்பதன் ஊடாகப் பாடசாலையின் தூர நோக்கினையும் வெற்றி கொண்டு கல்வியின் தேசிய குறிக்கோளை அடைவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும் நிச்சயமாக எட்ட முடியும்.

எனவே பாடசாலை நூலகச் செயற்பாடுகளை அதிபரின் வழிகாட்டலின் கீழ் ஆசிரிய நூலகரும், நூலகப் பொறுப்பாசிரியரும் திறம்பட திட்டமிட்டு, தீர்மானமெடுத்து ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

திருமதி சிவமதி திருமாறன்,
ஆசிரியர் நூலகர்,
புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

# யாரை எங்கே வைப்பது



முன்னொரு காலத்தில் ஓர் அரசருக்கு, நாள்தோறும் பணி புரியும் சிகை அலங்கார நிபுணருக்கும், காவல் புரியும் சேனாதிபதிக்கும் கருத்து வேறுபாடு தோன்றிவிட்டது. அரசர் சேனாதிபதியை நம்புவதை விடவும் சிகை அலங்கார நிபுணரை. அதிகம் நம்பினார் தமது நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகள் அரண்மனைச் செலவுகள் பற்றியெல்லாம் அவரிடம் சொல்லிக் கவலைப்பட்டார்.

படையால் அதிக செலவு ஆகிறது என்று மன்னன் வருந்தினார் மன்னருக்கு காவலுக்கு ஐம்பது, நூறு நாய்கள் வளர்த்தால் போதும் எதற்கு இவ்வளவு வீண் செலவு . பெரும் படை அதற்கொரு சேனாதிபதி .... எல்லாவற்றையும் குறைத்துவிடலாம் என்று இவர் யோசனை கூறினார். மன்னரும் அதை உடனே நிறைவேற்றி விட்டார்.

சேனாதிபதிக்கு வேலை போய் விட்டது. ஒரு வருடத்தில் எதிரி மன்னர் இதைத் தெரிந்து கொண்டு பெரும் படையுடன் ஒரு நாள் காலை அரண்மனையைத் தாக்கிய போது காவல் நாய்கள் பயந்து ஓடி விட்டன. மன்னரும் சிகை அலங்கார நிபுணரும் எப்படியோ தப்பி ஓடி வேற்று நாட்டில் அடையாளம் தெரியாதபடி நுழைந்து விட்டனர்.

அங்கே எப்படி பிழைப்பது? எப்படிச் சாப்பிடுவது? என்று மன்னர் புலம்பியதும் கவலைப்படாதீர்கள். என் கைவசம் இன்னும் ஒரு கத்தி இருக்கிறது. தொழிலை உங்களுக்கும் கற்றுத் தருவேன். இருவரும் பிழைத்துக் கொள்ளலாம் என்றார் அந்த நிபுணர். மன்னர் சேனாதிபதியை மதித்திருந்தால் நாட்டைக் காப்பாற்றி இருக்க முடியும் அல்லவா.

எல்லோரையும் மதிப்பது அவசியம் ஆனாலும் எந்த விடயத்தில் யாருடைய இடம் எது என்பதில் தெளிவு அவசியம் . அதிகம் உழைத்த காலத்தில் தன் மனைவி சொல்படி முழுச் சொத்துக்களையும் தன் மைத்துனர் நிர்வாகத்தில் விட்டுவிட்டு பின்னாளில் மிகத் துன்பப்பட்ட தொழிலதிபர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். தன் தந்தையின் பிடிவாதம் என்பதற்காகவே கிராமத்தில் பெரிய வீட்டைக் கட்டிவிட்டு வாழவும் முடியாமல் விற்கவும் முடியாமல் சிரமப்பட்டவர்கள் சிலரை நான் அறிவேன். தந்தையாகவே இருந்தாலும் எந்த விடயத்தில் யாருடைய இடம் எது என்கிற தெளிவே உங்களை உயர்த்த முடியும் என்பதை உணருங்கள்.

ஒரு பெண்ணுக்குத் திருமணம் ஆன முதல் நாள்... ஐம்பது வயது மதிக்கத்தக்க உறவுக்காரப் பெண்மணி ஒருவர் பெண்ணுக்கு வாழ்த்து சொல்ல வந்தார். தனியாக அழைத்து கணவனைக் கைக்குள்ள வைத்திருக்க வேண்டும் என்று வாழ்க்கை ரகசியங்களை உபதேசிக்கத் தொடங்கினார். மிரண்டுபோன புதுமணப்பெண் அதெப்படி என்று தயங்கியபடி கேட்டாள்.

மிரட்டிவை என்கிறேன். நான் அப்படித்தான் கல்யாணம் ஆன முதல் நாள் அவரிடம் சொல்லிவிட்டேன். முதலாம் திகதி என்றால் சம்பளம் முழுக்க என் கைக்கு வந்துவிடனும் அலுவல் இல்லாமல் எங்கேயாவது போனால் நான் பத்திரகாளி ஆயிடுவேன்... என்ன செலவானாலும் ஒரு காசு என்றாலும் என்னிடம் சொல்லிவிட்டுத்தான் செலவு செய்ய வேணும் என்று சொல்லிவிட்டேன். நீயும் அப்படியே சொல்விடு என்றது பாட்டி.

சரி.... உங்கள் வீட்டில் நீங்கள் சொன்ன மாதிரியே நடக்கிறாரா? பயந்துகொண்டே ஒழுங்காக இருக்கின்றாரா? என்று கேட்டாள் புது மணப்பெண். பாட்டி சொன்ன பதில்தான் நல்லது.. யாருக்குத் தெரியும்.... சொன்னேன் பாருங்கோ அன்றைக்கு வீட்டை விட்டு போனவர்தான்.... இன்றைக்கு வரைக்கும் வரவே இல்லை என்றது பாட்டி. கணவனை விட்டு விட்டு இருக்கும் தனக்குப் பேச்சுத் துணைக்கு இந்தப் புது மணப்பெண்ணையும் சேர்க்கும் புதுயோசனை பாட்டிக்கு!

வேடிக்கையில்லை.... இது மாதிரி கண்டவருக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்கள் முழு வாழ்வையும் தொலைத்த முட்டாள்கள் உலகத்தில் இல்லையா என்ன? அதிகமானோர் இருக்கிறார்கள். பகவான் இராம கிருஷ்ணரைப் போன்ற புண்ணியர்களே தம் உறவுக்காரப் பையனை உதவிக்கு வைத்துக் கொண்டு கருணையால் பட்ட கஷ்டங்கள் ஒன்றா? இரண்டா? அவரைப் படாதபாடு படுத்திவிட்டான்.

இன்று பல குடும்பங்கள், இயக்கங்கள், நாடுகள் துன்பப்பட ஒரே காரணம் யாரை எங்கே வைப்பது என்பது யாருக்கும் தெரியலே என்கிற அனுபவ வரிகள்தான்!

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 29 மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் த.தயாபரன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை மற்றும் பாடசாலை அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடன் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் (எ–207)

# பேராசிரியர் கைலாசபதி எழுத்து சீர்திருத்தம் பற்றி அன்று பேசியதால் 13 எழுத்துகள் சீர்திருத்தப்பட்டன

**"இந்து இளைஞன்" நூல் வெளியீட்டில் ஆறு.திருமுருகன்**

யாழ்ப்பாணம், டிசெ.12

பேராசிரியர் கைலாசபதி இதே பாடசாலையில் அன்று இடம்பெற்ற தமிழ்த்தின விழாவின் போது எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பேசினார். பின்னர் உலக தமிழராய்ச்சி மன்றத்தில் 13 எழுத்துக்கள் சீர்திருத்தப்பட்டன என ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

யாழ்.இந்துக்கல்லூரியின் ''இந்து இளைஞன்'' எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா தலைமையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்:

பேராசிரியர் கைலாசபதி அன்று ஆற்றிய எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய தீர்க்கதரிசனமான உரை ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் பரிசளிப்பு விழா நூலில் ஓர் அறிக்கையாக வெளிவந்த வண்ணம் உள்ளது.

பேராசிரியர் கைலாசபதி அன்று தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தம் பற்றி ஆற்றிய உரையினை மறக்கமுடியாது.

யாழ். இந்துக்கல்லூரிக்கென்று தனித்துவமான பண்பு, ஒழுக்கக் கோவை, சம்பிரதாயங்கள் என்பன உண்டு. இலங்கை கல்வி நூற்றாண்டு விழாவிலே இந்துக் கல்லூரியின் சாதனைகள் பற்றி தமிழ் ஆங்கில மொழிகளில் நூல் வெளியானமை பெருமைக்குரிய விடயமாகும். இன்று வெளியிடும் இந்து இளைஞன் எனும் நூல் 70 ஆவது மலரை எட்டியுள்ளது. மாணவர்கள் பாடசாலை நாள்களில் ஆக்கங்கள் எழுதுவது, மேடை ஏறுவது, போட்டிகளில் பங்கு பெறுவது போன்ற வாய்ப்புகளை தவற விட்டு விடாதீர்கள்.

பாடசாலையின் நூல் வெளியீட்டில் ஒவ்வொரு மாணவர்களும் ஆக்கங்களை எழுதி சாதனைகளைப் பதியுங்கள். பாடசாலைக்கு வெற்றியைத் தேடிக் கொடுங்கள். அவ்வாறு புகழ் தேடிக் கொடுக்கும் மாணவர்களைக் கல்லூரி என்றும் மறவாது.

பாடசாலையினை கோயிலாக, புனிதமாகப் பேண வேண்டும். யாழ். இந்து இளைஞன் நூலானது ஓர் அறிவுப் பெட்டகம். பல அறிஞர்களும் பேராசிரியர்களும் எழுதி சாதனை படைத்த நூல் ஆகும்.

இதற்கு முன்வந்த நூல்களையும் சற்று திரும்பிப் பாருங்கள். எவ்வளவு அழகான ஆழமான கருத்துக்களை பதித்துள்ளது. அவற்றில் ஆக்கங்களை எழுதிய ஒவ்வொரு மாணவனும் தற்போது உயர்ந்த பதவியில் அறிஞர்களாகவும் திகழ்கின்றனர். ஆகவே மாண வர்கள் உங்கள் ஆக்கங்களை எழுதி நூல்களை ஆவணப் படுத்திக் கொள்ளுங்கள் - என்றார்.

(எ-311)

# 2011ஆம் ஆண்டுக்கான கலாபூசணம் விருது பெறுவோர்

*(கடந்த வெள்ளித் தொடர்ச்சி)*

திருநகரைச் சேர்ந்த செல்வராணி சோமசேகரம்பிள்ளை (இசைத்துறை), திருக்கோவிலைச் சேர்ந்த சி.வி.பி.மாணிக்கம் (கவிதைத்துறை), கந்தர்மடத்தைச் சேர்ந்த பாக்கியலஷ்மி நடராஜா (இசைத்துறை), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கிறகோரி இராயப்பு டேவிட் (இலக்கியத்துறை), மீசாலை கிழக்கைச் சேர்ந்த பொன்னையா இராசகுலசிங்கம் (ஓவியத்துறை). மட்டுவில் கிழக்கு பூநகரியைச் சேர்ந்த பொன்னையா தில்லைநாதன் (கலைத்துறை), கிருலப்பனை கொழும்பு 6ஐ சேர்ந்த நீலகண்டன் முத்தையா (நாடகத்துறை), வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த இளையதம்பி பத்மநாதன் (இசைத்துறை), கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14 ஐ சேர்ந்த இராமநாதன் கணபதிப்பிள்ளை (இசைத்துறை) , தெல்லிப்பழையைச் சேர்ந்த மாரிமுத்து நாராயணசாமி (இசைத்துறை), பெரியகட்டைக்காடு நானாட்டானைச் சேர்ந்த அருளானந்தம் செபமாலை (நடிப்புத்துறை), தம்பிலுவில் 1 ஐ சேர்ந்த காசிநாதன் வீரக்குட்டி (எழுத்துத்துறை), காரைதீவு 8 ஐ சேர்ந்த சின்னத்தம்பி இராமநாதன் (இலக்கியத்துறை), கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் மகாலிங்கம் (எழுத்துத்துறை), பருத்தித்துறையைச் சேர்ந்த இராசையா பஞ்சலிங்கம் (நாடகத்துறை), புலோலி தெற்கைச் சேர்ந்த பரஞ்சோதி பரராஜசிங்கம் (கலைத்துறை), கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவராசா (இலக்கியத்துறை), கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த விஸ்வநாதன் சிவஞான சேகரம் (இசைத்துறை), புதுப்பணிச்சவில்லு கொத்தாற் தீவைச் சேர்ந்த கிருஸ்ணன் ஸ்ரீஸ்கந்தராசா (கலைத்துறை), அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இரத்தினவேல் கேதீஸ்வரன் (இசைத்துறை), ஆனைப்பந்தியைச் சேர்ந்த இராசையா ஸ்ரீதரன் (இசைத்துறை) கொக்குவெளி வீதி, பேயாடிக் கூளாங்குளத்தைச் சேர்ந்த முருகையா சண்முகநாதன் (இசைத்துறை), கொழும்பு-13 ஐ சேர்ந்த கதிர்வேல் சிவா பிரதீபன் (நடிப்புத்துறை), திருகோணமலையைச் சேர்ந்த சின்னத்துரை சுந்தரலிங்கம் (எழுத்துத்துறை), கொக்குவிலைச் சேர்ந்த கலாநிதி முருகேசு நவரெத்தினம் (கலைத்துறை), வவுனியாவைச் சேர்ந்த கந்தையா கனகேஸ்வரன் (இசைத்துறை) ஆகியோருக்கு விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

(முற்றும்) (எ-313)

## சிசு உதான சேமிப்புத் திட்டம்

நாவற்குழி, டிசெ.12

கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தில் சுன்னாகம் மக்கள் வங்கியின் கோப்பாய் நீடித்த கரும பீடத்தால் சிசு உதான சேமிப்புத் திட்டம் கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ். இராசமனோகரன் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (எ-121)

## புதிய உறுப்பினர் தெரிவு

வரணி, டிசெ.12

மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. நிர்வாகிகளின் பெயர் விவரம் வருமாறு:-

தலைவர் -சோ.யோகேஸ்வரன், உப தலைவர் - க.கணேசரத்தினம், செயலாளர் - சி.அருணாசலம், உப செயலாளர் - சி.இரவிபாலச்சந்திரன், பொருளாளர் - வ.யோகநாதன், நிர்வாக சபை உறுப்பினர்களாக - வே.துஸ்யந்தன், ந.திபாகரன், வீ.சிவபாதசுந்தரம், செ.விணோதன், க.பொன்னயா, சி.நவரத்தினம், ம.மகராசா, சி.சிவதாசன், கணக்காய்வாளர் - சி.சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-122)

## வைத்திய அதிகாரி கடமையேற்பு

குருநகர், டிசெ.12

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி ப.நந்தகுமார் கடந்த நவம்பர் 11 ஆம் திகதி தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-5)

## தொழில்நுட்ப அலுவலர் இடமாற்றம்

நாவற்குழி, டிசெ.12

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு தொழிநுட்ப அலுவலராக ஏ.ஈ. ஜெயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சங்கானையிலிருந்து இடமாற்றம் பெற்றுக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். வாரத்தில் ஒரு நாள் தீவுகளின் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் கடமையாற்ற உள்ளார். (எ-121)

# மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள்

(கடந்த வெள்ளித் தொடர்ச்சி)

**உயர்தரம்**

எஸ்.பிரதீபா-கிளி/கருக்கை தீவு ம.வி, என்.கமலினி- வவுனியா கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம், வி.மேகலா -வவுனியா கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம்,

என்.நிதர்சனா -யாழ்.உசன் இராமநாதன் ம.வி, எஸ்.டயானா -கிளி.வேரவில் இந்து ம.வி, எஸ்.கயேந்திரன் -வவுனியா வீரபுரம் மணிவாசகர் வித்தி, எம். நிசாந் - மீசாலை விக்னேஸ்வரா ம.வி, சி.மதுஷா - கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி,

கே.கணேந்திரன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, வ.மோகன்றாஜ் -மானிப்பாய் இந்துக் கல்லூரி , பி.சிவதர்சினி- சாவகச்சேரி மகளிர் கல்லூரி,

எஸ்.சிவராம்-சென். ஜோன்ஸ் கல்லூரி, எஸ்.பவித்திரா - மீசாலை வீரசிங்கம் ம.வி, எ.ஜெயவரன்- வவுனியா புதுக்குளம் ம.வி, எஸ்.சரண்யா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**ஆங்கில மூலம் தரம்-9**

எஸ்.சோபிகா-வவுனியா ரம்பைக்குளம் பெண்கள் ம.வி, ரி.சிந்திகா - மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, பி.பெட்சன் மத்தியூ-மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, பி.கஜனி-வவுனியா ரம்பைக்குளம் பெண்கள் ம.வி,

**தரம்-10**

கி.துவாரகா- நெல்லியடி மத்திய ம.வி, ரி.பௌசிகா - வவுனியா ரம்பைக்குளம் பெண்கள் ம.வி, ஆர். பொன்னரசி - யாழ்.மெதடிஸ்த மகளிர் உயர் தரப் பாடசாலை, இ.சோபனா - வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

**தரம்-11**

பி.வைகுந்தன் - ஹாட்லிக் கல்லூரி, ரி.கோகுலன்- ஹாட்லிக்கல்லூரி, கே.லினோஜா- யாழ்.மெதடிஸ்த மகளிர் உயர் தரப்பாடசாலை

**தமிழ் மூலம், தரம் -10**

கே.சத்தியநிரோஜா- செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை, என்.சாஜுகா- கிளி.வன்னேரிக்குளம் ம.வி, வி.நிதர்சனா- கிளி.வன்னேரிக்குளம் ம.வி,

ஜி.பிருசாந்தி-யாழ்.மட்டுவில் சரஸ்வதி வித்தி, ஏ.எப்.ஸ்மிலா - வவுனியா அல்.ஹமியா ம.வி, சி.ஸ்ராலின் கொன்சி- மன்னார் தோட்டவெளி ஆர்.சி

எ.விதுர்சனா- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கே.சயந்தன்- கச்சாய் அ.த.க.பாடசாலை, வி.சதீஸ்- கச்சாய் அ.த.க.பாடசாலை,

பி.சுகன்யா-வவுனியா சிவப்பிரகாச மகளிர் கல்லூரி, கே.கீர்த்தனா- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, எஸ்.கோகிலா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பி.ஹர்சனி-வவுனியா ரம்பைக்குளம் பெண்கள் ம.வி.

**தமிழ் மூலம் தரம்-11**

எஸ்.சண்முகப்பிரியன்- கைதடி குருசாமி வித்தியாலயம், ஜி.கார்த்திகா- இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்ரமணிய வித்தி, வி.மதுகீர்த்தனா- கிளி.வன்னேரிக்குளம் ம.வி.

ரி.சஞ்சியா- வல்வெட்டி- உ.த.க.பாடசாலை, எஸ்.ஜெயநிலா- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி,எஸ்.துஷாந்தன்- மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

என்.சிவஞானசெல்வன்- யாழ்.யூனியன் கல்லூரி, எஸ்.நதுர்ஜா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, எம்.கோகுலசாயி- யாழ்.யூனியன் கல்லூரி.

எஸ்.அருணன்- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, ஜி.கபிலன்- ஹாட்லிக்கல்லூரி, கே.கௌசிகன்-யாழ். மகாஜனக் கல்லூரி.

(முற்றும்) (எ-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைமிக்க காளான் உணவுகள்

கார்த்திகை, மார்கழி மாதம் ஆயின் சந்தைகளில் மரக்கறிகளின் விலையானது அதிகரித்துக் காணப்படும். இதனால் சாதாரண வருமானமுள்ள மக்களின் உணவில் மரக்கறிகளை உள்ளெடுக்கும் அளவு குறைக்கப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் ஒரு வழியாக எமது உணவில் புரதச்சத்தைக் கொண்ட போசணைமிக்க உணவாக காளானை சேர்த்துக் கொள்வது நன்று. யாழ்.மாவட்டத்தில் 100 பயனாளிகளுக்கு காளான் செய்கையை மேற்கொள்வதற்கான உள்ளீடுகளும் பயிற்சிகளும் விவசாயத் திணைக்களத் திட்டங்களின் கீழும் சமுர்த்தித் திட்டத்தின் கீழும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் வழங்கப்பட்டுள்ளன. குடா நாட்டிலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் சராசரியாக ஒரு பிரதேச செயலர் பிரிவில் 5-7 பயனாளிகள் காளான் செய்கையில் ஈடுபடுகின்றார்கள். எனவே உங்கள் உணவுக்குத் தேவையான காளான்களை இவர்களிடமிருந்தும் யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய விற்பனை நிலையத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

போசணைப் பொருள்கள் நிறைந்த காளான்களிலிருந்து பலவிதமான உணவுப் பண்டங்களைத் தயாரிக்க முடியும்.

### சமைப்பதற்குப் பருவமான காளான்

100 கிராம் அறுவடை செய்யப்பட்ட புதிய காளானில் அடங்கியுள்ள போசணைப் பொருள்கள்:

நீர் - 91.0 கிராம், சக்தி- 13 கிலோ கலோரி, புரதம் 2.5 கிராம், கொழுப்பு 0.3 கிராம், கல்சியம் 20 மி.கிராம், இரும்பு 1 மி.கிராம், தயமின் 120 மைக்ரோ கிராம், ரைபோபிளேவின் 500 மைக்ரோ கிராம், நயாசின் 5.8 மி. கிராம், விற்ற மின் சி - 3.0 மி.கிராம்.

### காளான் பொரியல்

காளான் 250 கிராம், மிளகாய்த்தூள் 2 மே.க,மாஜரின் / தே.எண்ணெய் 3 மே.க, ரம்பை, கறிவேப்பிலை 1 நெட்டி, உப்பு 3 கிராம்.

காளானை துப்புரவாக்கிக் கழுவி, பிழிந்து மேலதிக நீரை அகற்றவும், அதனைச் சிறுதுண்டுகளாக வெட்டவும், ஏனைய பொருள்களுடன் சேர்த்து சூடான எண்ணெயில் இட்டு பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும், இது 4-5 பேர்களுக்குப் போதுமானது. மிளகாய்த் தூளுக்குப் பதிலாக மிளகுத் தூள் பாவிக்கலாம். விரும்பின் தேங்காய்ப்பால் சேர்த்துக் கறி சமைக்கலாம்.

### காளான் வறை

காளான் 100 கிராம், மெல்லிய தேங்காய்த்துருவல் 1 கோப்பை, வெட்டிய பச்சை மிளகாய் 3, வெட்டிய சின்ன வெங்காயம் - 3 மேசைக் கரண்டி, கொறுக்காய் / எலுமிச்சம்புளி - பாதி, நீர் - 1டம்ளர் , ரம்பை, கறி வேப்பிலை 1நெட்டி, மாசி அல்லது நெத்தலிக்கருவாடு 10 கிராம், மஞ்சள் தூள் ¼ தே.கரண்டி, உப்பு - 5 கிராம்.

தேங்காய்த் துருவல் தவிர்ந்த ஏனைய பொருள்களைப் பாத்திரத்தில் இட்டு மெல்லிய நெருப்பில் அவிக்கவும், அவற்றை 2-3 நிமிடம் நீர்வற்றும் வரை விடவும், தேங்காய்த் துருவலைக் கலந்து 5 நிமிடம் வறுத்து இறக்கவும், நீர் வற்றும் அளவுக்கு வறுத்தல் வேண்டும், இது 3-5 பேர்களுக்குப் போதுமானது.

### காளான் கறி

காளான் 500 கிராம், பெரிய வெங்காயம் 2, உள்ளி 4 பல்லு, இஞ்சி1 துண்டு, மாஜரீன்/ தே.எண்ணெய் 3 மே. கரண்டி, முந்திரிகைப்பருப்பு 25, மிளகாய்த்தூள் 2 மே.கரண்டி, வெட்டிய தக்காளிப்பழம் 2,முதற் தேங்காய்ப் பால் ½ கப், ரம்பை, கறிவேப்பிலை1 நெட்டி, வெந்தயம் 1 தே.கரண்டி,மஞ்சள் தூள் ¼ தே.கரண்டி, உப்பு - 5 கிராம்.

காளானை நன்கு கழுவி சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டவும், வெங்காயம், உள்ளி, தக்காளி, இஞ்சி, கறி வேப்பிலை, றம்பை என்பவற்றை வெட்டி வைத்துக் கொள்ளவும், பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு காளான், தக்காளி தவிர்ந்த ஏனைய வெட்டிய பொருள்களை அதற்குள் போட்டுத் தாளிக்கவும், அவை பொன்னிறமாக வதங்கியபின் காளான், தக்காளி என்பவற்றைச் சேர்த்து அவற்றுடன் மஞ்சள், மிளகாய்த்தூள், உப்பு யாவையும் சேர்த்து 5 நிமிடம் எண்ணெயில் வதக்கவும், இறுதியில் தேங்காய் முதற்பாலை கலந்து 10-15 நிமிடங்கள் மெல்லிய நெருப்பில் அவியவிடவும். பின் அடுப்பிலிருந்து இறக்கவும், இக்கறி 4-6 பேர்களுக்குப் போதுமானது.

### காளான் சூப்

காளான் - 150 கிராம், தக்காளிப் பழம் 2, பருப்பு ½ டம்லர்,பெரிய வெங்காயம் 1, நீர் 4 டம்லர், உப்பு2 கிராம், மிளகு தூள் 2 தே.கரண்டி.

பருப்பு, தக்காளி, வெங்காயம் என்பவற்றை நீர் விட்டு நன்கு கொதிக்க வைக்கவும்,உப்பு, மிளகுத்தூள் என்பவற்றை அவற்றுள் சேர்த்துக் கலக்கவும் தக்காளித்தோல், வெங்காயத் துண்டுகள் ஆகியவற்றை அகற்றவும், மெல்லிதாக வெட்டிய காளான் துண்டுகளை அதனுடன் சேர்த்துக் கொள்ளவும். அதனை 7 நிமிடம் சூடாக்கவும், இந்தக் காளான் சூப்பை சூட்டுடன் பரிமாறவும்.

### காளான் ஓம்லட்

காளான் - 100 கிராம், தக்காளி 2, முட்டை 2, வெட்டிய பச்சை மிளகாய் 2, வெட்டிய வெங்காயம்1 மே.க, மிளகுத்தூள் - ஒரு தே.கரண்டி, மாஜரீன் ஒரு மே.கரண்டி,கறிவேப்பிலை ஒரு நெட்டி,உப்பு - 2 கிராம்

காளானை நன்கு கழுவி சிறிய துண்டாக வெட்டிக் கொள்ளல், நன்றாக முட்டையை அடித்து அதற்குள் உப்பு, மிளகுதூள் என்பவற்றைச் சேர்த்து கலக்கி எடுக்கவும், அதனைக் காளான் மற்றைய பொருள்கள் என்பவற்றுடன் சேர்த்துக் கொள்ளவும், தாச்சியில் மாஜரீனை இட்டு சூடாக்கிப் பின் சாதாரண ஓம்லட் தயாரிப்பது போல் தயாரிக்கவும்.

### காளான் சான்ட்விச்

காளான் 500 கிராம், கோதுமை மா 100 கிராம், மாஜரீன்/ பட்டர் 100 கிராம், சலட் இலை 100 கிராம், தக்காளி 250 கிராம், பெரிய வெங்காயம் 200 கிராம், கடுது தூள் 1தே.கரண்டி, மிளகுத் தூள் 1 தே.கரண்டி, மஞ்சள் தூள் 1 தே.கரண்டி, உப்பு 5 கிராம், பாண் 1 இறாத்தல்.

**ப. அருந்தவம்**
ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்.

கோதுமை மாவினுள் உப்பு, நீர் என்பவற்றைச் சேர்த்து தடித்த கரைசல் தயாரித்துக் கொள்ளல், துப்புரவு செய்து வெட்டிய காளான் துண்டுகளை கோதுமை மா கரைசலில் தோய்த்து பொன்னிறமாகப் பொரித்தல், கடுகு, மிளகு தூள், உப்பு என்பவற்றை மாஜரீனுடன் கலந்து மெல்லிய பாண் துண்டுக்கு இந்தக் கலவையைப் பூசுதல், பாண் துண்டு இரண்டுக்கிடையில் சலாது இலை, தக்காளிப்பழத் துண்டுகள், வெங்காயத் துண்டுகள் பொரித்த காளான் என்பவற்றை வைத்துப் பரிமாறலாம்.

இவ்வாறாக காளான் பாற்கொதி, காளான் வற்றல் , காளான் சம்பல் , றொட்டி போன்றவற்றையும் தயாரித்து உணவுடன் சேர்த்துக் கொள்ள முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 33 வருட காலமாகக் கொழும்பில் தனது
தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வந்த

# ட்றேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்றமென்ஸ் பி.எல்.சி.

# TRADE FINANCE & INVESTMENTS PLC

(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது)

தனது இரண்டாவது கிளையினை
தமிழ் மணக்கும் மண்ணாம் கிளிநொச்சியில்
இன்று (12.12.2011) திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ளது.
கிளிநொச்சி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த
உங்கள் நகரத்தில் நாங்கள் இப்பொழுது.........................

## எமது சேவைகள்....

- விவசாயத்திற்கான குறுங்கால கடன்கள்.
- வெளிநாட்டு நாணயமாற்று சேவை.
- வாகனங்களைக் கொள்வனவு செய்ய.
- லீசிங் வசதிகள்.
(இருசக்கர, முச்சக்கர மற்றும் விவசாய வாகனங்கள்)
- பதிவு செய்யப்பட்ட வாகன உரிமையாளர் களுக்கு லீசிங் வசதிகள்.
- வாடகைக் கொள்வனவு வசதிகள்.

"எதிர்கால நிதிக் கனவுகளை
நிகழ்காலத்தில் நனவாக்கும் உங்கள் பங்காளன்"

TFI ட்றேட் பினான்ஸ் & இன்வெஸ்றமென்ஸ் பி.எல்.சி.

(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது)

ஏ9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

தொலைபேசி: 0212280108/2280110

Fax: 021 228 0109 E-Mail: tradefik@sltnet.lk

(இலங்கை வங்கி அருகில்)

(14035)(5,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய நோக்கில் உயரிய சேவையாற்றும் கொழும்புத்துறை சென். யோசப் முதியோர் இல்லம்




மனித வாழ்வு என்பது பல பருவ நிலைகளூடாகச் சென்று பட்டறிவுகள் பெற்று முதிர்ச்சி நிலையை அடைகிறது. குழந்தை, சிறுவர், இளைஞர், குடும்பஸ்தர், முதியோர் எனப் பல கட்டங்களை ஒரு மனிதன் சந்தித்தே ஆகவேண்டும். இதில் சில பருவங்களில் பிறரில் தங்கி வாழ்வது மற்றும் சில பருவங்களில் பொறுப்புக்களை ஏற்று பிறரைத் தாங்கி வாழ்வதும், மனித வாழ்வியலின் சக்கரங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆயினும் தங்கி வாழவோ, தனித்து நிற்கவோ முடியாத நிர்க்கதியில் தள்ளப்பட்ட பல பருவநிலை மக்களும் உலகில் உள்ளனர். பெற்றவளால் கைவிடப்பட்ட குழந்தைகள் பெற்றோர் ஆதரவற்ற முதியோர்கள், குழந்தைகள் காப்பகங்களிலும், சிறுவர் மற்றும் அனாதைகள் பராமரிப்பு நிலையங்களிலும் முதியோர் இல்லங்களிலும் தஞ்சமடைந்து பராமரிப்பையும், பாதுகாப்பையும் அன்பையும் அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான தொண்டு நிலையங்கள் அரசினதும் சமய அமைப்பு சார்ந்ததாகவும், தனியான பரோபகாரிகளினதாகவும் பல வகையில் இயங்கிவருகின்றன. பெரும்பாலான இடங்களில் முதியோர் பராமரிப்பு இல்லங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. யாழ். நகர எல்லைக்குள்ளும் ஓர் முதியோர் இல்லம் இயங்கி வருகின்றது.

அமைதியான கடற்கரைச் சூழலைக் கொண்டதும் கொழும்புத்துறை - பாஷையூர் கிராமங்களின் எல்லையில் சுவாமியார் வீதி கடற்கரை வீதிச் சந்திப் பகுதியில் அமைந்ததும் 75 ஆண்டுகள் பழைமை மிக்கதுமான கொழும் புத்துறை சென். யோசப் முதியோர் இல்லம் விளங்குகிறது.

கடற்கரை வீதிப்பக்கமாக உள்ள பிரதான துணை வாயிலில் முதியோர்களின் பாதுகாவலராக விளங்கும் புனித சூசையப்பர் திருச்சொரூபம் அழகுறக் காட்சி தருகிறது. அடுத்து அங்கே பணிபுரியும் அருட்சகோதரிகளின் இன்முக வரவேற்பு அதைத் தொடர்ந்து நீண்ட விரிந்து செல்லும் தூய்மையான கட்டடத் தொகுதிகளின் விறாந்தை களில் நேர்த்தியாக அமர்ந்து புத்தகம் படிப்பதிலும், உரையாடுவதிலும், ஜெபிப்பதிலும் ஈடுபட்டு தமது அந்திமசாலத்தை மகிழ்வுடன் கழித்து ஒரே குடும்பமாக உறவாடும் முதியோர்கள் முகம் மலர்வுடன் காணப் படுகின்றனர்.

இவர்களின் நடை, உடை, பாவனைகளைப் பார்க்கும் போது தனித்து விடப்பட்டவர்களாகவோ, இயலாமையில் உழல்பவர்களாகவோ தோன்ற வில்லை. தமது சொந்த வீட்டில் பிள்ளைகள், உறவினருடன் இருப்பவர்களை விட சிறந்த பரா மரிப்பையும், அன் பையும், அமைதியையும் அனுபவிப்பது அவர்களின் முகத்தை நோக்கும்போது புரிகிறது.

சராசரி மனிதன் கால ஓட்டத்தில் மூப்பெய்தி நரைதிரை விழுந்து நலிவுற்றிருந்தாலும் அவர்கள் கையாலாகாதவர்களாக வாழ்ந்தவர்கள் அல்லர். குடும்பத்திற்காகவும், சமூகத்திற்காக வும் நாட்டுக்காகவும் அயராது உழைத்து தம்மைத்திரியாக்கிதியாகத்தால் பிறரை வாழவைத் தவர்கள். நீண்ட கால வாழ்வுப் பாடத்தில் பல பட்டறிவைப் பெற்ற பெட்டகங்கள். பல்வேறு தொழிற்துறை சார்ந்த செயற்பாடுகளால் நாட்டின் கல்வி, பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு படிக்கற்களாக பங்களிப்பு செய்தவர்கள்.

இவ்வாறு பல பெருமைகளுக்கும் மதிப் புக்கும் உரியவர்கள் தமது அந்திம காலத்தில் பாது காப்புடனும், மகிழ்ச்சியுடனும், தனிமை நிலை யகன்று வாழவேண்டும். அத்துடன் இறை வனின் சாயலான மனிதனின் மனிதத்துவம் பேணப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் கத்தோலிக்க திருச்சபையால் ஆரம்பிக்கப் பட்டதே கொழும் புத்துறை சென். யோசப் முதியோர் இல்லம்.

யாழ். ஆயராக கியோமர் ஆண்டகை இருந்தபோது ஒரு சிங்கள இன சகோதரர் அன்பரால் காணியுடன் கூடிய கட்டடத் தொகுதி ஆயரிடம் வழங்கப்பட்டது. சமூக நலத்தில் அக்கறை கொண்டிருந்த ஆயரவர்களின் எண்ணத்தில் முதியோர் பராமரிப்பு இல்லம் அமைக்கும் சிந்தனை உதயமானது.

நோயாளர், தனிமையில் வாடு வோரைப் பராமரிப்பதில் அதிக ஈடுபாட்டுடன் சேவை செய்வதை இலக்காகக்கொண்ட திருச்சிலுவைக் கன்னியர் சபையிடம் இந்தப் பணியை ஆயர் ஒப்படைத்தார். 1935 ஆம் ஆண்டு முதியோர் இல்லம் திறந்து சகோதரி தலைமை மதர் அலோசியா முதலாவது பொறுப்பாளராக நியமிக் கப்பட்டார்.

இல்லங்களில் தனிமையால் வசித்த முதியவர்கள் வீதியோரங்கள் நகரப் பகுதிகளில் தமது காலத்தைக் கழித்து வந்தவர்கள். இங்கே அழைத்து வரப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தார்கள். பிள்ளைகள், உறவினர்களால் கைவிடப்பட்டோர் ஒத்திசைவற்ற முரண்பாடுத் தாக்கமுற்றவர்கள் தாமாகவும் வந்து இணைந்து கொண்டனர். அனைத்துத் தேவைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

### யேசுதாஸ்

அடிப்படை வசதிகள் சுகாதார வசதி கள் அனைத்தும் பல சிரமங்களின் மத்தியில் கன்னியர் களினா லேயே நிறைவேற்றப் பட்டு வந்தன. ஆரம் பகாலங்களில் கழிப்பறை வசதிகள் வாளி மலசல கூடமாக இருந்தது. வட பகுதியில் முதலாவது தனிப்பட்ட முதியோர் இல்லமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தநிலையம் "படைத்தவன் படி அளப்பான்'' என்பதுபோல் எந்தவித கையிருப்பு நிதியும் அற்ற நிலையில் பரோபகாரிகள், தருமவான்களின் உதவிகளை நாளாந்தம் எதிர்பார்த்து நிர்வகிக்க வேண்டிய தன்மையே காணப்பட்டது. இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி)

HUTCH

Join

ஹட்சிசன் டெலிகொமியுனிகேஷன் லங்கா தனியார் நிறுவனம், "Hutch" எனும் விற்பனை நாமத்தின் கீழ் இலங்கையில் அபிவிருத்தியடைந்து வரும் அனைத்து பிரதேசங்களையும் அனைத்து கிராமங்களையும் நகரங்களையும் உள்ளடக்கக் கூடிய வகையில் மக்களுக்கு மிகவும் நெருக்கமான செல்லிடத் தொலைத் தொடர்பு சேவையை பெற்றுக் கொடுக்கும் ஓர் நிறுவனமாகும்.

ஹட்சிசன் டெலிகொமியுனிகேஷன் லங்கா நிறுவனமானது Hutchison Whampoa வலையமைப்பிற்கு சொந்தமான Hutchison Telecom International நிறுவனத்தின் துணை நிறுவனமாக செயற்படுகிறது. Hutchison Telecom International நிறுவனமானது, இந்தோனேஷியா , வியட்னாம் மற்றும் இலங்கை போன்ற சர்வதேச ரீதியாக வளர்ந்து வரும் புதிய சந்தைகளுக்குள் தமது செல்லிடத் தொலைத் தொடர்பு சேவையை வழங்கி வருகிறது.

உலகின் மூன்றாவது தலைமுறையின் நவீன தொழில்நுட்பத்துடன் Hutchison Telecom International நிறுவனமானது அவுஸ்திரேலியா, ஆஸ்திரியா, டென்மார்க், ஹொங்கொங், அயர்லாந்து, இத்தாலி, மக்காவு, சுவீடன், ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகளிலும் தம் சேவையை வழங்கி வருகிறது.

மேலதிக விபரங்களுக்குக் கீழ் காணும் இணையதளங்களிற்கு பிரவேசியுங்கள்.
www.hutch.lk அல்லது www.hutchison-whampoa.com

எமது சேவைகளை இலங்கையில் மேலும் விஸ்தரிப்பதற்காக, கீழ்காணும் பதவிகள் நிரப்பப்படவுள்ளன.
வாடிக்கையாளர் சேவை முகவர்கள் (யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பிரதேசங்களுக்கு)

தகைமைகள்:
- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி
- மும்மொழிப் பேச்சுத்திறன் அத்தியாவசியமானது
- இத்துறையில் முன் அனுபவம் மேலதிகத் தகைமையாகும்
- ஆளுமைத்திறனுடன் சுறுசுறுப்பான ஈடுபாடுடைய தன்மையைக் கொண்டிருத்தல்

மேற்கூறிய தகைமைகளை கொண்டவராயின் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13ம் திகதி காலை 11.30 முதல் மாலை 3.00 மணி வரை இடம்பெறவுள்ள நேர்முகத் தேர்வுகளுக்கு சமூகமளியுங்கள்.

தேர்வுகள் நடைபெறும் இடம் : Hutch Shop
MPCS கட்டிடம், இல. 227,
.KKS வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு : 0788632632
*கவர்ச்சியான சம்பளத்துடன் தொழில் முன்னேற்றத்திற்கான சந்தர்ப்பங்களும் உங்களுக்குக் கிடைக்கும்.

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கொடிகாமத்தில் உள்ள கோயிலா மனையில் 28 பரப்பு தென்னம் காணி உடன் விற்பனைக்கு.
தொடர்பு:
0113158758
0770655835

Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic
V Care
முகப்பருக்களுக்கு
International
Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு



எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது.
வவுனியா- 18,19 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல்
சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic
V Care
தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு
இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.
எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-18,19 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288



V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேமலாப நிதியை முடக்க நடவடிக்கைகள்

## திட்டமிடுகிறது தொழில் அமைச்சு

கொழும்பு, டிசெ.12
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்தில் பேணப்படும் ஊழியர் சேமலாப நிதிக் கணக்கிலுள்ள 569 கோடி ரூபா நிதியை முடக்குவதற்கு தொழில் அமைச்சு திட்டமிட்டு வருவதாக அகில இலங்கை போக்குவரத்துச் சேவைச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது ஒரு நியாயமற்ற செயற்பாடு என்று அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சேபால லியன கே தெரிவித்துள்ளார்.

இந்த நிதியிலிருந்து ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவம் கொண்டுள்ள ஊழியர்களுக்குச் சேர வேண்டிய தொகையை மட்டும் செலுத்திவிட்டு மேலதிகமாகவுள்ள நிதியை இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் நலனோம்புச் செயற்பாடுகளுக்கு மட்டும் பயன்படுத்துமாறு போக்குவரத்துத் துறை அமைச்சர் குமார வெல்கமவை அவர் கோரியுள்ளார்.

முன்பு ஒரு தடவை தொழில் அமைச்சு குறிப்பிட்ட கணக்கிலுள்ள நிதியைக் கையாள எடுத்துக் கொண்ட முயற்சி தமது சங்கத்தின் எதிர்ப்புக் காரணமாகவும் ஊடகங்களின் விமர்சனங்கள் காரணமாகவும் தடுத்து நிறுத்தப்பட்டது.

தற்போது அமைச்சரவை ஊடாக குறிப்பிட்ட நிதியைத் தான் கையாள்வதற்கு தொழில் அமைச்சு முயன்று வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஞ)

# அத்தியாவசியப் பொருளின் விலை அடுத்த மாதம் முதல் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.12
இலங்கையில் நாணயப் பெறுமதி குறைக்கப்பட்டதன் காரணமாக அடுத்த மாதம் முதல் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என்று கொழும்பு, பழைய சோனகத் தெருவின் வர்த்தக சம்மேளனத் தலைவர் கே. பழனியாண்டி தெரிவித்துள்ளார்.

அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, முட்டை போன்றவற்றின் விலைகள் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடக் காலங்களில் வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னுள்ள விலைகளே நடைமுறையில் இருக்கும். புதிய பொருள்கள் சந்தைக்கு வந்தவுடன் இந்தப் பொருள்கள் விலையேற்றம் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பால்மாவைச் சந்தையில் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கே விற்பனை செய்ய நுகர்வோர் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும் நாணயப் பெறுமதி குறைக்கப்பட்டதன் காரணமாக இறக்குமதிகளுக்கு அதிக செலவீனங்கள் ஏற்படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதியை அதிகரிக்கவும் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் அரசு 3 வீத நாணய மதிப்பிறக்கத்தைக் கடந்த வரவு - செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கைக்கான கார் இறக்குமதி அம்பாந்தோட்டை துறைமுகத்தில்

## துறைமுக அதிகாரசபை தகவல்

கொழும்பு,டிசெ.12
இலங்கைக்குக் கார்களை இறக்குமதி செய்பவர்கள் எதிர்வரும் மார்ச் மாதம் முதல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து தமது வாகனங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதற்கான அனுமதியை இலங்கையின் துறைமுக அதிகாரசபை வழங்கவுள்ளது.

இந்தத் திட்டத்தைப் பல வாகன இறக்குமதி நிறுவனங்கள் எதிர்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தில் அதிக வேலைப்பளு காரணமாக, கார் இறக்குமதிகள் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படும் என்று இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறை குறித்து தமக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

# கந்தளாயில் ஏ.ரி.எம். இயந்திரம் உடைப்பு

இலங்கை வங்கியின் கந்தளாய் கிளையின் தன்னியக்க கடனட்டை இயந்திரத்தை உடைத்த இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த சுமார் 65 லட்சத்து 93 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டு தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் கந்தளாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பொலிஸ் வெகுமதி நிதியத்தில் 266 கோடி ரூபா கையிருப்பில்

## அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.12
பொலிஸ் சேவை வெகுமதி நிதியத்தில் 266 கோடி ரூபாய் தற்போது கையிருப்பில் உள்ளதாக அமைச்சர் நிமல் ஸ்ரீ பால டி சில்வா கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சியின் குருநாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் எழுப்பிய வாய்மொழி மூல கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையோரைக் கைது செய்யப் பொலிஸார் மேற்கொள்ளும் திடீர் சுற்றிவளைப்புக்களின்போது கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் விதிக்கும் தண்டப் பணத்தில் குறிப்பிட்ட ஒரு விகிதத் தொகை பொலிஸ் வெகுமதி நிதியத்தில் சேர்க்கப்படும். அதில் ஒரு பகுதி சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவையைப் பாராட்டி வெகுமதியாக வழங்கப்படும்.

குறிப்பிட்ட அந்த வெகுமதி நிதியத்தில் மேலதிகமாக உள்ள நிதி அரச வங்கிகளில் நிரந்தர வைப்பிலிடப்பட்டு அதன் மூலம் கிட்டிய வட்டி உட்பட அந்த நிதி தற்போது 266 கோடி ரூபாவை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொலிஸ் சேவை வெகு மதி நிதியத்தின் மூலம் இவ்வாண்டு நவம்பர் மாதம் வரை பொலிஸ் சேவையிலுள்ள பல தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் 83, 896 பேருக்கு வெகுமதிக் கொடுப்பனவாக 38 கோடிக்கும் மேற்பட்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஞ)




**உள வளவாளராகுங்கள்! பயிற்சி**

*முற்றிலும் இலவசமான உள சமூக, உள ஆற்றுப்படுத்தல் வாண்மைத்துவ சான்றிதழ் கற்கை நெறி*

| | |
|---|---|
| பிரிவு | : 09-10 |
| கற்கைக் காலம் | : 06 மாதங்கள் |
| விரிவுரைகள் | : சனி, ஞாயிறு / புதன், வியாழன் (இரண்டு பிரிவு) |
| தகைமை | : ஆகக் குறைந்தது O/L |
| கட்டணம் | : இலவசம் |

**முந்துங்கள்! விரையுங்கள்!!**

★ உங்களை நீங்கள் வளப்படுத்திக்கொள்ள இது நல்லதோர் சந்தர்ப்பம்.
★ ஆர்வமுள்ள இருபாலாரும் 20.12.2011 ஆம் திகதிக்கு முன்பு சுயவிவரங்களை அனுப்பிவைக்கலாம்.
★ நேர்முகத்தேர்வின் மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
★ வயது உங்களுக்கோர் தடையல்ல.
தற்போது எமது சமுதாயத்துக்கு அவசரமாகவும்- அவசியமாகவும் தேவைப்படுவது உள ஆற்றுப்படுத்தலே!
★ முக்கியமாக இளையோர்களின் மனங்களிலே நல்ல சிந்தனைகளையும் செயற்பாடுகளில் மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டிய கட்டாய நிலையொன்று உருவாகியுள்ளதை அனைவரும் அறிவீர்கள்!
★ ஆகவே இளைஞர், யுவதிகளின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு அவர்களின் மனநிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதுமான ''தன்னைத்தான் அறிதலும்-பிறரை அறிந்து கொள்ளலும்'' என்ற கோட்பாட்டுக்கமைவாக உள ஆற்றுப்படுத்தல் (Counseling) கற்கை நெறிமூலம் அவர்களை வளப்படுத்தலாம் என்ற நம்பிக்கையோடு முதலில் துளிர்கள் நிறுவனம் களமிறங்குகின்றது!
★ ஆகவே உள ஆற்றுப்படுத்தல் வளவாளர்களே! சமூகநலன் விரும்பிகளே! சேவை நோக்கம் உங்களுக்கிருந்தால்...? தாமதியாமல் எங்களோடு இணையுங்கள். இளைய சமுதாயத்தைப் பாதுகாப்போம்! எங்கள் பாரம்பரியத்தையும் விழுமியங்களையும் பலப்படுத்த ஒன்றிணைவோம் வாருங்கள்!

இல. 30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

பணிப்பாளர்,
துளிர்கள் நிறுவனம்.

ஊடக அனுசரணை : உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நேற்றும் எல்லையில் பெரும் பதற்றம்

# கேரளா நோக்கி தமிழக மக்கள் படையெடுப்பு; கண்டதும் சுடுமாறு பொலிஸாருக்கு உத்தரவு

சென்னை, டிசெ.12

வரலாறு காணாத வகையில் கேரளாவுக்கு எதிராக கடும் கொந்தளிப்பில் உள்ள தேனி மாவட்ட மக்கள் நேற்றுமுன்தினம் 50 ஆயிரம் பேர் பேரணியாக கேரளாவை நோக்கி படையெடுத்த நிலையில், நேற்று மீண்டும் அதே அளவிலான மக்கள் பெரும் பேரணியாக கேரளாவை நோக்கி சென்று கொண்டிருந்ததால் எல்லைப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. இதனால் அங்கு பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழகம் முழுவதும் கேரள அரசின் மீதும், கேரளாவில் தமிழர்களைத் தாக்கியவர்கள் மீதும் மக்கள் வரலாறு காணாத கோபத்திலும், கொந்தளிப்பிலும் உள்ளனர். இந்த கோபமும், கொந்தளிப்பும், தேனி மாவட்டத்தில்தான் அதிகம் உள்ளது. முல்லைப்பெரியாறு பாசனமாவட்டம்என்பதோடுமட்டுமல்லாமல், இத்தனை காலமாக தங்களிடமிருந்து பால், காய்கறி, அரிசி, பருப்பு என அத்தனையையும் பெற்று விட்டு நமது பெண்கள் மீதே கை வைத்து விட்டார்களேஎன்ற கொந்தளிப்புத்தான் அது.

இதனால்தான் தமிழகத்தின் பிற பகுதிகளை விட தேனி மாவட்ட எல்லைப் பகுதிகளில் கேரளாவுக்கு எதிராக அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை இப்பகுதி மக்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் யாரும் எதிர்பாராத வகையில் கிட்டத்தட்ட 50,000 பேர் அலைகடலென திரண்டு கேரளாவை நோக்கிப் பேரணி நடத்தியதால் கேரளாவிலும் பதற்றம் ஏற்பட்டது. இந்தப் பேரணிக்கு யாரும் ஏற்பாடு செய்யவில்லை. மக்களே திரண்டு பேரணியாக உருமாறி கேரளாவை நோக்கி படையெடுத்து விட்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பழனிச்சாமி, தென் மண்டல ஐ.ஜி. ராஜேஷ் தாஸ் ஆகியோர் கடும் சிரமப்பட்டு மக்களைத் தடுக்க முயன்றனர். இருப்பினும் குமுளி வரை மக்கள் முன்னேறிப் போய் விட்டனர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

இந்த நிலையில், நேற்றும் மக்கள் பேரணியாக கிளம்பியுள்ளனர். ராயப்பன்பட்டி, அணைப்பட்டி, கோகிலாபுரம், கே.கே.பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த மக்கள் பெரும் ஊர்வலமாக கிளம்பியுள்ளனர். விவசாயிகள், பொதுமக்கள், தொழிலாளர்கள் என கிட்டத்தட்ட 15,000 பேர் மோட்டார் சைக்கிள், டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் கிளம்பியுள்ளதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, கேரள எல்லைக்குள் யாரேனும் அத்துமீறி நுழைந்தால் சுடுமாறு இடுக்கி மாவட்ட எஸ்.பி. உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் தமிழர்கள் குமுளிக்குள் நுழைந்தால் சுடப்படும் அபாயகர நிலை உருவாகியுள்ளது. இதனால் பெரும் பதற்ற நிலை காணப்படுகிறது.

இதனால் எல்லைப் பகுதியில் குமுளிக்கு முன்பாக கிட்டத்தட்ட 10 ஆயிரம் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால் மக்கள் கடும் ஆவேசமாக கிளம்பி வருவதால் பொலிஸாரும் குழப்பத்தில் உள்ளனர்.

மக்களின் இந்த எழுச்சி மிக்க போராட்டத்தால் தமிழக, கேரள எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. (ஒ-சி)

## உலகிலேயே மிகப் பெரிய தானியக்கிடங்கு பஞ்சாபில்

நாட்டிலேயே மிகப்பெரிய தானியக்கிடங்கை பஞ்சாப் மாநிலத்தில் அமைக்க உள்ளதாக அந்த மாநில உணவுத்துறை அமைச்சர் ஆதஷ் பிரதீப் சிங் கைரேன் தெரிவித்துள்ளார். மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ள இந்த உணவுத் தானிய கிடங்கு விஞ்ஞான முறையில் அமைக்கப்பட உள்ளது.

கட்டுமானப் பணியில் உள்ள இந்த தானியக் கிடங்கின் மொத்த கொள்ளளவு 42 லட்சம் டன்களாகும். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை யிலும் நடப்பு நிதியாண்டுக்குள்ளும் கட்டப்படவில்லை. (வ)

### முல்லைப் பெரியாறு விவகாரம்

# தமிழகம் முழுவதும் தி.மு.கவினர் இன்று உண்ணாவிரதப் போராட்டம்

சென்னை, டிசெ.12

இந்திய மாநிலமான கேரளாவின் முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தி.மு.க. இன்று தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 15 ஆம் திகதி மதுரை, தேனி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் பிரமாண்ட மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்தவும் தி.மு.க. தீர்மானித்துள்ளது. முல்லைப் பெரியாறு அணை தொடர்பான விடயங்கள் செயற்குழுவில் விவாதிக்கப்படும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அண்மையில் அறிவித்திருந்தார். அதன்படி கடந்த வெள்ளிக் கிழமை காலை செயற்குழுக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் 2 முக்கிய போராட்டங்களை தி.மு.க. அறிவித்துள்ளது. அதன்படி டிசெம்பர் 12ஆம் திகதி (இன்று) தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தல். அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெறும்.

இதேபோல் டிசெம்பர் 15ஆம் திகதி மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய ஐந்து முல்லைப்பெரி யாறு பாசன மாவட்டங்களில் பிரமாண்டமான அளவில் மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்தல். ஆகிய 2 போராட்டங்களை தி.மு.க. அறிவித்தது. (வ)

## உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் ஹசாரே



வலுவான லோக்பால் பிரேரணை கொண்டுவர வலியுறுத்தி அன்னா ஹசாரே டில்லியில் நேற்று மீண்டும் ஒருநாள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். நேற்றுக் காலை ராஜ்காட்டில் உள்ள காந்தி சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தி விட்டு சமாதிக்கு முன் சுமார் 30 நிமிடங்கள் அமர்ந்து மௌனம் அனுச ரித்தார்.

பின்னர் காந்தி சமாதியில் இருந்து புறப்பட்டு ஜந்தர் மந்தர் வந்தார். அங்கு அமைக்கப்பட்டிந்த மேடையில் அமர்ந்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். மேடையில் கிரண்பெடி, அரவிந்த் கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியா உள்பட குழு நிர்வாகிகள் அமர்ந்து உண்ணாவிரதம் இருந்தனர். இதையொட்டி ஜந்தர் மந்தர் பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (வ)

# மரண அறிவித்தல்



திருமதி கமலாதேவி நடராசா
(இணுவில் மஞ்சத்தடி)

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த திருமதி. கமலாதேவி நடராசா 8-12-2011 வியாழக்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவிசியர் தம்பையா – சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரையப்பா – பார்வதி தம்பதிகளின் ஆசை மருமகளும், நடராசாவின் அன்பு மனைவியும், உதயகுமார் (எட்மின்ரன்), காலஞ்சென்ற சுரேஸ்குமார், தயாரூபி, வசந்தரூபி (ஒட்டாவா), திருக்குமரன், அனந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

சசிகலா, மோகன், குலசேகரம் (ஒட்டாவா), சுதாஜினி, நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியாரும்,

விதுசா, நிரேஸ், நிபேக்கா, அபி, சோபி, றோசி, சுரேன், அஸ்வின், அனிக்கா, ஜெனித்தா, நிக்சன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, தியாகராசா மற்றும் தங்கலட்சுமி, செல்வலட்சுமி (இலங்கை), விமலாதேவி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக Ogden Funeral Home 4164 Sheppard East ஸ்காபறோவில் 11-12-2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:00 மணிமுதல் 9:00மணிவரை வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று 12-12-2011 திங்கட்கிழமை அன்று காலை 8:00 மணி முதல் 10:00 மணிவரை அதே இடத்தில் இடம் பெற்று பின் 256 Kingston Road / Woodbine St. Johns Norway மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
நடராசா
திருக்குமரன்
தயாரூபி மோகன்
வசந்தரூபி குலசேகரம்
அனந்தகுமார்

thiruy2k@hotmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

வையத்தின் மைந்தனாக 16.08.1963

தெய்வத்தின் சொந்தமாக 06.12.2006

அமரர்

### நாகமுத்து ரவிச்சந்திரன்

(முன்னைநாள் ஆசிரியர், யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை)

திதி: கார்த்திகை மாத அபரபக்க துதியை (12.12.2011)

(11478)(5,6)

ஓடி மறைந்தது ஐந்தாண்டுகள்
வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம் உடலில் உயிர் வாழும் காலம் வரைக்கும்
எம்முள் இறையாகி என்றென்றும் வாழ்ந்திடுவீர்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

'ரவிமஹால்',
நாவற்காடு, வரணி.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பான மனைவி மற்றும் குடும்பத்தினர்.


# நடைபாதைக் கடைகளை அகற்றுவதற்குத் திட்டம்

## நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 12

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உள்ள நடைபாதைக் கடைகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி சந்தை மற்றும் கொக்குவில் சந்தைப் பகுதிகளில் பொது வழிக்கு இடையூறாக பெருமளவில் நடைபாதைக் கடைகள் உள்ளன. இந்த நடைபாதைக் கடைகளை உடன் அகற்றுமாறு நடைபாதை வியாபாரிகளைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அவ்வாறு அகற்றப்படாத பட்சத்தில் சபையால் எவ்வித அறிவித்தலுமின்றி பொது வழிக்கு இடையூறாக உள்ள கடைகள் அனைத்தும் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அது மட்டுமன்றி வியாபாரிகள் வியாபாரப் பொருள்களை வியாபார நிலையத்துக்கு வெளியே வைத்து விற்பனை செய்வதை அவதானிக்க முடிகின்றது .

எனவே அவற்றைத் தங்களின் விற்பனை நிலையத்துக்குள்ளேயே வைத்து விற்பனை செய்து சபை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தவறும் பட்சத்தில் நாளை முதல் இதை மீறுவோர் மீது பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)


## கண்ணீர் அஞ்சலி



எமது சித்திரபாட ஆசிரியர்
தே.திருக்கணேசராஜா அவர்களின்
அன்புத் தந்தை

**பொன்னம்பலம் தேவராஜா**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

(11477) (2-6-)

## மரண அறிவித்தல்

பொன்னம்பலம் தேவராஜா

11.12.2011 உதயன் பத்திரிகையில் பக்கம் 16இல் பிரசுரமான மேற்படி மரண அறிவித்தலில் திருமுருகராஜன் (ஆசிரியர், கிளி/ கண்ணகை அம்மன் வித்தியாலயம், கிளிநொச்சி) என வாசிக்கவும்.

## விற்பனைக்கு

சோடனைப் பந்தல், முத்துமணவறை, பூமணவறை, பிளாஸ்ரிக் கதிரை என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ். ஜெயம், பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு.

## The Royal College of Jaffna

O/L,A/L,B.A.பரீட்சைகளில் சிறந்தபுள்ளிகள் பெற ஆங்கில இலக்கண வகுப்புகள்.
By:ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி பிரதான வீதி, சண்டிலிப்பாய். தொடர்பு: 0776751649

## தவறிவிட்டது

ஆனந்தராசா நித்தியானந்தன்(கடவுள்), உருத்திரபுரம் என்பவருடைய ஆவணங்களோடு கூடிய மணிப்பை (பேர்ஸ்) கரடிப்போக்கு சந்தியடியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் அதனை கரடிப்போக்கு ஓட்டோ நிறுத்தத்தில் (Auto Park) ஒப்படைக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
தொடர்பு: 0776183899,0777373094

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் 10.12.2011 (சனிக்கிழமை) நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள்.

முதலாம் பரிசு :- 0009
இரண்டாம் பரிசு :- 2615
மூன்றாம் பரிசு :- 2327

ஆறுதல் பரிசில்கள்

(i) 0527 (ii)2516 (iii)0767 (iv)0034(v) 2199

அதிர்ஷ்டசாலிகள் அனைவரும் தமது பரிசில்களைப் பற்றுச் சீட்டினை ஒப்படைத்து (20.12.2011) செவ்வாய்க்கிழ மைக்கு முன்னர், வைத்தியசாலை இயன் மருத்துவப் பிரிவில் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய நேரம்:-
காலை 8 தொடக்கம் 12 மணிவரை.

தலைவர், வைத்தியசாலை அபிவிருத்திச்சபை,
ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை.

(சு/6845) (2-6-)

## மரண அறிவித்தல்

செல்வி **சாரதாதேவி விசுவலிங்கம்**

(ஆசிரியை)



கெருடாவில் தெற்கைச்சேர்ந்த சாரதாதேவி விசுவலிங்கம் 4.12.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவணடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - அருந்தவரட்ணம் தம்பதியரின் இரண்டாவது புதல்வியும் சிறீ புஸ்பலீலாவதி, தேவகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி கனடாவில் வசிக்கும் இராகினி ஆகியோரின் மைத்துனியும் பொறியியலாளர் நவரூபகாந்தின் ஆசை அம்மாவும் கனடாவில் வசிக்கும் வசீகலா, கம்சப்பிரியா வீபீசன், கஜேந்திரன் ஆகியோரின் மாமியும் (பொறியி யலாளர்)சங்கீதாவின் மாமியும் சுனிலின் (கனடா) ஆசை அம்மாவும் இமானியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.12.2011 வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1939 . 04 . 04



ஆண்டவன் அடியில் 2006 . 12 . 12

அமரர் நாகமுத்து சின்னையா
(நயினாதீவு)

வாண்மையின் மேன்மையாய்!
சான்றாண்மையின் சீர்மையாய்!
அன்பின் அருவியாய் திகழ்ந்த
- எந்தையே
உமை பிரிந்து ஆண்டு ஐந்து
- ஆன்தோ
உங்கள் ஆத்மா சாந்திபெற
- பிரார்த்திக்கும்.
குடும்பத்தினர்.

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(11474)(3.6)

## மரண அறிவித்தல்

மார்க்கண்டு உதயகுமார்
திருமதி உதயகுமார் வசந்திமாலா



புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு உதயகுமார், திருமதி உதயகுமார் வசந்திமாலா ஆகியோர் (08.12.2011) வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்கள்.

இவர்களின் இறுதிக் கிரியைகள் நாளை (13.12.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்கள் புத்தூர் கிந்துசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் வீதி, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(11476) (2-6)

## லக்ஸ்மி காகிதாதிகள் நிறுவனத்தின் விசேட மலிவு விற்பனை





2012 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

★ பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள், கவரிடும் வண்ணக் கவர்கள், கொப்பிகளை அழகாக்கும் வர்ண ஸ்ரிக்கர்கள் போன்றவற்றை நம்பமுடியாத விலைக்கழிவில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

★ Atlas, Lucky, NSB, Suber Brand ஆகிய நிறுவனங்களின் தரம் வாய்ந்த கொப்பிகள் விசேட விலையில் வழங்கப்படும்.

| பக்கம் | சாதாரண கொப்பி | No-1 கொப்பி |
|---|---|---|
| 80 பக் | 12 .00 | 22.50 |
| 120 பக் | 17.50 | 29.00 |
| 160 பக் | 23.50 | 39.00 |
| 200 பக் | 29.00 | 48.00 |

ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு இரட்டைறூள், நான்குறூள் பெரிய சதுரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். டிசெம்பர் 31 ஆம் திகதி வரைக்கும்.



வியாபாரிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

லக்ஸ்மி காகிதாதிகள்
இல.2, நவீன சந்தை,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.T.P.: 0212224375


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய மக்களுக்குப் பாதுகாப்பு: பிரான்ஸ் சர்வதேச சமூகத்துக்கு வேண்டுகோள்

பரிஸ் (பி.பி.சி.), டிசெ. 12

சிரிய மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு, சர்வதேச சமூகத்துக்குப் பிரான்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது. சிரிய ஹோம்ஸ் நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் சிரிய அதிகாரிகளே பொறுப்பாளர்களாவர் என தாம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பேர்னாட் வலிரோ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அஸாத்துக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் அதிகரித்துள்ளார். அத்துடன், சிரியாவில் இடம்பெறும் பாரதூரமான அசம்பாவிதங்களுக்கெல்லாம் அந்நாட்டின் தலைவரே பொறுப்பாளராவார் என்றும் அவர் தாம் அல்-ஜசீரா தொலைக் காட்சிக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''தமது மக்களின் உயிரைப் பாதுகாக்கவேண்டிய அதிமுக்கிய பொறுப்பு அஸாத்தினுடையது. அதனால்தான் தமது சொந்த மக்களைக் கொன்று குவிப்பதை உடனடியாக நிறுத்துமாறு மீண்டும் அவரை வலியுறுத்துகின்றேன்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனாதிபதி பஷார் அல்-அஸாத்தின் அரசுக்கு எதிராக சனிக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் போராட்டத்தின் போது தலைதூக்கிய வன்முறையில் 12 பேர் கொல்லப்பட்டனர் என எதிரணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் பெரும்பாலானோர் ஹோம்ஸ் நகரிலேயே மரணித்துள்ளனர். அரசு விரோத ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வரும் கேந்திர நகரங்களில் ஹோம்ஸும் ஒன்றாகும் என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

அதேவேளை, ஹோம்ஸ் நகரில் பாரிய அளவில் இராணுவ அதிரடி நடவடிக்கைகள் கட்டவிழ்த்துப்படலாம் என எதிரணியினரின் சிரிய தேசியப் பேரவை அச்சம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த ஒன்பது மாதங்களாக அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் கிளர்ச்சியில் இதுவரை 307 சிறார்கள் உட்பட நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. மதிப்பீடு செய்துள்ளது.

எதிரணியினரின் உள்ளூர் ஒருங்கிணைப்புக்குழுக்கள், ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ளுமாறு ஆதரவாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

# இடைக்கால அரசு ஏமனில் பதவியேற்பு

சனா, டிசெ. 12

ஏமனில், எதிர்க்கட்சிகள் பங்கேற்கும் இடைக்கால அரசு சனிக்கிழமை பதவியேற்றது. நாட்டின் பல பகுதிகளில் ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்குமிடையில் மோதல் தொடர்கிறது.

ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் கடந்த ஒன்பது மாதங்களாகப் போராடி வந்தனர். வளைகுடா நாடுகள் கூட்டுறவுச் சபை தயாரித்த ஒப்பந்தத்தில், கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் சலே கையெழுத்திட்டார். அதன்படி, இதுவரை இராணுவம் நிகழ்த்திய படுகொலைகள், சலே நிகழ்த்திய ஊழல்கள் ஆகியவற்றுக்காக அவர் மீது வழக்கு தொடரப்படமாட்டாது.

இந்த நிபந்தனைக்கு எதிர்க்கட்சிகள் ஒப்புக்கொண்டதைக் கண்டித்து, கடந்த இரு வாரங்களாக நாட்டின் பல பகுதிகளில், பழங்குடியினர், சலே எதிர்ப்பாளர்கள் ஒன்று திரண்டு, சலே ஆதரவாளர்கள் மீது கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தென்பகுதி நகரமான டாயிசில் கடந்த வாரம் நிகழ்ந்த படுகொலைகள், நாட்டை உலுக்கின. அந்நகரில் இருதரப்பும் தங்கள் ஆள்களை வாபஸ் பெற்றுக் கொண்டதையடுத்து, நகர் அமைதி நிலைக்குத் திரும்பியது.

எதிர்க்கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசு சனிக்கிழமை பதவியேற்றது. இதில், துணை ஜனாதிபதி அப்துர் அபு மன்சூர் ஹாடி பங்கேற்றார். 34 அமைச்சர்களைக் கொண்ட இந்த அரசு, மூன்று மாதங்களுக்குப் பதவியில் இருக்கும். அடுத்தாண்டு பெப்ரவரியில், ஜனாதிபதித் தேர்தல் நடக்கும். அதன் பின்னர் நாட்டில் ஒரு நிலையான அரசியல் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து சண்டையிட்டு வரும் பழங்குடியினர், தெற்குப் பகுதியில் பிரிவினை கோருவோர், வடபகுதியில் கிளர்ச்சி செய்துவரும் ஷியா முஸ்லிம்கள், அல்-குவைதா ஆகியோரை புதிய அரசு சமாளிக்கவேண்டிய நெருக்கடியில் உள்ளது.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமை இரு தரப்புக்கும் நிகழ்ந்த சண்டையில், இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இதையடுத்து, நாட்டின் பல பகுதிகளில் மீண்டும் சண்டை வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## பிரபல நாவலாசிரியர் சல்மான் ரூஷ்டிக்கு 5 ஆவது திருமணம்

*பிரிட்டன் வாழ் இந்தியர் சல்மான்ரூஷ்டி (வயது - 64). பிரபல நாவலாசிரியரான இவர் ஏற்கனவே 4 பெண்களை திருமணம்செய்து விவாகரத்து செய்தார். கடைசியாக இந்தியரான தொலைக்காட்சி நடிகையும், மொடல் அழகியுமான பத்மலட்சுமியை திருமணம் செய்திருந்தார். அவருடன் சுமார் 2 ஆண்டுகள் வாழ்ந்த அவர் பின்னர் விவாகரத்து செய்தார்.*

*அவர் 5ஆவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்ய முடிவு செய்துள்ளார். அவரது பெயர் மிச்செலி பாரிஷ். இவர் சல்மான் ரூஷ்டியின் முன்னாள் காதலியாவார். அவரை விட்டுப் பிரிந்த அவர் கோடீசுவரர் ஸ்டீவ் டிஸ்ச் என்பவருடன் சுற்றித் திரிந்தார்.*

*மிச்செலி பாரிஷ் தனது பிறந்தநாளைக் கொண்டாடினார். அப்போது அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து ஸ்டீவ் டிஸ்சை மிச்செலி கழற்றிவிட்டார்.*

*அதைத்தொடர்ந்து 48 மணிநேரத்தில் சல்மான் ரூஷ்டியை தேடி வந்து மீண்டும் தனது உறவை அவருடன் புதுப்பித்துக்கொண்டார். அப்போது சல்மான் ரூஷ்டியை திருமணம் செய்ய விரும்புகிறார் எனக் கூறினார். அதற்கு அவரும் ஒப்புக்கொண்டார்.*

## பூனைக்கு 60 கோடி ரூபா சொத்து

இத்தாலியைச் சேர்ந்த பெண் மரியா அசுந்தா (வயது - 94). இவர் ஒரு கோடீஸ்வரரை திருமணம் செய்தார். அவர்களுக்கு குழந்தை இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் வீதியில் சுற்றித்திரிந்த ஒரு கறுப்பு பூனையை தனது வீட்டிற்குக் கொண்டுவந்து குழந்தை போன்று வளர்த்தார். மரியாவுக்கு திடீரென உடல்நலக்கோளாறு ஏற்பட்டது, இதனால் தன்து சொத்துக்களை பூனை டொம்மாசோவின் பெயரில் எழுதி வைத்தார்.

அவற்றின் மொத்த மதிப்பு ரூ.60 கோடி. இதற்கிடையே, கடந்த 2 வாரத்துக்கு முன்னர் அவர் மரணமடைந்தார்.

## பிலிப்பைன்ஸ் பாடசாலை மீது விமானம் மோதல்: 7 பேர் பலி!

மணிலா, டிசெ.12

பிலிப்பைன்ஸ் பாடசாலைக் கட்டடத்தில் ஒரு சிறிய வகை விமானம் மோதி வெடித்து சிதறியது. இவ்விபத்தில் 7 பேர் உடல் எரிந்து பலியானார்கள். சம்பவம் நிகழ்ந்தபோது வகுப்புகள் எதுவும் நடக்கவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

ஆறு முதல் எட்டு இருக்கைகள் கொண்ட அந்த விமானத்தை மணிலா விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிதுநேரத்திலேயே தரையிறக்க நேர்ந்ததால் விபரீதம் ஏற்பட்டது என விமானப் போக்குவரத்து அலுவலக தலைவர் ரமோன் கிடேறேஸ் தெரிவித்தார். இறந்த 7 பேரும் விமானத்தில் இருந்தவர்களாவார்கள்.

# ரஷ்யப் பிரதமர் புட்டினின் ஆட்சிக்கு எதிராக பேரணிகள்; பல்லாயிரக்கணக்கானோர் பங்கு

மொஸ்கோ , டிசெ. 12

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டினின் ஆட்சிக்கு முடிவு கட்டப்படவேண்டுமென்றும், நாடாளுமன்றத் தேர்தல் மீள நடத்தப்படவேண்டுமென்றும் கோரிக்கைகள் விடுத்து, தலைநகரான மாஸ்கோவில் சனிக்கிழமை பல்லாயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தினார்கள்.

அதேவேளை, அநேக ரஷ்ய நகரங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன. அவற்றிலும் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். 12 வருடங்களில் புட்டின் ஆட்சியில் இடம்பெற்ற மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் இவையென அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், புட்டினுக்கு எதிரான சுலோகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும், அட்டைகளையும் ஏந்தியிருந்தார்கள். ''எலிகள் வெளியேறிவிடவேண்டும்'', ''மோசடிக்காரர்களே, திருடர்களே நீங்கள் எங்கள் தேர்தல்களை எங்களுக்கே மீளத் தந்துவிடுங்கள்'' என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்கள் எழுப்பிவந்தார்கள்.

கிழக்கில் அமைந்துள்ள விளாடிவொஸ் டொக் பசுபிக் துறைமுகத்திலிருந்து மேற்கே கலினின் கிரேட் வரையிலான ஏறத்தாழ 7,400 கிலோ மீற்றர் (4,600 மைல்) பரப்பளவில் அமைந்துள்ள நகரங்கள் அனைத்திலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன. புட்டின் ஆட்சிக்கும், கட்சிக்கும் எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தலைநகரான மாஸ்கோவிலேயே மிகப் பிரமாண்டமான பேரணி நடைபெற்றது. கொடிகளை அசைத்து, ஆர்ப்பரித்து, கோஷங்களை எழுப்பிக்கொண்டு சென்ற ஆர்ப்பாட்டக்காரர்களை கலகம் அடக்கும் பொலிஸார் அவதானித்தவாறு நின்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், ''புட்டின் ஒரு திருட்டுப் பேர்வழி'' எனக் கோஷித்தார்கள். 1991ஆம் ஆண்டு, சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்தது. அதற்குப் பின்னர் இடம்பெற்ற எதிரணியினரின் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் இதுவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

டிசெம்பர் 4ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதன் இறுதியில் புட்டினின் ஐக்கிய ரஷ்ய கட்சியே




வெற்றியீட்டியுள்ளது என அறிவிக்கப்பட்து. இம் முடிவை எதிரணியினர் ஏற்கவில்லை. இது முதல் தேர்தலில் மோசடிகளும், ஊழல்களும் இடம்பெற்றுள்ளன எனக் கூறி எதிரணியினர் ஆட்சேப ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் உட்பட மேற்கத்தேய தேர்தல் அவதானிப்பாளர்களும், இத்தேர்தலில் பரவலாக முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என சுட்டிக்காட்டியுள்ளார்கள். முன்னாள் சோவியத் ஜனாதிபதி மிக்கெல்லும் இதே குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். அத்துடன், ''மக்களின் விருப்பத்தை தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கவில்லை. மறு தேர்தல் நடத்தப்படவேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொலட்னயா சதுக்கத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில், முன்னாள் பிரதமர் மிக்கெய்ல் கஸியானொவ் பேசுகையில், ''இன்றைய பேரணியில் 60 ஆயிரம் பேர் ஒருவேளை, ஓர் லட்சம் பேராகவும் இருக்கலாம் - கலந்துகொண்டார்கள். திருட்டு ஆட்சியாளரின் எதேச்சதிகாரத்தின் முடிவு இன்று ஆரம்பமாகிவிட்டது'' என்றார். இவர் தற்போது எதிர்க்கட்சியொன்றுக்கு தலைமை வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாஸ்கோ பேரணியில் பலதரப்பட்ட வயதினரும் கலந்துகொண்டனர். அநேகர் போராட்டத்தின் அடையாளச் சின்னமாக, வெள்ளை கார்னேஷன் மலர்களை ஏந்தியிருந்தார்கள். பலர் புட்டினினதும், ஜனாதிபதி டிமிட்ரி மெத்வடேவினதும் படங்களை அசைத்தவாறு, ''நபர்களே, நீங்கள் செல்லவேண்டிய தருணம் இதுதான்'' எனக் குறிப்பிட்டார்கள்.

இப்பேரணிக்கு மேலே, ஹெலிக்கொப்டர்கள் வானில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. எதிரணி தலைவர்களில் ஒருவரான விளாடிமிர் ரைஷ்கோவ் பேசுகையில், ''இன்று ரஷ்யா மாற்றமடைந்துவிட்டது. எதிர்காலமும் மாற்றமடைந்துவிட்டது. டிசெம்பர் 24ஆம் திகதி புதிய போராட்டங்கள் நடைபெறும். தவறாது கலந்துகொள்ளுங்கள்'' என அறைகூவல் விடுத்தார்.

கூட்டத்தினர், ''நாங்கள் மீண்டும் வருவோம்'' என ஆரவாரித்தனர். ஜனநாய்க நாடு என அறிவித்துக்கொள்ளும் புட்டினின் ஆட்சியில், கடந்த ஒரு வார காலமாக மாஸ்கோ நகர், அவசர நிலை பிறப்பிக்கப்பட்ட நகராக காட்சியளித்தது என சர்வதேச பத்திரிகை நிருபர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டத்தில் வென்ற முல்லைத்தீவு தபாலக அணி

யாழ்ப்பாணம்,டிசெ.12

முல்லைத்தீவு அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான அரச திணைக்களங்களுக்கு இடையில் இடம்பெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை முல் லைத்தீவு வித்தியானந்த கல் லூரி மைதானத்தில் இடம்பெற் றது.



இதில் முல்லைத்தீவு தபாலக அணியை எதிர்த்து முல்லைத்தீவு மாவட்ட செய லக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தத் தமது அணியே வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கோடு களம் இறங்கியதால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

இரண்டு அணியினரும் மாறி மாறி எதிர் அணியினருடைய கோல் பரப்பினுள் நுழைந்த வண்ணம் இருந்தனர். இதன் போது முல்லைத்தீவு தபாலக அணியினர் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கோல் ஆக்கிக் கொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட செயலக அணியின ரும் தமது அணிக்கான கோல் களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் தமது ஆட் டத்தை சோப்படுத்தி கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டி ருந்தனர். அதனை முல்லைத் தீவு தபாலக அணியினுடைய பின் கள வீரர்கள் தடுத்தனர்.

ஆட்டம் இடைவேளைக் காக இடைநிறுத்தப்பட்டபோது முல்லைத்தீவு தபாலக அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட ஆட்டம் இரண் டாம்பாதி ஆட்டத்துக்காக ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் மேலும் கோல் களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு களம் இறங்கிக் கொண்டனர். இதனால் இரண்டாம்பாதி ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இரண்டு அணியினரும் தமக்குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டனர்.

இதனால் ஆட்ட முடிவில் முல்லைத்தீவு தபாலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

# விளையாட்டுத்துறையை மேம்படுத்த தெரிவான ஆசிரியருக்குப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

இலங்கையின் பாடசாலை களுக்கு இடையே விளை யாட்டுத் துறையை மேம்படுத் தும் முகமாக ஜனாதிபதியால் மஹிந்த சிந்தனைத் திட்டத் தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆறு விளையாட்டுக்களை மேம் படுத்தும் நோக்கில் கல்வி வலய ரீதியாக உடற்கல்வி ஆசிரியர்கள் வட மாகாண கல் வித் திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங் கப்பட்டன.

இந்த வகையில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் ஆறு விளையாட்டுக் களுக்குமாக தெரிவு செய்யப்பட்ட உடற் கல்வி ஆசிரியர்களின் விவரங் கள் வருமாறு:

றக்பி - வவுனியா கோவில் குஞ்சுக்களம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.காந்தரூபன்.

உதைபந்தாட்டம் - வுவ னியா தாரணிக்குளம் கணேஸ் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ் முகுந்தன்.

ஜிம்னாஸ்ரிக் - வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியால யத்தைச் சேர்ந்த டபிள்யூ. ஜெயநேசன்.

கரப்பந்தாட்டம் - வவு னியா புதுக்குளம் மகாவித்தியால யத்தைச் சேர்ந்த ஆர். இராஜ காந்தன்.

வலைப்பந்தாட்டம் - வவு னியா தவசியகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யைச் சேர்ந்த கே.செந்தில் குமரன்.

மெய்வன்மை - வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி யைச் சேர்ந்த ஜே.சுதாத்தரன்

இவர்கள் வலய மட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்க ளுக்கு உரிய பயிற்சிகளை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட விளையாட்டுத் துறையில் தற்போதைய நிலை யிலும் பார்க்க முன்னேற் றத்தை ஏற்படுத்தும் முகமான நடவடிக்கைகளை எதிர்காலத் தில் மேற்கொள்ள வேண்டி யது அவசியம் என்றும் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.(ம-86)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை அழைக் கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான ஐந்து பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட இளவாலை ஹென்றியரசர் அணியினர். (23)

# முல்லை.அரச அதிபர் கிண்ண கிரிக்கெட் ;சுகாதாரத் திணைக்கள அணி சம்பியன்

முல்லைத்தீவு அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சுகாதாரத் திணைக் கள அணி வெற்றி பெற்றுச் சம் பியனானது.

கடந்த புதன்கிழமை முல் லைத்தீவு வித்தியானந்தக் கல் லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத் தீவு சுகாதார திணைக்கள அணியை எதிர்த்து முல்லைத் தீவு வீதி அபிவிருத்தித் திணைக்கள அணி மோதிக் கொண்டது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றி கொண்ட முல்லைத் தீவு சுகாதாரத் திணைக்கள அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய முல்லைத்தீவு சுகாதாரத் திணைக்கள அணியி னர் பத்து ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சசி 56, கஜன் 23 ஓட்டங் களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி திணைக்கள அணி சார்பாக கோபி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய முல் லைத்தீவு வீதி அபிவிருத்தித் திணைக் கள அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களை மட் டும் பெற்னர்.

இதில் ஆனந்தராஜா 15 ஓட் டங்களையும் செல்வன் 13 ஓட் டங்களையும் தமது அணி சார் பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் முல்லைத்தீவு சுகாதாரத் திணைக்கள அணி சார்பாக சசி, சந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த் தினர்.

(ம-23)

# பொன்னம்பலம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ்

வலிவடக்கு, டிசெ. 12

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி விளையாட்டு அவை அழைக்கப்பட்ட யாழ். மாவட்டப் பாடசாலை அணி களுக்கு இடையே முதல் தட வையாக நடைபெற்ற பொன் னம்பலம் வெற்றிக் கிண்ணத் துக்காக நடத்தப்பட்ட உதை பந்தாட்டப் போட்டியில் ஊர் காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.





கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை மத்திய கல் லூரியும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கடுமை யாக கோதிக்கொண்ட போதி லும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பி யன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

போட்டி ஆரம்பமாகியதும் முதலாவது கோலை அன்ரனீஸ் கல்லூரியைச் சேர்ந்த யஸ்ரின் பெற்றுக் கொண்டதும் இரு அணிகளும் புது வேகத்துடன் விளையாடத் தொடங்கின.

இந்த நிலையில் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி தொடர்ந்து இரண்டு கோல் களைப் பெற்றது. இதில் சிந்து ஜன், வசிபன் ஆகிய இருவரும் இவ்தக் கோல்களைப் பெற்றுக் கொண்ட நிலையில் மீண்டும் ஒரு கோலை சென். அன்ரனிஸ் கல்லூரியைச் சேர்ந்த யஸ்ரின் பெற்றுக் கொண்டார். இந்த நிலையில் முதல் பாதி ஆட்டம் சமநிலையில் முடி வடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத் தில் இரண்டு அணிகளும் கோல்கள் பெற்று வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றுவோம் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக்கொண்ட போதிலும் வெற்றி வாயப்பு சென். அன்ர னிஸ் கல்லூரிக்கு சாதகமாக அமைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத் தில் மீண்டும் முதலாவது கோலை சென். அன்ரனிஸ் கல்லூரி வீரன் பேட்னியன் பெற்றுக் கொள்ள தொடர்ந்து யஸ்ரினும் பெற்றுக் கொண்டார்.

வட்டுக்கோட்டை யாழப் பாணக் கல்லூரி எடுத்த முயற் சிகள் வெற்றியளிக்காத நிலை யில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் யஸ்ரின் இரண்டு கோல்களையும் பேட்னியன் இரண்டு கோல்களையும் பெற்று முன்னிலையில் நின்ற வேளை யில் ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத் தில் மேலும் நான்கு கோல் களை சென். அன்ரனிஸ் கல் லூரி பெற்றுக் கொண்ட நிலை யில் ஆட்டம் நிறைவு பெற்றது. ஆட்ட நிறைவில் சென். அன்ர னிஸ் கல்லூரி 6:2 கோல்கள் என்ற அடிப்படையில் வடடுக் கோட்டை மத்திய கல்லூரியை வெற்றி பெற்று பொன்னம் பலம் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.


இப் போட்டியானது அமரர் செல்லையா வெற்றிக் கிண ணப் போட்டிகளில் கலந்து கொண்டு காலிறுதி ஆட்டத் தில் வெளியேறிய அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

(ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுந்தது ஆஸி.

**ஆஸி-நியூஸி அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறும் நிலையில் உள்ளது. ஆஸ்திரேலிய அணி 169 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் கைவசம் 10 இலக்குகளுடன் துடுப்பெடுத்தாடி வருகின்றது.**


ஹக்கெஸ்


வோர்னர்



ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து நியூஸிலாந்து அணி விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்று முன்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஹோபர்டில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து முதலாவது இன்னிங்ஸில் 150 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. நியூஸி. சார்பில் அதிகபட்சமாக பிரெளன்லி 56 ஓட்டங்களைக் பெற்றார். பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பில் பர்ரின்சன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சகல இலக்குகளையும் இழந்து 136 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக சிடில் 36 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் நியூஸி. சார்பில் மார்டின், பிறக்வெல், பௌல்ர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

14 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர நிறைவில் 3 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் அணித்தலைவர் ரெயிலர் 42, வில்லியம்சன் 34 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானதும் மேலதிக ஓட்டமெதனையும் பெறாத நிலையில் சிடிலின் பந்து வீச்சில் வில்லியம்சன் 34 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து இணைந்த பிரெளன்லி, ரெயிலர் ஜோடி நிதான ஆட்டத்தை தொடர்ந்தது. சிறப்பாக ஆடிய ரெயிலர் தனது 15 ஆவது அரைச்சதத்தை கடந்தார். ரெயிலர் 56 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க நியூஸிலாந்தின் ஐந்தாவது இலக்கு 171 ஓட்டத்தைப் பெற்ற நிலையில் வீழ்த்தப்பட்டது. அதன் பின்னர் நியூஸிலாந்தின் சரிவு ஆரம்பமானது. பிரெளன்லி 21, சவுத் தீ 13, பௌல்ர் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூஸிலாந்தின் இரண்டாவது இன்னிங்ஸ் 226 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பந்து வீச்சில் சிடில், பர்ரின்சன், லியோன் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 241 ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. ஆஸியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகப் பிலிப் ஹக்கெஸ், டேவிட் வோர்னர் களமிறங்கினர். நியூஸிலாந்தின் சவாலான பந்து வீச்சை இலகுவாக எதிர்த்தாடிய இந்த ஜோடி முதலாவது இலக்குக்காக பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 72 ஓட்டங்களைப் பகிர்ந்தது. ஹக்கெஸ் 20, வோர்னர் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும். (15)

### சபாநாயகர் வெற்றிக் கிண்ணம்

# தட்டிச் சென்றது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி

'சபாநாயகர் வெற்றிக்கிண்ணத்துக்கான 'இருபது-20' மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில், அமைச்சர்கள் அணியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி வெற்றி கொண்டது.





இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களைச் சேர்த்தது

பின்னர், 177 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய அமைச்சர்கள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 105 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி, 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சபா நாயகர் வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது.

ஆட்டநாயகனாக அமைச்சர்கள் அணியில் இடம்பெற்றிருந்த டலஸ் அழகப்பெரும தெரிவு செய்யப்பட்டார். இந்தப் போட்டியில் சுசில் பிரேமஜயந்த தலைமையில் அமைச்சர்கள் அணியும், சனத் ஜெய சூரிய தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணியும் களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போராடித் தோற்றது மேற்கிந்தியத் தீவுகள்

**பொலாட் அதிரடியாக ஆடி இந்திய அணிக்கு நெருக்கடி கொடுத்த போதும் ஏனைய வீரர்கள் சோபிக்காததால் மேற்கிந்தியத்தீவுகள் அணி 34 ஓட்டங்களால் இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவியது. நேற்றைய இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் 4 - 1 என்ற கணக்கில் தொடரை இந்தியா கைப்பற்றியது.**

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் மேற்கிந்தியத்தீவுகள், அணி 5 ஆட்டங்கள் கொண்ட சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் பங்கேற்கின்றது. இதில் முதலில் இடம்பெற்ற 4 ஒரு நாள் ஆட்டங்களில் 3 ஆட்டங்களில் இந்திய அணி வெற்றி பெற்று கிண்ணத்தை வெற்றி கொண்ட நிலையில் இறுதி ஒரு நாள் ஆட்டம் சென்னையில் நேற்று நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் தலைவர் கம்பீர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இந்திய அணி முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே அடுத்தடுத்து ரஹானே, பார்த்திவ் பட்டேல் இருவரையும் இழந்தபோதும் மனோஜ் திவாரி, கம்பீரது இணைப்பின் மூலம் சிறப்பான ஆரம்பத்தை பெற்றது.


பொலாட்

மூன்றாவது இலக்குக்காக 83 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் கம்பீர் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன் பின்னர் இணைந்த திவாரி, ஹோக்லி ஜோடி சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. அசத்தலாக விளையாடி திவாரி ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில் தனது முதலாவது சதத்தை கடந்தார். நான்காவது இலக்குக்காக 117 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் திவாரி 104 ஓட்டங்களுடன் காயம் காரணமாக வெளியேறினார்.

ஹோக்லி 80, ரோகித் சர்மா 21 ஓட்டங்களுடனும் இரண்டு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் விளையாட அழைக்கப்பட்ட இப்ர்ரான் பதான் 6 ஓட்டங்களும் ஆட்டமிழந்தனர். ரெய்னா ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க இந்தியா 267 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ளோச், மாட்டீன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது பந்திலேயே சிம்மொன்ஸை இழந்தது. பதான் முதலாவது பந்திலேயே அசத்தி அந்த இலக்கினை வீழ்த்தினார். தொடர்ந்து பவல் 15, சாமுவேல்ஸ் 6, மொஹமட் 2, ராம்டீன் 14 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப 15.5 பந்து பரிமாற்றங்களில் 78 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த பொலாட், ருஷெல் ஜோடி இந்தியாவின் பந்து வீச்சை வெளுத்துக்கட்டத் தொடங்கியது. பொலாட்டின் மூர்கத்தனமான அதிரடியில் அடிக்கடி ஆறு ஓட்டங்கள் பறந்தன. பொலாட்டுக்கு சற்றும் சளைக்காமல் ருஷெலும் விளாச மேற்கிந்தியத்தீவுகளின் ஓட்ட வேகம் கிடுகிடுவென உயர்ந்தது. அதிரடியாக ஆடிய பொலாட் 43 பந்துகளில் தனது 5 ஆவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி 155 பந்துகளில் 150 ஓட்டங்களைத் தொட்டது. மறுமுனையில் சிறப்பாக ஆடிய ருஷெல் 37 பந்துகளில் தனது இரண்டாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த அதிரடியான இணைப்பாட்டத்தை 89 ஓட்டங்களில் பிரித்தார் கம்பீர். ருஷெரை 'ரன் அவுட்டில்' கம்பீர் வெளியேற்ற மேற்கிந்தியத்தீவுகள் 29 பந்து பரிமாற்றங்களில் 167 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. ருஷெல் 42 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த சமி 3, நரேன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினர். மறுமுனையில் பொலாட் அடித்தாடி அணியை 200 ஓட்டங்களைக் தாண்ட வைத்தார். அதிரடியாக ஆடிய பொலாட் 98 பந்துகளில் தனது முதலாவது சர்வதேச சதத்தை கடந்தார்.

இறுதி வரை அதிரடியாக ஆடி போராடிய பொலாட் 119 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 44.1 பந்து பரிமாற்றங்களில் 233 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பொலாட் 110 பந்துகளில் 10 ஆறு ஓட்டங்கள் 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாகவே 119 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் ஜடேஜா 3, பதான், மிதுன் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா இலட்சுமி

கெற்பேலி மேற்கைச் சேர்ந்த கந்தையா இலட்சுமி நேற்று (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும், நாகேந்திரன் (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்), ஆறுமுகம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), பராசக்தி, காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (தபாலதிபர்), மகேஸ்வரி, தங்கராசா, இராசலிங்கம் (ஆசிரியர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், கமலராணி, காலஞ்சென்ற சந்திரசேகரம், மற்றும் அனித்தா (ஆசிரியர், யாழ். நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), கமலநாயகி, இரட்ணேஸ்வரி (காணிப்பதிவகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், கமலேந்திரன், விமலேந்திரன் (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), சுகுணேந்திரன் (சங்கீத் களஞ்சியம், மானிப்பாய்), சசிகுமார், காயத்திரி, சுகிதா, செந்தூரன் (பொலிஸ் உத்தியோகத்தர்), கேதீஸ்வரி (மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), சிவபாலன் -விநோதினி (ஆசிரியை, உசன் இராமநாதன் ம.வி), அமுதினி, தட்சாயினி, முகுந்தன், அனுசாந், மதுராங்கி, விதுசாந், துவாரகி, தரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சங்கீத், கஜீகரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கெற்பேலி மேற்கு, மிருசுவில். குடும்பத்தினர்.

## முத்து சுந்தரி



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து சுந்தரி 11.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன்- வள்ளியம்மை தம்பதியரின் புதல்வியும், முத்துவின் மனைவியும், பாலசுப்பிரமணியம் (முன்னாள் ஊழியர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்) அன்புத் தாயும், இராஜேஸ்வரியின் மாமியும், பிரபாகரன், கமலன், கார்த்திகா- மயூரன், பேசிலின் (ராஜன்), சுமணன் ஆகியோரின் பேர்த்தியும், ஹரிசனாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
15/10, செபஸ்ரியார் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
மு.பாலசுப்பிரமணியம்(மகன்) யாழ். பெரியகடை மரக்கறி வியாபாரி.

## துரையப்பா ஸ்ரீதுரைராஜ்



சுழிபுரம் கிழக்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிற்சர்லாந்தை (பாசல்) வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஸ்ரீதுரைராஜ் கடந்த 10.12.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா (பிரபல வர்த்தகர், நுவரேலியா) மற்றும் தெய்வராணி தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், திருமகளின் அன்புக் கணவரும், விபுசனின் அன்புத் தந்தையும், ஸ்ரீஈஸராஜ் (ஈசன்), ஸ்ரீதங்கபாமா (பாமா), ஸ்ரீதிருக்கேதீஸ்வரராஜ் (செல்வகுமார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்சர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரன்
ஸ்ரீதிருக்கேதீஸ்வரராஜ் (செல்வகுமார்).
பெருமாள் கடவை வீதி, அளவெட்டி.

## சாமிநாதர் தனரத்தினம்



மாரீசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாமிநாதர் தனரத்தினம் (10.12.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமிநாதர்-தங்கமணி தம்பதியரின் அன்பு மகனும், கோமளவாசகத்தின் அன்புக் கணவரும், கந்தசாமி-தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், கற்பகா, கஜேந்திரன் (UK), நிஜேந்திரன், பிலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிதுராவின் அன்புப் பேரனும், ...ஸ்வதி, சிவசுப்பிரமணியம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரவணமுத்து, தெய்வநாயகி, மனோகரன், நடராசா, ராசமலர், கோவிந்தராஜன், கோணேஸ்வரி, வரதராஜன், வதனர், தருமராசன், சசிரேகா, தருமதாஸ், சுதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் மாரீசன்கூடல், பாதகர்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்தச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மாரீசன் கூடல், இளவாலை. குடும்பத்தினர்.

## தலைமைப் பதவிக்கு....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையைக் கண்டித்து ஐ.தே. கவின் மொனராகல உறுப்பினர் றஞ்சித் மத்தும பண்டார கடும் தொனியில் கருத்துவெளியிட்டிருக்கிறார்.

அமரதுங்க அரசுக்காக பேசுகிறாரா? அல்லது ஐ.தே.கவுக்காக பேசுகிறாரா?வென்று தெரியவில்லை என்கிறார் அவர்.

கடந்த வருடத்தில் தான் அவர் கூறியிருந்தார் தமது ஆதரவாளர்கள் அரசுடன் இணைந்துகொள்ளும்படி கூறுகிறார்கள் என்று அவருக்கு இப்போது அப்படி கூறுபவைகளை வெளியிடுவதற்கு தார்மிக உரிமைகிடையாது. அவர்களின் கருத்துகளுக்கெல்லாம் அதிக பிரசாரம் வழங்கியவை அரச ஊடகங்கள்தான். இதற்கெல்லாம் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று தெரியவில்லை என்றார் அவர். அமரதுங்க தனது ஒரு காலை அரசு பக்கமும் மறு காலை ஐ.தே.க பக்கமும் வைத்துக்கொண்டி கிறார் என்றார் அவர்.

ஆரம்பத்தில் சஜித் பிரேம தாசாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிட முற்பட்டமை மூலம் ஜயசூரியா தவறிழைத்துவிட்டார். அது ஒரு பக்கம். இன்னொன்று விக்கிரமசிங்க தம் சார்பில் நாடாளுமன்றில் பிரதிநிதித்துவம் செய்யும் உரிமையை ஜயசூரியாவுக்கு வழங்க மறுத்துவிட்டமை. இது தான் இப்போது ஐ.தே.கட்சிக்குள் வெளிப்படையாக நடக்கத் தொடங்கியுள்ள குத்து வெட்டுகளுக்குக் காரணம்.

விக்கிரமசிங்க கட்சியின் செயற்குழுவிலும்நாடாளுமன்றக் குழுவிலும் பெரும் பான்மை உறுப்பினர்களின் ஆதரவை பெற்றிருக்கிறார் என்று கட்சி உறுப்பினர்கள் கூறுகிறார்கள். எனவே கட்சித் தேர்தல் ஒன்று நடைபெற்றால் அவரே வெற்றி பெறுவார் என்கிறார்கள் அவர்கள். அது நடைபெறுமானால் ஜயசூரியவின் அரசியல் எதிர்காலம், ஏதும் புதிய அணுகு முறை ஏற்பட்டாலன்றி சூனியமாகி விடும் என்பது திண்ணம். ஜயசூரிய வெற்றிபெறுவாரானால் பிரேமதாசா குழுவினருடன் இணங்கிப் போவது என்பது பெரும் காரியமாகவிருக்கும் பிரேமதாசா ஐ.தே.கவின் அடுத்த தலைமைப் பதவியில் கண்வைத்துக் கொண்டிருப்பவர். அவரும் அவரது ஆதரவாளர்களும் தங்களுக்கென்ற தனிதிட்டத் துடன் செயற்பட்டுவருபவர்கள். கட்சியை எப்படி நடத்து வதுயாருக்கு பதவிபோக வேண்டும் என்பதில் கருத்தாக இருப்பவர்கள்.

இந்த சூழ்நிலையில் ஐ.தே. க. நாட்டின் மிக பிரதான எதிர்க் கட்சியாக எவ்வாறு நிலைத்து நிற்கப் போகிறது என்பது ஒரு பெரிய கேள்வியாக உள்ளது.✱

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் தே.திருமுருகராஜன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**பொன்னம்பலம் தேவராஜா**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/கண்ணகி அம்மன் வித்தியாலயம், தட்டுவன் கொட்டி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நாகேந்திரம் (நாகையா)

*(உரிமையாளர்-சுசிலா ஸ்ரோர்ஸ், சாவல்கட்டு)*



சாவல்கட்டு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகேந்திரம் நேற்று (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்-பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாவின் பாசமிகு கணவரும், நங்கேஸ்வரன், விக்கினேஸ்வரன், பரமேஸ்வரன் (இந்தியா), சுதேஸ்வரன், சுபிதா, விவிதா, கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.

**IIS இன் வாழ்த்துக்கள்**

**2011 O/L** பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவருக்கும் **IIS** தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

**பணிப்பெண் தேவை**

நகரின் மத்தியில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து அல்லது வந்து போய் வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு:
S. Dishanthan 0779688006

**கல்வி நிறுவன தளபாடங்கள் விற்பனைக்கு**

கணினிக் கல்வி நிறுவனத்திற்குரிய பாவித்த கணினி மேசைகள், விரிவுரை மண்டபக் கதிரைகள், அலுவலகத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: S. Dishanthan 0779688006

# மரண அறிவித்தல்

## இராசதுரை சுகுமார் (பாபு)



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், அல்லாரை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை சுகுமார் (பாபு) (10.12.2011) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராசதுரை (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் கணேசம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான குலசேகரம்-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், ரதீஸ் (சிலாபம்), தனுஷா (குடும்பநல உத்தியோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுணலிங்கம் (ஆசிரியர்-வவுனியா), மோகன்குமார் (லண்டன்), அருட்குமார் (கண்ணன்-லண்டன்), சுகன்யா (பேபி), சுசிகலா (ஜேர்மனி), இளந்திரை (ஆசிரியை-யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகாம்பிகை (பாமா), கலாநிதி (லண்டன்), சாந்தி (லண்டன்), அருளம்பலம் (ஓய்வுபெற்ற நூலகர்), யோகமூர்த்தி (ஜேர்மனி), புஸ்பராசா (அதிபர்-யா/கல்வியங்காடு காசிப்பிள்ளை வித்தியாலயம்), அரசநாதன் (ஓய்வுபெற்ற முகாமையாளர்-யா/கட்டடப்பொருள் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லாரை, கொற்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அல்லாரை வடக்கு, மீசாலை. மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கு இணைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரம்புக்வெல அண்மையில் தெரிவித்திருந்தார்.

வடக்கு, கிழக்கு இணைப்பு, பொலிஸ் - காணி அதிகாரங்கள் இன்றி அரசியல் தீர்வுப்பொதி முழுமை பெறாது என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், சர்ச்சைக்குரியவை என அரச தரப்பினரால் கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கருத்துக் கேட்டபோதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து நாட்டில் தற்போது சாந்தியும், சமாதானமும் ஏற்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச கருமங்களை தமிழ்மொழிமூலம் ஆற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளையும் தமிழில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துரித கதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.சிற்சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வாறான பிரச்சினைகளைப் போக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

புலிகள்தான் வலுக்கட்டாயமாக மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை தம்வசப்படுத்தியிருந்தனர். ஆனால், நாட்டில் தற்போது யுத்தம் இல்லையே.

இருந்தபோதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிசீலிக்கும்.காணி விவகாரத்தில் மத்திய அரசுக்கு கட்டாயம் அதிகாரம் வேண்டும். அதனை ஒரேயடியாக விட்டுக்கொடுக்க முடியாது. இணைப்பு ஆணைக்குழு ஒன்று அமைத்து அதன் மூலமே காணி விவகார நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இது விடயம் தொடர்பாக ஆராயப்படும். அர்ப்பணிப்புடன் பேசுவதன்மூலம் நாம் எமக்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

அதேபோன்று சிறிய அதிகாரங்களுடன் பொலிஸ் அதிகாரம் வழங்குவது குறித்தும் தெரிவுக்குழுவால் பரிசீலிக்கப்படும். ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு குறித்து ஒருபோதும் பேசமுடியாது. அதற்கு இங்கு இடமும் இல்லை - என்றார். (ஒ-சி)

## சிங்களத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்டு உருவாக்கப்பட்ட 'சமாதானத்துக்கான நண்பர்கள்' (Friends of Peace) என்ற இசைக்குழுவே பாடல்களைப் பாடியது.

'சமாதானத்துக்கான நண்பர்கள்' என்ற பெயர் பொறிக்கப்பட்ட சிவப்பு நிற ரீசேட்டையும், கறுப்பு நிற ஜீன்சையும் அவர்கள் அணிந்திருந்தனர்.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சரினால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சிங்கள மொழிப் பாடல்களே போராளிகளினால் பாடிக் காண்பிக்கப்பட்டன.நேற்றைதினம் விடுவிப்பதற்காக அழைத்துவரப்பட்ட முன்னாள் போராளிகள் 'சமாதானத்துக்கான நண்பர்கள்' என ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்ட வெள்ளை நிற ரிசேட்டுடன் நிகழ்வில் கலந்துகொண்டனர். (உ-14)

## இலங்கைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் தமிழக மீனவர்களைத் தாக்கியுள்ளது இலங்கைக் கடற்படை.

இராமேஸ்வரத்திலிருந்து 702 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். கச்சதீவு அருகே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படை அங்கு வந்தது. தமிழக மீனவர்களை மறித்த அவர்கள், ஒரு படகில் ஏறி அதில் இருந்த ஐந்து மீனவர்களையும் தாக்கினர்.பின்னர் மீனவர்களின் வலைகள், ஜி.பி.எஸ். கருவி உள்ளிட்டவற்றை கைப்பற்றிச் சேதப்படுத்திய இலங்கைக் கடற்படையினர், பின்னர் படகையும் சேதப்படுத்தி விட்டுச் சென்றனர். (ஒ-சி)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்று குறிப்பிட்ட அமைச்சர் இன்னமும் 800 பேர் விடுவிக்கப்பட வேண்டி உள்ளனர் என்றும் கூறினார்.

''முன்னாள் போராளிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் வேறுபடுத்திப் பார்த்தது கிடையாது. விளையாட்டு, கல்வி, கலை, கலாசாரம் ஆகிய துறைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகிறோம். தெரிவுகளை மேற்கொண்டு தேசிய ரீதியான விளையாட்டு அணிக்கு இவர்களை உள்வாங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும் முன்னாள் போராளிகள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுள் கடந்த ஒரு வருடத்தில் ஆயிரம் பயனாளிகளுக்கு 160 மில்லியன் ரூபா சுயதொழில் கடன் வழங்கி இருக்கிறோம். முன்னாள் போராளிகள் 200 பேரும் இதில் நன்மையடைந்துள்ளனர்'' என்று அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார்.

நிகழ்வில் புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி சந்தனராஜா குரு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் சமரசிங்க, அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க, அரசு கட்சி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் தலைவருமான மு.சந்திரகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். (உ-14)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடி புதிய செயற்குழு உறுப்பினர்களைத்

தெரிவுசெய்யும் என்றும் புதிய செயற்குழு இம்மாதம் 18ஆம் திகதி கட்சியின் புதிய தலைவரை நியமிக்கும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான உறுப்பினர்களை அதிக எண்ணிக்கையில் செயற்குழு உறுப்பினர்களாக நியமித்து அதனூடாக மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை தலைவராக்கும் நோக்கிலேயே இப்புதிய செயற்குழு நியமிக்கப்படுகின்றது என்று சஜித் பிரேமதாஸ தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள திஸ்ஸ அத்தநாயக்க, கட்சியின் யாப்பின் படியே அனைத்து விடயங்களும் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் இவற்றுள் யாருடைய செல்வாக்கும் பயன்படுத்தப்படவில்லை என்றும் கூறினார்.

இதுதொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறியவை வருமாறு:-

கட்சியின் தலைவரை நியமிப்பது செயற்குழுவேயன்றி வேறுஎவரும்இல்லை. கட்சியின் புதிய யாப்பின்படி திங்கட்கிழமை கட்சியின் ஆலோசனைக்குழு கூடி புதிய செயற்குழுவை அமைக்கும். திங்கட்கிழமையே அந்தச்செயற்பாடு இறுதி செய்யப்படும்.

புதிய செயற்குழு இணக்கப்பாட்டின் அடிப்படையில் தலைவரைத் தெரிவு செய்யும். இணக்கப்பாடு எட்டப்படாதபட்சத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அந்தவகையில் தலைவர், இரண்டு பிரதித் தலைவர்கள், தவிசாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் ஆகியோரும் நியமிக்கப்படுவர். டிசெம்பர் 18ஆம் திகதி இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ஒ-சி)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலநாதன், பொன்.செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து உதயனுக்கு சுரேஷ் கூறியவை வருமாறு -

வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைமைகள், இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களக் குடியேற்றம் உட்பட தமிழர்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் இதன்போது நாம் எடுத்துரைத்தோம்.நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, அரசியல் தீர்வு விவகாரம் ஆகிய விடயங்கள் குறித்தும் பேசினோம் - என்றார்.

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்பரிசீலனை செய்யத் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் மத்திய அரசுக்கும், மாகாணசபைக்கும் சம அதிகாரம்கொண்ட கூட்டு ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கும், அதனூடாகக் காணி விவகாரங்களைக் கையாள்வதற்கும் அரசு தீர்மானித்துள்ளது. (ஒ-சி)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர் நீதி மன்றத்தில் 12,13,14 ஆம் திகதிகளில் நடைபெறும் சத்தியப்பிரமாண வைபவத்தில், சட்டத்தரணிகளாக சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளும் யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறையின் 1ஆம் அணி மாணவர்களுக்கு சட்ட மாணவர்கள் சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றோம்.




- சட்ட மாணவர்கள் சங்கம், யாழ். பல்கலைக்கழகம்.



# கண்ணீர் அஞ்சலி



கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்

**வே. சிவநேசன்**

அவர்களின் பாசமிகு தந்தை

## அருணாசலம் வேலுப்பிள்ளை

அவர்கள் (09.12.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு ஆறாத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி... சாந்தி...சாந்தி...

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை, கிளிநொச்சி.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
கண்டாவளை.



# மரண அறிவித்தல்கள்

## சுந்தரலிங்கம் பாக்கியலட்சுமி



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டசுந்தரலிங்கம் பாக்கியலட்சுமி நேற்று (11.12.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் குமுதினி, சுயந்தினி, இந்திரகுமார், இராஜினி(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் குஞ்சவெளி திருமலை) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், அன்னலிங்கம், தருமலிங்கம், மற்றும் சுந்தரலிங்கம், இரஞ்சிதராணி சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.12.2011) பி.ப 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.526, நாவலர் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆறுமுகம் சின்னப்பா

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும், 56,குமரபுரம் பரந்தனை வசிப்பிடமாகவும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கிளிநொச்சியின் முன்னாள் ஊழியருமான ஆறுமுகம் சின்னப்பா நேற்று (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் ஆறுமுகம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்லப்பா-கந்தசாமி தம்பதியரின் மருமகனும் சிவானந்த சோதியின் அன்புக் கணவரும் தாரணி(லண்டன்), பூங்கோதை(அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலகிருஸ்ணன்(லண்டன்), பிரகலாதன்(அமெரிக்கா), ஆகியோரின் அன்பு மாமனும் பிரணவனின் பேரனும் சுப்பிரமணியம் தம்பதிகள்(நோர்வே), சோமசேகரப்பிள்ளை-செல்வராணி தம்பதியர் (திருநகர்), சம்பந்தியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி(கைதடி) மற்றும் செல்வராணி(கைதடி), அசிலேஸ்வரி(கைதடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைகுந்தநாதன்(சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, முல்லைத்தீவு), அருள்சோதி(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரந்தன் கோரக்கன்கட்டு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56,குமரபுரம்,
பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்குடாவில் நலத் திட்டங்கள் அரசால் மக்களிடம் ஒப்படைப்பு

பள்ளிக்குடா, டிசெ.12

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் பூநகரி பள்ளிக்குடாக் கிராமம் 'புனர்வாழ்வு நட்புறவுச் சூழல் கிராமமாக' தெரிவுசெய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சமூக நலத் திட்டங்கள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திட்டங்களை மக்களிடம் கையளித்தார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் 240 பேர் உயர்தரப் பரீட்சை எழுதியுள்ளனர் என்றும் அவர்களில் 47 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அங்கு உரையாற்றிய அமைச்சர் தெரிவித்தார்.

பள்ளிக்குடாவில் புனரமைக்கப்பட்ட குளம், இந்துக் கோயில் பொதுமண்டபம் என்பன அமைச்சரால் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. வீட்டு மானியத் திட்டம், சுயதொழில் கடன் திட்டம், கடல் தொழிலாளருக்கான கடன் திட்டம் என்பன பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. இவை அனைத்தும் சுமார் 61 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

இந்த நிகழ்வில் அமைச்சின் உயர் அதிகாரிகள், புனர்வாழ்வு அதிகார சபை உயரதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். (உ-14)

## கட்டார் பிரதமர் இலங்கை விஜயம்

கட்டார் பிரதமர் தலைமையிலான குழுவினர் இன்று கொழும்பு வருகின்றனர்.

இந்தக் குழுவினர் இரண்டு நாள்கள் தங்கியிருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் உள்ளிட்ட பலரை சந்திக்கவுள்ளார்.

கட்டார் மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையே காணப்படும் சகோதரத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலே இந்த விஜயம் அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-323)

# சரியா...? தவறா...?

பள்ளிக்குடா, டிசெ.12

முன்னாள் போராளிகளை நாடாளுமன்றத்துக்குள் கூட்டிச் சென்றது சரியானது தானே என்று அமைச்சர் கஜதீர கேட்ட கேள்விக்கு பெரும்பாலான மக்கள் கைகளைத் தூக்க மறுத்த சம்பவம் நேற்று பள்ளிக்குடாவில் நடந்தது.

மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கையளிக்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்புத் துணை அமைச்சர் சந்திரசிறி கஜதீர பள்ளிக்குடா வந்திருந்தார். நிகழ்வில் உரையாற்றுகையில் 104 பெண் போராளிகளின் நாடாளுமன்றப் பயணம் குறித்து அவர் குறிப்பிட்டார்.

பெண் போராளிகள் நாடாளுமன்றுக்குக் காட்சிப் பொருளாக அழைத்துச் செல்லப்பட்டதாகக் கடுமையான விமர்சனம் முன்வைக்கப்பட்டது என்று அமைச்சர் கவலைப்பட்டார். பின்னர் மக்களைப் பார்த்து ''நீங்கள் சொல்லுங்கள் முன்னாள் போராளிகளை நாடாளுமன்றம் அழைத்துச் சென்றது சரியா? தவறா?'' என்று கேள்வி எழுப்பினார் அமைச்சர்.

சரி! என்று நினைப்பவர்கள் கைகளைத் தூக்குங்கள் என்று அமைச்சர் விடுத்த அழைப்புக்கு பொதுமக்களிடம் இருந்து மௌனம் மட்டுமே பதிலாகக் கிடைத்தது? மீண்டும் வற்புறுத்தினார் அமைச்சர். அப்போது சுமார் 30 பேர் வரையில் அமைச்சருக்கு ஆதரவாகக் கைகளைத் தூக்கினர். அரங்கில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்தனர்.

மக்களின் பதிலைக் கண்ட அமைச்சர் சிறிது நேரம் திகைத்து நின்றார். பின்னர் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு தனது பேச்சைத் தொடர்ந்தார்.

''நாடாளுமன்றத்துக்குள் செல்வது என்பது பாக்கியம். அது எல்லோருக்கும் கிடைக்காது. அப்படியிருக்க முன்னாள் போராளிகளை நாம் அங்கு அழைத்துச் சென்றது தொடர்பாகச் சிலர் குறை கூறுகின்றனர்'' என்று அமைச்சர் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை 104 பெண் போராளிகளை நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் சென்ற அரசு, அவர்களுக்கு வெள்ளை 'பெனியன்'களை அணிவித்து பார்வையாளர் பகுதியில் அமர வைத்திருந்தது. இதைக் கண்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா, ''முன்னாள் போராளிகள் என்ன காட்சிப் பொருள்களா? எங்கள் சகோதரிகளை ஏன் இப்படிக் கேவலப்படுத்துகிறீர்கள்? நீங்களும் மனிதர்கள் தானே!'' என்று சீறிப்பாய்ந்திருந்தார். (உ-14)

N.E.W
ஆனைப்பந்தி விடுமுறை வகுப்புக்கள்
CHEMISTRY
வாயுக்கள்:- 1.30-2.30
வெப்ப இயக்கவியல்:- 2.30-4.00
திங்கள்-வெள்ளி
ஆரம்பம்:-12.12-2011
திங்கள்
N.Vakeesan B.Sc
[ Theory+ (pass+model) paper ]

# பிரான்ஸ் ஆதரவாளர் சந்திரிக்கா

## விக்கிலீக்ஸ் தகவல்

கொழும்பு, டிசெ. 12

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, பிரான்ஸ் ஆதரவாளராகத் திகழ்ந்தார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம், அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு 2003 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும் சந்திரிகா, அமெரிக்காவிற்கு எதிரான கொள்கைகளைப் பின்பற்றவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுடன் பேணியளவிற்கு சந்திரிகா மிக நெருக்கமான உறவுகளைப் பேணவில்லை என அப்போதைய தூதுவர் ஆஷ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டமைப்பில், கடும்போக்குடைய ஜே.வி.பி. கட்சி அங்கம் வகித்தமை அமெரிக்காவுடன் நெருங்கிப் பழகுவதனை தடுத்திருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் விவகாரம், காலநிலை மாற்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், வடக்கு கிழக்கு விவகாரம் போன்ற விடயங்களில் சந்திரிகாவின் நிலைப்பாடு அமெரிக்காவிற்கு முழுமையான சாதகத் தன்மையை வெளிப்படுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகாவின் பெற்றோரும் அணி சேரா நாடுகளின் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்ததனால், இவரும் முழுமையாக அமெரிக்க ஆதரவு கொள்கைகளை பின்பற்றினார் எனக் கருத முடியாது, பெற்றோரின் கொள்கைகளும் இதற்கு ஏதுவாக அமைந்திருக்கலாம் என ஆஷ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா நவமணி

புத்தூர் கிழக்கு, காளியானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா நவமணி நேற்று (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இளையதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தில்லைநாதர், அன்னலஷ்மி, இராசரத்தினம் மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், துரைராசா (லண்டன்) நவரத்தினராசா (லண்டன்), நற்குணராஜா (தாதிய உத்தியோகத்தர்-யாழ்.போதனா வைத்தியசாலை), சர்வானந்தம் (கனடா), செல்வராணி, பரமானந்தராசா, சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், செந்தில்குமாரன் (யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம்), சந்திரமலர், லீலாவதி, பூலோகராணி, பவளராணி, தவச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அந்திரானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புத்தூர் கிழக்கு. ந.நற்குணராஜா.

## பொன்னையா மகாதேவன்



கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மகாதேவன் நேற்று (11.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 12.30 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோப்பாய் மத்தி, கோப்பாய். குடும்பத்தினர்.

SK வயோதிபர் இல்லம்
அறிவியல் நகர்-கிளிநொச்சி
வயோதிபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்
2012.01.03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, கிளிநொச்சியில் SK வயோதிபர் இல்லம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வயோதிபர் இல்லத்தில் வதிவதற்கு விரும்பும் வயோதிபர்கள் 20.12.2011 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
க.இராஜேந்திரம் - 0770757434
சி.இதயராஜா - 0714419204
தா.நிகேதன் - 0778394113

MOBILE NET MCS COMPUTER SERVICES
324, Palaly Road, Jaffna
O/L,A/L BIT
ICT GIT FIT
பதிவுகள் 14th Dec 2011க்கு முன்னர் நேரில்
முதல் 20 மாணவர்கட்கு மட்டுமே அனுமதி
*90% Discount
Qualified Lectures panel
Passing Guarantee
12 Years Experience
Free5 Course fee* Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Scholarship
Supported by UNDP/JRRP

Soft View Computer Center
102, Main Street, Jaffna
Contact Us : E.C Colin
0779053545, 021 222 4885
aho; rpiwr;rhiy Kd;ghf
Brand New HP PC
Intel Pentium 2.8Mhz CPU
1GB DDR Ram
80 GB Hard disk ,Compo drive
15",17" Monitor Black LCD
Keyboard Black, Mouse Black
25,000/=
Free:-Web Camera, Head Phone
Dell Laptop 40000/= ,ID HD 160GB 6250

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
ICT Grade 10/11
6 years of experience in ICT
Grade 10:12.12.2011 at 10 & 11 am
பதிவுகளுக்கு முந்துங்கள்....
Call Us : 0776577359
MIS Open Source College
Mr R.Kumaran-B.Sc (Computing & IS)

தவறிவிட்டது
மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ரஞ்சித்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (812892703V) சாரதி அனுமதிப்பத்திரம் அதனுடன் சேர்ந்த முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் (சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு:-0779737694,0213205260
விமலா களஞ்சியம், திருநெல்வேலி.
(11529)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.